பிரிவு 1

# CBI

## குழந்தைகள் பைபிள் விசாரணை



ஆசிரியரின் புத்தகம்

அனைத்து வயதினருக்கும்

# சிபிஜ:
# குழந்தைகள் பைபிள் விசாரணை

ஞாயிறு பள்ளி

பிரிவு 1

## ஆசிரியரின் புத்தகம்

அனைத்து வயதினருக்கும் (4-15 ஆண்டுகள்)

**சி**று**வர்**கள் முக்கியமானவர்கள்

மொத்த " **சி**று**வர்**கள் முக்கியமானவர்கள் " குழுவிற்கும் நன்றி!

Chief Editor: Kristina Krauss

Creative Team: Angie Kangas, Dwight Krauss, Flor Boldo, Jennifer Sánchez Nieto, Jon Kangas, Julio Sánchez Nieto, Mike Kangas, Monserrat Duran Díaz, Rubén Darío, Suki Kangas, Verónica Toj, and Vickie Kangas.

Translation Team: Ali Atuha, Aline Xavier, Annupama Wankhede, Aroma Publications, Benjamin Gaxiola, Blessie Jetender, Blessy Jacob, Carla Mayumi, David Raju, Diana de León, Ephraim Njuguna Mirobi, Finny Jacob, Jacob Kuruvilla, Jetender Singh, Marcos Rocha, Mary Amelia Hernández, Mathew Das, Nassim Bougtaia, Paul Mwangi, Paul Septan, Rubina Rai, Sabrina Benny John, and SubtitleMe.

# சிபிஐக்கு வரவேற்கிறோம் ... “குழந்தைகள் பைபிள் விசாரணை” !!!

நீங்கள் உங்கள் தேவாலயம், பகுதி அல்லது சமூகத்திலுள்ள குழந்தைகளுக்கு மற்றுமொரு முழுவருட ஞாயிறு பள்ளி வகுப்புகள் அல்லது பைபிள் பயிற்சியை தர உதவுவதில் நாங்கள் "குழந்தைகள் முக்கியமானவர்கள்" பிரிவின்கீழ் மகிழ்ச்சிகொள்கிறோம். இந்த திட்டத்தில், உங்கள் மாணவர்கள் தங்களை சிறப்பு முகவர்கள் அல்லது துப்பறிவாளர்கள் என்று எண்ணிக்கொண்டு, ஒவ்வொரு வாரமும் ஒரு வழக்கை கொடுத்து தீர்வு செய்ய வலியுறுத்தப்படுவர். தொலைக்காட்சி நிகழ்ச்சியான "சிஎஸ்ஐ" அல்லது "குற்ற காட்சி விசாரணை" போல் உங்கள் மாணவர்களே காவல் துப்பறிவாளர்களாகவும், அறிவியல் தொழில்நுட்ப வல்லுனர்களாகவும் செயல்பட்டு பரிசோதனை மற்றும் புகைப்பட படப்பிடிப்பை ஒவ்வொரு வழக்கை கையாளும்போதும் நடத்துவர். உங்களது படைப்பாற்றல் கொண்டு உங்களது தேவாலய வகுப்பறையை அறிவியல் கூடமாகவும் மற்றும் உங்கள் ஆசிரியர்களை அறிவியல் தொழில்நுட்ப வல்லுனர்களாகவும், காவல் துப்பறிவாளர்களாகவும் உடையணியச் செய்யுங்கள்.

பல ஆண்டுகளாக நான் ஞாயிறு பள்ளியில் பயிற்றுவித்து வருவதால், போதகர்கள் அல்லது வழக்கமான தேவாலய கையாட்களின் குழந்தைகள் அனைத்து பொதுவான பைபிள் கதைகளிலும் மிகவும் பழக்கப்பட்டுவிட்டனர்.நான் நோவாவின் படகு அல்லது ஜோனா மற்றும் திமிங்கலம் போன்ற கதைகளை சொல்ல தொடங்கும்போதே, குழந்தைகள் புலம்ப தொடங்கிவிடுவர், ஏனெனில் அவர்களுக்கு இது ஏற்கனவே தெரியும்.நான் பயிற்றுவிக்கும் முறையை வேறுவிதத்தில் மாற்ற நினைப்பேன், ஆனால் அது தவிர்க்க முடியாமல் அதேபோல்தான் இருக்கும், என் மாணவர்களுக்கு சலிப்பாக இருக்கும். இந்த பிரச்சனையை மனதிற்கொண்டு, "குழந்தைகளே முக்கியமானவர்கள்" ஊழியர்கள் இந்த புது யோசனையுடன் வந்தனர், அது ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கதை சொல்ல மாட்டார்கள்! மாறாக, உங்கள் மாணவர்கள் வழக்கை கையாண்டு, உங்களிடம் அவர்கள் இந்த வாரம் என்ன கதையை கற்றுக்கொள்கிறார்களென்று சொல்லவேண்டும்! இதன் அர்த்தம், நீங்கள் உங்கள் மாணவர்கள் ஆசிரியர் புத்தகத்தை காண்பதை அனுமதிக்காமல், அல்லது குறிப்புகளுக்கு விடைகளை காணவிடாமல், அவர்களே கதையை கண்டறியவிடுவதே இதன் மிக முக்கியமான அம்சமாகும். ஒவ்வொரு வாரமும் கதையை அவர்கள் கண்டறிய ஊக்குவிக்கும்வண்ணம், அவர்களுக்கு வழங்க 5 குறிப்புகள் உங்களிடம் இருக்கும். குழந்தைகள் குறிப்புகளை கண்டு, எதையும் உறுதிபடுத்தவோ மறுக்கவோ மாட்டார்கள், எனவே வகுப்பின் முதல் நிமிடங்கள் இது என்ன பைபிள் கதையாய் இருக்குமென்று கணிக்கும் ஆர்வத்தில் சிறப்பாயிருக்கும்.

வழக்கு முடிந்ததும், உங்களுக்கு எப்போதும்போலான ஞாயிறு பள்ளி வகுப்புகள் இருக்கும்: பைபிள் கதை, நினைவக வசனம் மற்றும் வாழ்கைக்கான பயன்பாடு போன்றவை. இந்த நிகழ்ச்சியை இன்னும் ஆழமாக்க, குழந்தைகளுக்கு வாரத்தில் செய்ய வீட்டுப்பாடம் கொடுத்துள்ளோம். எடுத்துக்காட்டாக, முதல் வாரத்தில், அவர்கள் சிரியவர்களாயினும், ஆண்டவருக்கு பெரிய கடமைகளை செயலாற்ற முடியுமென்பதை கற்றுக்கொள்வார்கள். வீட்டுப்பாடமாக, அந்த வாரம் அவர்கள் வீட்டில் சிறப்பு வேலைகளான, பாத்திரம் கழுவுதல் அல்லது வீட்டில் அவர்களது அன்றாட வேலை அல்லாத ஏதோவொன்றை மேற்கொண்டு, ஆண்டவர் அவர்கள் எப்போதும் செய்யும் வேலையை விட கொஞ்சம் அதிகமாக செய்ததற்கு எவ்வாறு ஆசீர்வதிக்கிறார் என்று கவனிக்கவேண்டும்.

ஞாயிறு பள்ளி வகுப்பின் எப்போதும்போலான பகுதிகளுக்கடுத்து, சில கூடுதல் வேடிக்கையான செயல்பாடுகள் உள்ளன. ஒவ்வொரு வாரமும் நாங்கள் ஒரு விளையாட்டு, விவாத கேள்விகள், புதிர்கள் மற்றும் நிறங்கள் கொண்ட மாணவர் பக்கங்கள் மற்றும் "டாக்டர் லூகாஸ்" என்றழைக்கப்படும் கிறுக்குத்தனமான விஞ்ஞானியோடு வேடிக்கை நிறைந்த அறிவியல் பரிசோதனைகள் போன்றவைகளை வழங்குகிறோம். நீங்கள் வகுப்புகளிலேயே நேரடியாக பரிசோதனைகளை மேற்கொள்ளலாம், அல்லது நாங்கள் உருவாக்கியுள்ள வீடியோக்களை நீங்கள் பயன்படுத்திக்கொள்ளலாம்.

எப்போதும்போல் எங்கள் அமைச்சரவையில், இந்த ஆண்டிற்கான நிகழ்வுகளின் அனைத்து உள்ளடக்கமும் இலவசமாக கிடைக்கிறது. நீங்கள் கிராமப்புறத்தில் இருந்தாலும், ஆசிரியர் இணையத்தளத்திலிருந்து புத்தகங்களை பதிவிறக்கம் செய்யலாம், நீங்கள் மாணவர் பக்கத்தை பிரதி எடுத்துக்கொள்ளலாம் அல்லது எடுக்காமலும் இருக்கலாம். "குழந்தைகளின் பைபிள் விசாரணை"யில் உங்கள் சூழ்நிலைகளுக்கு உகந்தவாறு வேலைசெய்யும் எண்ணற்ற செயல்பாடுகள் இருக்கின்றன, ஒருவேளை நீங்கள் மாணவர் பக்கத்தை பயன்படுத்த தேவையில்லை என்று நினைத்தால், இதை பயன்படுத்திக்கொள்ளலாம். இந்த நிகழ்வை செயலாற்ற உங்கள் தேவாலயத்தில் இணையதள வசதி இருக்கவேண்டிய அவசியமில்லை! ஒரு நபர் தேவாலயத்திற்கு தேவையானதை நேரத்திற்கு முன்னரே தயார்செய்து வழங்கி, உங்களது அமைச்சரவை எவ்வாறு வளர்ச்சிகொள்கிறதென்று கவனியுங்கள்!

புதிய மற்றும் அற்புதமான திட்டங்களோடு, வாருங்கள் ஞாயிறு பள்ளியில் ஒன்றாக மூழ்குவோம்! உங்கள் மாணவர்கள் இன்னும் டேவிட் மற்றும் கோலியாத், எஸ்தர், உருவாக்கம், இயேசு உயிர்த்தெழுதல், நூற்றுக்கு மேற்பட்ட சேர்வையாளர்களின் நம்பிக்கை, மேலும் பலவற்றை அனைத்து சிபிஜ பகுதிகளிலும் உள்ளடக்கப்பட்ட இந்த 39பாடங்களில் கற்றுக்கொள்வார்கள். உங்கள் வகுப்பை வேடிக்கையானதாகவும், அற்புதமானதாகவும் மாற்ற நான் உங்களுக்கு சவால் விடுகிறேன்! ஒரு ஆய்வுக்கூட மேலணி, உண்மையான அறிவியல் பரிசோதனைகள், நாம் "பைபிள் காட்சி" என்றுரைக்கும் உண்மையான "குற்ற காட்சி"யைப்போல் பாசாங்குக்காட்டும் மஞ்சள் நாடா போன்றவற்றைக்கொண்டு படைப்பை உருவாக்குங்கள். உங்கள்

மாணவர்கள்போல் நீங்களும் இந்த ஆண்டு உண்மையான வேடிக்கையை பெறப்போகிறீர்கள்!

குழந்தைகளை வேடிக்கையான மற்றும் உற்சாகமூட்டும் முறையில் நீங்கள் கவனிப்பதற்காக ஆண்டவர் உங்களை சிறப்பாக ஆசிர்வதிக்கட்டும்!

ஆண்டவரின்பேரில்,

கிறிஸ்டினா கிரௌஸ்



# --[ எவ்வாறு பயன்படுத்துவது]—



ஆசிரியரே, இந்த பைபிள் விசாரணை நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம்! உங்களால் உங்கள் மாணவர்களுக்கு பயிற்சி தரமுடியுமென்றும், அதே நேரத்தில், ஒன்றாக பல வேடிக்கைகளை பெறமுடியுமென்றும் நாங்கள் நம்புகிறோம்! இந்த நிகழ்ச்சியை, ஞாயிறு பள்ளியாகவோ, குழந்தைகளின் தேவாலயமாகவோ, அல்லது ஒரு வாராந்திர கிளப் அமைச்சகமாகவோ குழந்தைகளுக்காக பயன்படுத்தலாம். உங்களுக்காக காட்சி சாதனங்கள் நமது வலைதளத்தில் வழங்கப்பட்டுள்ளது, எனவே நீங்கள் ஒவ்வொரு படத்தையும் பெரிதாக காண்பிக்கலாம், அல்லது மாணவர்களுக்கு உங்கள் கைபேசியின் மூலமாகவும் காண்பிக்கலாம். இந்த பாடத்திட்டத்தின் அனைத்து 3பிரிவுகளையும் நீங்கள் விரும்புவீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம், நாங்கள் உங்களுக்கு 9மாதங்கள் வழங்குகிறோம். இந்த முதல் 13பிரிவு பாடங்களை கொண்டது, மற்ற 2பிரிவுகளிலும், மொத்தமாக 39பாடங்கள் உள்ளது.

### பரிந்துரைக்கப்பட்ட அட்டவணை: (2- 2 ½மணிநேரங்கள்)




- 5 குறிப்புகளுடன் முன்னுரை (25 நிமிடங்கள்)
  - தலைப்பு (3 நிமிடங்கள்)
  - நாடகம் (10 நிமிடங்கள்)
  - பொருள் (3 நிமிடங்கள்)
  - அகழ்வாராய்ச்சி (2 நிமிடங்கள்)
  - பைபிள் காட்சி (7 நிமிடங்கள்)
- முக்கிய பாடம் நேரம் (35 நிமிடங்கள்)
  - பைபிள் கதை / வழக்கு முடிந்தது! (13 நிமிடங்கள்)
  - விண்ணப்பம் (2 நிமிடங்கள்)
  - மனப்பாட வசனம் நினைவாற்றல் (15 நிமிடங்கள்)
  - வகுப்பீடு (3 நிமிடங்கள்)
  - கடவுளின் டிஎன்ஏ (2 நிமிடங்கள்)
- வேடிக்கை நேரம்! (1 மணிநேரம்)
  - விளையாட்டு (15 நிமிடங்கள்)
  - விவாதம் (15 நிமிடங்கள்)
  - மாணவர் புத்தகங்கள் (15 நிமிடங்கள்)
  - லூகாஸ் அறிவியல் பரிசோதனை (15 நிமிடங்கள்)

- விருப்பப்பட்டால் “யாரென்று கண்டுபிடியுங்கள்” விளையாட்டு (30 நிமிடங்கள்)



## தடயங்கள்!

வழக்கை முடிக்க உங்கள் "துப்பறிவாளர்களுக்கு", குறிப்புகளை கொடுத்து வகுப்பை ஆரம்பிக்கவும். இது அவர்களுக்கு 5 -15நிமிடங்கள் எடுக்கும், இதன் வேடிக்கைத்தனம் முற்றிலுமாக உங்களை பொறுத்தே இருக்கிறது! ஒவ்வொரு பாடத்திற்கும் 5குறிப்புகள் இருக்கின்றன. உங்கள் கைபேசி கொண்டு நீங்கள் அந்த குறிப்புகளை பயன்படுத்திக்கொள்ளலாம் அல்லது உங்கள் மாணவர்கள் கண்டுபிடிக்க குறிப்புகளை வகுப்பில் உருவாக்கவும்.

### குறிப்பு #1 தலைப்பு

முதல் குறிப்பு பாடத்தின் உண்மையான தலைப்பாகும். மாணவர்களை தலைப்பை படிக்கச்சொல்லுங்கள் அல்லது அவர்கள் காண அதை அச்சிட்டு கொடுத்திடுங்கள். எடுத்துக்காட்டாக, டேவிட் மற்றும் கோலியாத்தின் மேலான பாடம், "மழுங்கிய வலி அதிர்ச்சி கொண்ட வழக்கு" எனப்படுகிறது. மழுங்கிய வலி அதிர்ச்சி என்பது டேவிட், கோலியத்தை, அவன் தலையில் நதியிலிருந்த ஒரு கல்லால் தாக்கியதை குறிக்கிறது. யோசனையானது, பைபிள் வகுப்பிற்கு வேடிக்கை சேர்க்க, விசாரணையாளர்கள் மற்றும் தடயவியல் ஆய்வாளர்கள் போன்ற வார்த்தைகளை சேர்ப்பதிலிருக்கிறது. உங்களது ஆசிரியர் புத்தகத்தை உங்கள் மாணவர்களிடம் காண்பிக்கக்கூடாதென்பதை நினைவில்கொள்ளுங்கள், அப்போதுதான் அவர்கள் ஏமாற்றமுடியாது, பைபிள் கதையை காண முடியாது.

### குறிப்பு #2 நாடகம்



ஒவ்வொரு வாரத்திற்குமான இரண்டாம் குறிப்பானது, நாடகம். உங்கள் ஆசிரியர்கள் அல்லது மாணவர்களை நடித்துக்காட்ட சொல்லுங்கள். இதன் யோசனையானது, பைபிள் கதையை முழுவதுமாக வெளிக்காட்டாமல், மற்றொரு குறிப்பை வழங்குவது. டேவிட் மற்றும் கோலியாத் மேலான பாடத்தில், ஒரு சிப்பாய் வீட்டிற்கு வந்து, தனது மனைவியுடன் பேசுவார். அந்த சிப்பாய் ஒரு பிலிஸ்தியர், அவர் அவரகள் எவ்வாறு போரில் தோற்றார்கள் என்பது குறித்து பேசிக்கொண்டிருப்பார். அவர்கள் "ஹியூஜ்" என்ற ஒரு மனிதனையும், பெரிதாக இருக்கும் அவனது சகோதரன் குறித்தும் பேசுவார்கள். (கோலியத்தின் பெயர் குறிப்பிடாமல்). கோலியத்திற்கு "ஹியூஜ்" என்றொரு சகோதரன் இருந்தான் என்று பைபிளில் கூறப்படவில்லை, இது பைபிள் கதை குறித்து உங்கள் மாணவர்களுக்கு யூகமளிக்க கூறப்பட்ட ஒரு வேடிக்கை நாடகம்.



## குறிப்பு #3 பொருள்

வகுப்பிற்கு கொண்டுவர ஒவ்வொரு பாடமும் உங்களுக்கொரு பொருளை வழங்கியிருக்கும். இது உங்கள் மாணவர்களால் தொடக்கூடிய, உணரக்கூடிய ஒரு ஸ்தூலமான ஒன்றாய் இருக்கும், இது பைபிள் கதை குறித்து அவர்களுக்கு யுகமளிக்க உதவும். நமது எடுத்துக்காட்டு பாடத்தில், உங்கள் வகுப்பிற்கு நீங்கள் கொண்டுவரவேண்டிய பொருள் 5கற்கள் அல்லது பாறைகள். இந்த புள்ளியில், உங்கள் மாணவர்கள் இந்த கற்கள் நதிக்கரையில் டேவிட்டால் எடுக்கப்பட்ட கற்கள் என்பதை ஊகித்துக்கொண்டால், நீங்கள் ஒப்புக்கொள்ளவோ அல்லது மறுக்கவோ செய்யாதீர்கள். நீங்கள் உங்கள் மாணவர்களிடம் பொய்யுரைக்க தேவையில்லை, ஆனால் உங்கள் மாணவர்கள் கதை குறித்த கேள்விகளை முடிந்த காலம்வரை கேட்க அனுமதிக்க வேண்டியது தேவையாகும்.

## குறிப்பு #4அகழ்வாராய்ச்சி




ஒவ்வொரு பாடத்திற்குமான நான்காம் குறிப்பு, உண்மையான அகழ்வாராய்ச்சியிலிருந்து ஒரு துண்டு. இங்கே கொடுக்கப்பட்டுள்ளது, கத் நகரின் இடிபாடுகளின் நவீன புகைப்படம். இன்று இது டெல் சபைட் தேசிய பூங்காவிற்குள் அமைந்துள்ளது. (ரகசியம்: கோலியத்தின் வீடு பிலிஸ்ட்டின் நகரம்.) நீங்கள் இந்த ரகசியத்தை வெளிக்காட்டாமல், இதுதான் பண்டைய கத் நகர் என்று இந்த படத்தை காட்டி அவர்களுக்கு குறிப்பிடலாம். பல மக்களுக்கு இதுதான் கோலியத்தின் தாய்நகரம் என்பது தெரியாது, எனவே உங்கள் பாடம் இன்னமும் ரகசியமாக இருக்கும்!

## குறிப்பு #5 பைபிள் காட்சி



ஒவ்வொரு வாரத்திற்குமான இறுதி குறிப்பு, பைபிள் காட்சியாகும். உங்களது துப்பறிவாளர்களுக்கு, ஒரு வழக்கு காட்சிபோல் விசாரிக்க நீங்கள் இதை செய்துதரலாம்.




எடுக்காட்டாக, பைபிள் காட்சி வரைபடமானது, அனானிமஸ் மற்றும் சப்பீரா, மற்றும் ஆண்டவரிடம் அவர்கள் உரைத்த பொய் ஆகியவற்றிற்கான பாடம். நாங்கள் உங்களுக்கு கொடுத்துள்ள வரைபடத்தை பயன்படுத்தி, அல்லது நீங்களாகவே ஒரு உண்மை காட்சியை உருவாக்கி, உங்கள் மாணவர்கள் விசாரிக்க உடல் உருவரைக்குறிப்பு செய்துதரலாம். நீங்கள் காணுவதுபோல், இந்த தேவாலயம் மாணவர்களின் விசாரணைக்கு மேலும் ஆர்வத்தை தூண்டும்வகையில், குறிப்புகளை சுற்றி கால்வளத்துறை டேப்பை போட்டுள்ளனர் மற்றும் தரையில் உடல்களை சுற்றிலும் அதை பயன்படுத்தி, எல்லைக் கோடு வரைந்துள்ளனர்.

வழக்கு முடிந்தது வழக்கு முடிந்தது

## வழக்கு முடிந்தது!



உங்கள் மாணவர்கள் குறிப்புகளை விசாரித்து முடித்ததும், அவர்களை வழக்கை தீர்க்க முன்னேற சொல்லுங்கள் அல்லது அந்த வாரத்திற்கான பைபிள் கதையாக நீங்கள் நோக்குகின்ற கதை என்ன என்பதை சரியாக சொல்லச்சொல்லுங்கள். வருடங்களாக திருச்சபையை நாடாத மாணவர்கள் உங்களிடம் இருந்தால், அவர்கள் பைபிள் கதையை யூகிக்க திணறுவார்கள். வெறுமனே முன்னேறி சென்று பைபிள் கதையை சொல்வது ஒரு பிரச்சனை இல்லை. அவர்கள் சரியாக யூகிக்கவில்லையெனினும், குறிப்புக்கள் ஒரு நல்ல வேடிக்கையான முன்னுரையாய் இருந்திருக்கும், மற்றும் உங்களுக்கு ஓர் தனித்துவமான ஞாயிறு பள்ளியை உருவாக்கியிருக்கும்!

### பைபிள் கதை

அனைத்து குறிப்புக்கள் மற்றும் அந்த வாரத்திற்கான பைபிள் கதை என்ன என்பதை உங்கள் மாணவர்களுக்கு சொல்லி முடித்தபின்னர், ஞாயிறு பள்ளி வகுப்பைபோல் பைபிள் கதையை சொல்லவேண்டிய நேரம் வந்துவிட்டது. உங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளின்பால் நீங்கள் பைபிள் கதையை சொல்லலாம், அல்லது ஆசிரியர் புத்தகத்தின் உதவியோடும் கதையை சொல்லலாம். நீங்கள் கதையை சொல்ல ஆசிரியர் புத்தகத்தை நாடுகிறீர்கள் எனில், கதையை சொல்லுகையில் உங்கள் பைபிளை உங்களுடன் கொண்டு சொல்வது மிகவும் நல்லது. ஒவ்வொரு வாரமும், கதையில் வரும் ஒரு நபரின், சிலநேரங்களில் கதாநாயகன், சிலநேரங்களில் வில்லனை வரைதல் அல்லது கார்ட்டூன் செய்தல் இருக்கும். டேவிட் மற்றும் கோலியாத் பாடத்தில், உங்கள் மாணவர்களுக்கு காட்டவேண்டிய வரைபடம் கோலியத்தினுடையது.

உங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள பைபிள் மக்கள் அட்டைகளை கொண்டு ஒவ்வொரு மாணவருக்கும் கொடுக்கவும். இது அவர்களுக்கான வருகை அட்டைகளாக, அல்லது "யாரென்று தெரியுமா" விளையாட்டை விளையாட உதவும். விளையாட்டிற்கான வழிமுறைகள் இந்த பகுதியின் முடிவிலுள்ள "எப்படி" என்ற பகுதியிலுள்ளது.

### விண்ணப்பம்

பாடத்திற்கு பின்னர், விண்ணப்பத்தை வாழ்க்கைக்கு பகிர்ந்துகொள்ளவும். டேவிட் மற்றும் கோலியத்தின் கதைக்கான, விண்ணப்பமானது "நான் சிரியவனாய் இருப்பினும், என்னால் பெரிய விஷயங்களை செய்யமுடியும்." ஆண்டவர் பெரிய விஷயமொன்றை செய்ய சிரியவனாயினும், டேவிட்டை எவ்வாறு பயன்படுத்தினார் என்பதை சொல்லுங்கள் மற்றும் அவரைகளையும் அவர் பயன்படுத்தப்போகிறார் என்பதையும் கூறுங்கள்.

### மனப்பாட வசனம்

ஒவ்வொரு வாரத்திற்குமான மனப்பாட வசனமானது, வாழ்க்கையோடு உபயோகிக்கப்படுவதாய் தேர்வு செய்யப்படும். பைபிள் வசனத்தை மனப்பாடம் செய்ய உங்கள் மாணவர்களுக்கு கொஞ்சம் நேரம் கொடுத்து உதவுங்கள்.

### வகுப்பீடு

அந்த வாரத்தில் செயலாற்ற, உங்கள் மாணவர்களுக்கு ஒவ்வொரு வாரமும் ஒரு வகுப்பீடு வழங்கப்படும். இந்த பாடத்திட்டத்தில் இது மிகவும் முக்கியமானது! ஆண்டவர் நாம் வெறுமனே காதால் விஷயங்களை கேட்பவராய் இருப்பதை விரும்புவதில்லை, ஆனால் செயாலாளிகளாய் இருக்கவே விரும்புகிறார்! மாணவர்கள் தேவாலயத்தில் கற்றுக்கொள்வதுமட்டும் இல்லை, வாழ்கிறார்கள், அதுதான் முக்கியமானது. அந்த வாரத்தில் மாணவர்கள் எந்த பாடத்தோடும் வாழாதபோது, கோட்பாடு மற்றும் பைபிள் வசனங்களை மனப்பாடம் செய்யும்பொருட்டு அதிக பரியேஷங்களை உருவாக்காதீர்கள். நாம் கபடதாரிகளை உருவாக்கும் தவறை செய்யக்கூடாது! உங்கள் மாணவர்களை கபடதாரிகளாய் இல்லாமலிருக்க நீங்கள் ஊக்குவிக்க ஒரே வழி, அவர்களை அந்த வாரத்தில் பாடத்தோடிசைந்து வாழ செய்வதேயாகும்.

### ஆண்டவரின் டிஎன்ஏ

ஆண்டவரின் டிஎன்ஏ என்ற வகுப்பின் பிரிவில், நாம் ஆண்டவர் என்பவர் யார் என்பதை பைபிள் பாடத்தின் அடிப்படையில் கற்றுக்கொள்வோம். எடுத்துக்காட்டாக, டேவிட் மற்றும் கோலியாத் பாடத்தில், ஆண்டவர் குறித்து அவர் எவ்வாறு தனது திட்டங்களை நிறைவேற்ற மக்களை பயன்படுத்திக்கொள்கிறார் என்பது குறித்து கற்றுக்கொள்வோம்.



## வேடிக்கை நேரம்!

### விளையாட்டு

விளையாட்டுகள் உங்கள் வகுப்பின் முக்கியமான பகுதியாகும், அவை உங்கள் மாணவர்களை மீண்டும் வரச்செய்யும்! குழந்தைகள் விளையாட விரும்புவார்கள், மேலும் நீங்கள் ஒவ்வொரு வகுப்பிலும் ஒரு விளையாட்டை உள்ளடக்கும்போது, உங்கள் வகுப்பு ஒவ்வொரு வாரமும்

வளர்ச்சிகொள்வதை நீங்கள் காண்பீர்கள். உங்கள் வகுப்பில் எந்த அளவு அதிக மாணவர்கள் இருக்கிறார்களோ, அந்த அளவு வாழ்க்கைகளை நீங்கள் மாற்றுகிறீர்கள் என்று அர்த்தம்!

### விவாதம்



ஒவ்வொரு வாரமும் நீங்கள் உங்கள் மாணவர்களை சவால்விடுமளவு விவாதத்தில் வைக்க, நாங்கள் மூன்று விவாத கேள்விகளை வழங்கியுள்ளோம். உங்கள் விவாதத்தை சிறப்பாய் எடுத்துச்செல்லும் ஒரே வழி, உங்கள் மாணவர்களுக்கு பதில்களை வழங்காமல், ஆனால் அவர்களை ஒவ்வொரு கேள்வி குறித்தும் உண்மையாகவே பேசச்செய்வதில் இருக்கிறது. எந்த அளவு விவாதிக்கிறார்களோ, அந்த அளவு சிறப்பபை நீங்கள் செய்கிறீர்கள்! எனவே, நல்ல விவாதத்தை ஏற்படுத்த முயலுங்கள், அதன்பால் உங்கள் மாணவர்களின் உண்மையான கருத்துகளை நீங்கள் காணமுடியும். நாங்கள் ஆசிரியர் புத்தகத்தில், விடைகளை கொடுத்துள்ளோம். எனவே, ஒவ்வொரு கேள்வியின் முடிவிலும், நீங்களுங்கள் கருத்துகளை பகிர்ந்துகொள்ளலாம்.

### மாணவர் பக்கங்களுக்கான விடைகள்

இந்த திட்டத்தில். மாணவர் பக்கங்கள் உண்டு, அதை நீங்கள் உங்கள் வகுப்பில் நடவடிக்கைகளாக பயன்படுத்திக்கொள்ளலாம். குழந்தைகள் வண்ணம் தீட்டவும், வார்த்தை கண்டுபிடிப்புகளை தீர்வு செய்யவும் விரும்புவார்கள், எனவே நீங்கள் எங்கள் மாணவர் புத்தகங்களை பயன்படுத்தி, உங்கள் வகுப்பை வேடிக்கையாக கொண்டு செல்வீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம். இந்த பிரிவில், மாணவர் புத்தகங்களில், 4வயதினருக்குமான புதிர்களுக்கான விடைகளை நீங்கள் கண்டுகொள்ளலாம்.

### லூக்காசின் பரிசோதனை

உங்கள் வகுப்பின் இறுதி செயல்பாடு ஒரு பைத்தியக்காரத்தனமான விஞ்ஞானியான, லூக்காசின் அறிவியல் பரிசோதனையோடு முடிகிறது! ஒவ்வொரு வாரமும் வகுப்பில் செயல்முறையாய் மேற்கொள்ள, ஒரு அறிவியல் பரிசோதனையை வழங்குவார். இந்த வீடியோவை நீங்கள் ஒன்றிணைந்து காணலாம், அல்லது ஒரு ஆசிரியர் ஆய்வக மேலுறை அணிந்துகொண்டு பரிசோதனையை மேற்கொள்ளும் படத்தைக்கொண்டு நீங்களாகவே பரிசோதனையை மேற்கொள்ளலாம்.





## யாரென்று தெரியுமா விளையாட்டு

உங்கள் வகுப்பின் இறுதி விருப்பத்தேர்வு செயல்முறையானது, பைபிள் மக்கள் அட்டைகள் கொண்டு செய்யப்படும் விளையாட்டான "யாரென்று தெரியுமா" விளையாட்டு. இது கூட்டாளிகளுடன் அல்லது இரண்டு குழந்தைகள் ஒருவருக்கொருவர் எதிராய் விளையாடும் ஒரு பாரம்பரியமான குழு விளையாட்டு.




அனைத்து 13அட்டைகளையும் ஒவ்வொரு மாணவருக்காகவும் அச்சிடவும். ஆசிரியரிடமும் மொத்த அட்டைகள் அமைப்பும் இருக்கவேண்டும். இந்த விளையாட்டை விளையாடும்போது உங்கள் மாணவர் பைபிள் மக்களிடம் பழக்கமாகிவிடுவார். ஒரு அட்டைபங்கை அல்லது தடிமனான தாளை, இசைக்கருவிபோல் அட்டைகளை பிடிக்க



மடித்துக்கொள்ளவும். விளையாட்டு என்னவெனில், எந்த பைபிள் நபரை உங்கள் ஆசிரியர் அல்லது கூட்டாளி வைத்திருக்கிறார் என்பதை கண்டுபிடிப்பதேயாகும். ஒரு பைபிள் நபர் அட்டையை தேர்ந்தெடுத்து தொடங்கவும், அதை உங்கள் கூட்டாளியிடமிருந்து மறைத்து வைக்கவும். பைபிள் மக்களின் பல்வேறு தகுதிகளை காணுங்கள், அவர்களின் கண்கள் நிறம், முடியின் நிறம், அவர்களுக்கு தாடி இருந்தால், அவர்கள் தொப்பி அணிந்திருந்தால், அவர்களின் மூக்கு அல்லது காதின் நிறம், அவர்கள் ஆணா அல்லது பெண்ணை போன்றவற்றை உட்பட அனைத்தையும் காணுங்கள்.

முதல் விளையாட்டாளர் ஒரு கேள்வியை கேட்பதில் தொடங்குவார், இரண்டாம் விளையாதவர் அதற்கு "ஆம்" அல்லது "இல்லை" என்பதை மட்டுமே தரவேண்டும். ஒரு முறைக்கு ஒரு கேள்விக்கு மட்டுமே அனுமதிக்கப்படும். நீங்கள் பதிலை பெற்றதும், உங்களிடம் இல்லாத அட்டையை நீங்கள் கீழ்நோக்கி வைத்துக்கொள்ளலாம். எடுத்துக்காட்டாக, நீங்கள் அது ஒரு பெண்ணா என்ற கேள்வியை கேட்டு, உங்கள் கூட்டாளி, "இல்லை" என்ற பதிலை சொல்லியிருந்தால், நீங்கள் அனைத்து பெண் அட்டைகளையும் கீழ்நோக்கி வைக்கவேண்டும். பைபிள் ரகசிய நபரை கண்டுகொள்ளும்வரை, கேள்விகளை தொடரவும்!
இந்த திட்டத்தில், 3 பிரிவுகளான பொருட்கள், 9 மாத வகுப்பை உள்ளடுக்குவதாய் இருக்கிறது. விளையாட மூன்று பைபிள் நபர்கள் இருப்பார்கள், வருடத்தின் முடிவில், மொத்தம் 39 பைபிள் நபர்கள் இருப்பார்கள்.

# --[ வழக்கு 1 ]—



**குறிப்புகள்! (பாடம் 1)**

## 1 குறிப்பு #1 தலைப்பு (பாடம் 1)

கூர்மையான ஆயுதங்களாலான அதிர்ச்சி வழக்கு

## 2 குறிப்பு #2 நாடகம் (பாடம் 1)

கதைகூறுபவர்: இது கற்பனை கதையாகும் ஆனால் அப்பாவிகளை காக்கும் பொருட்டு சில பெயர்கள் மற்றும் இடங்கள் மாற்றப்பட்டுள்ளன.
படைவீரர்: அன்பே, எனது இன்றைய நாளை பற்றி நீ நம்பமாட்டாய், நான் உயிருடன் வந்ததே பெரிய விஷயம்!
மனைவி: அங்கே போகவேண்டாமென்று நான்தான் கூறினேனே, நீங்கள்தான் கேட்கவில்லை.
படைவீரர்: ஆம், நீ சரியாகத்தான் கூறினாய், ஆனால் அன்பே, நீ அங்கே இல்லை, என்ன நடக்குமென்று நீ அறிந்திருக்க முடியாதுதானே.
மனைவி: என் தந்தையின் வாள் எங்கே?
படைவீரர்: [மெல்லமாக] அதை எபிஸ் டம்மிம் கூடாரத்திலேயே விட்டுவிட்டேன்.



மனைவி: நன்றாக இருக்கிறது படைவீரரே, நீங்கள் மீண்டும் ஷாரைம் சாலைக்கு நடந்து சென்று அதை திரும்ப பெற்று வாருங்கள்.
படைவீரர்: என்னால் முடியாது. என்னை அவர்கள் கொன்றுவிடுவார்கள்.
மனைவி: நீங்கள் இதை செய்யாவிடில், இங்கேயும் உங்களுக்கான வாய்ப்புகள் நன்றாக இருக்காது.
படைவீரர்: நீ கோபமாக இருக்கிறாய் என்று எனக்கு தெரியும், ஆனால் நான் உன் தந்தையின் வாளுக்காக திரும்பி போகப்போவதில்லை.
மனைவி: [பெருமூச்சுவிட்டபடியே] உங்களுக்கு அத்தனை பயமாக இருந்தால், ஏன் நீங்கள் ஹூஜ் அல்லது அவனது சகோதரனை உங்களுடன் அழைத்து செல்லக்கூடாது.
படைவீரர்: என்னால் முடியாது. அவனது சகோதரன் இறந்துவிட்டான். நாங்கள் தொலைத்துவிட்டோம்.

மனைவி: [கலந்துகொண்டிருந்த கிண்ணத்தை கீழேபோட்டுவிடுகிறாள், ரொட்டி மாவு தரை முழுவதும் சிதறிவிழுகிறது] ஐயோ, அன்பே, என்ன நடந்தது?
படைவீரர்: அது வினோதமாக இருந்ததென்று நான்தான் கூறினேனே. உனக்கு சோகோஹ்வினால் தெரியுமே, நாங்கள் எபிஸில் கூடாரமிட்டு இருந்தோம். நாங்கள் அவர்களை ஒரு மாதக்கணக்கில் சுற்றி வளைத்திருந்தோம், பீபின் பெரிய சகோதரன் ஒவ்வொரு நாளும் சென்று அவர்களை சண்டைக்கு அழைத்து மிகவும் கேலி செய்து கொண்டிருந்தான். அவனிடம் அவர்கள் முட்டாள்கள் ஆகியதை நாங்கள் கவசம்கூட அணியாமல் இருந்து பார்த்துக்கொண்டிருந்தது மிகவும் வேடிக்கையாய் இருந்தது. நான் உன் தந்தையின் வாளை தொலைத்துவிடாமல் இருக்க அதை கூடாரத்திலேயே விட்டு சென்றிருந்தேன்.
மனைவி: கூடாரத்திலா? கூடாரம் பற்றி பேசும்போதுதான் தோன்றுகிறது, நீங்கள் கூடாரத்தை திரும்ப கொண்டுவந்தீர்களா?
படைவீரர்: இல்லை.
மனைவி: ஹாரும்ப், இந்த வருடம் முகாமிற்கு எதை பயன்படுத்த போகிறோம்?
படைவீரர்: அன்பே, இனிமேல் யாரிடமும் கூடாரமோ அல்லது ஒரு வாளோ இருக்காது, வேகமாக இருந்ததால், நான் அதிர்ஷ்டசாலி. நான் வீடு திரும்பியதை எண்ணி மகிழ்ச்சிகொள், பலருக்கு அந்த வாய்ப்புக்கிடைக்கவில்லை.
மனைவி: எப்படியோ, வீட்டிற்கு வரவேற்கிறேன். நாம் எவ்வாறேனும் சமாளித்துக்கொள்ளலாம். நான் உங்கள் பிரிவில் வாடினேன்.
படைவீரர்: நானும்தான்.

## 3 குறிப்பு #3 இலக்கு (பாடம் 1)


வகுப்பிற்கு இந்த ஸ்தூலமான பொருளை ஒரு குறிப்பாக கொண்டுவரவும்: **5** கற்கள்.

## 4 குறிப்பு #4 தொல்பொருளியல் (பாடம் 1)




காத் நகர இடிபாடுகளின் உண்மையான நவீன புகைப்படம். இன்று அது டெல் சபைட் தேசிய பூங்காவில் அமைந்துள்ளது. (ரகசியம்: கோலியத்தின் வீடு பிலிஸ்ட்டின் நகரம்.)

## 5 குறிப்பு #5 பைபிள் காட்சி (பாடம் 1)



ரகசியம்: கோலியத்திற்கு பெரிய கால்தடங்கள் மற்றும் படைக்கு சிறிய கால்தடங்கள்.




# வழக்கு முடிந்தது! (பாடம் 1)

### பைபிள் கதை (பாடம் 1)

டேவிட் மற்றும் கோலியத்
பைபிளிள் இருந்து: 1 சாமுவேல் 17: 1-53



இஸ்ரேலியர்கள் மற்றும் பெலிஸ்தர்களின் இடையேயான போர்க்களத்தில் நிற்கையில், டேவிட்டிற்கு தெரியும் அவன் இந்த போரில் வென்றுவிடுவானென்று. ஆண்டவர் அவன்பக்கம் உள்ளதால் அவன் தோற்கமாட்டான், ஆனால் 9-அடி உள்ள மாபெரும் அரக்கன் அவனைநோக்கி தாக்க நிற்கும்போது, மற்ற வீரர்களின் பயத்தை அவனால் உணர முடிந்தது. கோலியாத் பெரிய மனிதன், அவன் இஸ்ரேலியர்களை திட்டிக்கொண்டிருந்தான். இந்த பிலிஸ்ட்டின் கொலையாளியுடன் சண்டையிட யாருமே விரும்பவில்லை.
டேவிட் இன்னும் படைவீரானாகும் வயதை எட்டவில்லை; அவன் ஒரு இளம் சிறு மேய்ப்பான், ஆனால் தைரியமாவனவன். அவனது இளம் வயதில், அவன் ஏற்கனவே ஒரு சிங்கம் மற்றும் ஒரு கரடியை தனது ஊழியர்கள் துணை கொண்டு கொன்றுள்ளான். ஆயினும், இந்த போரில் அவன் ஆண்டவரை தன் பக்கம் கொண்டுள்ளான். ஆண்டவனின் பெயரால் வரும்போது, தோற்கமாட்டான் என்று அவனுக்கு தெரியும்.
5 கற்களை எடுத்துக்கொண்டான், தனது கவண் மூலம் ஒன்றை வீசினான். கோலியத்தின் பெரிய உருவமானது மேலும் மேலும் நெருங்கிக்கொண்டிருந்தது. சரியான நேரத்திற்கு காத்திருக்கவேண்டும் என்பதை உணர்ந்திருந்த அவன், தனது கவணை வீச தொடங்கினான். அது சுற்றி சுற்றி சென்றது. அவன் அந்த கல்லை பறக்கவிட்டு, அதன் இலக்கை எட்ட செய்தான், அது கோலியத்தின் இரு கண்களுக்கும் இடையேயான இடைவெளி. கோலியத் நிலத்தில் விழுந்து, மடிந்தான். பிலிஸ்ட்டின் படை தங்களது கதாநாயகன் வீழ்ந்ததை கண்டதும் ஓட்டம் பிடித்தனர்.

### விண்ணப்பம் (பாடம் 1)

நான் சிரியவனாயினும், பெரிய செயல்களை செய்வேன்.

### மனப்பாட வசனம் (பாடம் 1)

“நான் இதனைக் கூறுகிறேன் ஏனென்றால், உங்களுக்காக நான் வைத்துள்ள திட்டங்களை நானறிவேன்” இச்செய்தி கர்த்தரிடமிருந்து வருகிறது. “நான் உங்களுக்காக நல்ல திட்டங்களை வைத்திருக்கிறேன். நான் உங்களை துன்புறுத்தும் வகையில் திட்டமிடமாட்டேன். உங்களுக்கு நம்பிக்கையைத் தரவும் நல்ல எதிர்காலம் அமையவும் நான் திட்டமிடுகிறேன்.” எரேமியா 29:11

### வகுப்பீடு (பாடம் 1)

உங்களது அன்றாட வேலை அல்லாத ஒன்றை இந்த வாரம் எடுத்துக் கொள்ளுங்கள், தினமும் பாத்திரம் கழுவுதல், அல்லது உங்களது அன்றாட பொறுப்பில் இல்லாத, உங்களது பெற்றோருக்காக ஏதாவது வேலை செய்யுங்கள். பெரிய செயல்களை செய்ய ஆண்டவர் உங்களுக்கு உதவுவதை காணுங்கள்.

### கடவுளுடைய டிஎன்ஏ (பாடம் 1)

ஆண்டவர் குறித்து நாம் இந்த பாடத்தில் கற்றுக்கொண்டது என்ன? ஆண்டவர் தனது திட்டங்களை மக்கள் மூலம் சாதிக்கிறார்.






## வேடிக்கை நேரம்! (பாடம் 1)

### விளையாட்டு (பாடம் 1)

நிழல் இணைக்கயிறு

இந்த விளையாட்டு மற்ற இணைக்கயிறு விளையாட்டுகள்போல் விளையாடக்கூடியது, இதில் ஆசிரியர்கள் "அது"வாக சில குழந்தைகளை தேர்வுசெய்வர், அவர்கள் மற்ற குழந்தைகளை துரத்தி பிடித்து முடிந்து கொள்வர். இந்த பதிப்பில், 'அது' ஆட்டக்காரர்களை பிடிக்காமல், அவர்களின் நிழல்களை இணைக்கயிறாய் பிடித்து, அதில் நின்றுகொள்வர்.

### விவாதம் (பாடம் 1)

(பழைய மாணவர்களுக்காக)

1. அடுத்து என்ன நடக்கவிருக்கிறதென்று உங்களுக்கு தெரிந்திருந்தால் உங்களின் செயலை அது எவ்வாறு மாற்றும்?

சில நிமிடங்கள், வெல்லக்கூடிய லாட்டரி டிக்கெட்டுகள் வாங்குவது, பகட்டான ஆடைகள் வாங்குவது, அல்லது பேரழிவுகளை தவிர்ப்பது குறித்து பேசுங்கள். பின் ஆண்டவர் எவ்வாறு முன்னறிந்து கொள்ளக்கூடிய வழிகளில் செயலாற்றுகிறார் என்ற யோசனையையும் மற்றும் கடந்த காலத்தில் அவர் எப்படி செயலாற்றினார்

என்பதைக்கொண்டு, நாம் அடுத்து என்ன செய்யவேண்டுமென்று ஆண்டவர் விரும்புகிறார் என்பதை எவ்வாறு அறிந்துகொள்ளலாம் என்பது குறித்தும் அறிமுகப்படுத்துங்கள். உண்மையின் ஒரு பகுதியானது, ஆண்டவர் அடுத்து என்ன செய்யப்போகிறார் என்பதை அறிந்துகொண்டு அதில் பங்குபெறுவது ஆகும். “மேலும் தாவீது என்னைச் சிங்கத்தின் கைக்கும் கரடியின் கைக்கும் தப்புவித்த ஆண்டவர் இந்தப் பெலிஸ்தியனின் கைக்கும் தப்புவிப்பார்" என்றார். அதற்குச் சவுல் தாவீதிடம் சென்று வா! ஆண்டவர் உன்னொடு இருப்பார்" என்றார்.” 1 சாமுவேல் 17:37

2. கோலியத்தை கொல்லும் முன் டேவிட் அவனை கேலி செய்தான், ஏன் டேவிட்டிற்கு கோலியத்தை கேலி செய்வது சரியென்று தோன்றியது? மற்றவரை கேலி செய்வதை சரியென்று எண்ண எது வழிகோலுகிறது?


இது ஒரு தந்திரமான கேள்வியின் ஒரு சிறு பகுதி, டேவிட் கோலியத்தை கேலி செய்தது ஏற்றுகொள்ளப்படாததாய் இருக்கலாம், ஆனால், இது கதையின் ஒரு பகுதி. அது அவனுக்கிருந்த விசுவாசத்தை வெளிக்காட்டியது.


3. அரக்கனை கொல்லும் சந்தர்ப்பம் டேவிட்டிற்கு வாய்த்தது ஏனெனில், அவன் தனது சகோதரர்களுக்கு சேவை செய்கிறான். எவ்வாறு முன்னேறுவதும், சேவை செய்வதும் ஒன்றையொன்று விரும்புகிறது?

முன்னேறுதலும், சேவை புரிவதும் ஒன்றுக்கொன்று வேறுபட்டு இருப்பினும்; ஒரு பணியாள் தலைமைத்துவம் உள்ளது, அது தலைமைத்துவத்தையும், சேவையையும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாக காட்டுகிறது. சேவை புரியும்போது, நீங்கள் சந்தர்ப்பங்களை காண்பீர்கள்; நீங்கள் அவ்வாய்ப்புகளில் செயலாற்றும்போது, அது தலைமைத்துவத்தை உருவாக்குகிறது.

## மாணவர் பக்கங்களுக்கான விடைகள் (பாடம் 1)



## லுக்காஸின் பரிசோதனை (பாடம் 1)

ஒரு குடத்தில் நான்கு கோப்பை தண்ணீரையும், நான்கு கோப்பை வினீகரையும் கலக்கவும், பின் நான்கு கோப்பை பேக்கிங் சோடா சேர்க்கவும். குடத்தில் காற்றைவிட கனமான கரியமிலவாயுவை நிரப்பும்போது, கலவை கொப்பளிக்கும். திரவத்தை அன்றி, கரியமிலவாயுவை எரிந்து கொண்டிருக்கும் மெழுகுவர்த்திமேல் ஊற்றவும், அது அணைந்துவிடும். (விவரங்களுக்கு யூடியூப்பை காணவும்)
https://www.facebook.com/childrenareimportant/videos/1291835197519527/

# --[வழக்கு 2 ]--

**குறிப்புகள்! (பாடம் 2)**

## 1 குறிப்பு #1 தலைப்பு (பாடம் 2)

காணாமல் போன பிணம் குறித்த வழக்கு

## 2 குறிப்பு #2 நாடகம் (பாடம் 2)

கதைகூறுபவர்: இது கற்பனை கதையாகும் ஆனால் அப்பாவிகளை காக்கும் பொருட்டு சில பெயர்கள் மற்றும் இடங்கள் மாற்றப்பட்டுள்ளன.

துப்பறிபவர்: அந்த காலடி தடங்களின் படங்களை பெற்றிடுங்கள், இது பார்ப்பதற்கு அமைப்பு எண் 5 போன்றுள்ளது.

தொழில்நுட்ப வல்லுநர்: சரி, என்னிடம் இங்கே ஆணின் அச்சுகள் 2 உள்ளது. அவர்கள் ஓடியிருப்பார்கள் போல் தோன்றுகிறது.

துப்பறிபவர்: நம்மிடம் இங்கே மூடு காலணியின் அச்சுகள் உள்ளன, பார்ப்பதற்கு அவர்கள் பாதுகாப்பிற்கு நின்றிருப்பார்கள்போல் தோன்றுகிறது, எத்தனை தூசில் வேலை செய்துள்ளார்கள் பார்.

தொழில்நுட்ப வல்லுநர்: இவை பார்க்க உண்மையிலேயே சிறியதாய் இருக்கிறது. இங்கே 2 பெண்கள் இருந்திருக்கவேண்டும், ஒருவேளை 3ஆகக்கூட இருந்திருக்கலாம், மிதமான உருவாக்கம்.

துப்பறிபவர்: [மீண்டும் பார்த்து மற்றொரு அச்சை கவனிக்கிறார்] இது என்ன, இது பார்ப்பதற்கு மிகவும் பெரிதாய் இருக்கிறது, தொடங்குவது [சுற்றி பார்க்கிறார்] இங்கிருந்து [சுற்றி பார்க்கிறார்] வல்லுநர்???

தொழில்நுட்ப வல்லுநர்: சொல்லுங்கள்? [கேமராவிலிருந்து நிமிர்ந்து பார்க்கிறார்]

துப்பறிபவர்: குற்றம் நடந்த இடத்தை கலைப்பதை குறித்து நான் உங்களிடம் என்ன கூறி இருக்கிறேன்?

தொழில்நுட்ப வல்லுநர்: [விழுங்குகிறார்] நான் மீண்டும் அதை செய்தால், வேலையைவிட்டு நீக்கிவிடுவீர்கள்?

துப்பறிபவர்: நீங்கள் இங்கே வேலை செய்தீர்களா?


தொழில்நுட்ப வல்லுநர்: இல்லை.

துப்பறிபவர்: உண்மையாக நன்றாக யோசித்துப்பாருங்கள், இங்கே நடந்தீர்களா, இங்கே பாருங்கள், அல்லது இங்கே இருக்கும் அழுக்கு குறித்து யோசித்துப்பாருங்கள்?
தொழில்நுட்ப வல்லுநர்: இல்லை, சத்தியமாக!
துப்பறிபவர்: நீங்கள் இங்கே வரவில்லையெனில், நானும் இங்கே வரவில்லை, பின் எவ்வாறு இவ்வளவு பெரிய காலடி தடங்கள் [காலடி தடங்களை காண்பிக்கிறார்] வேறெங்கும் இல்லாமல் இங்கே மட்டும் உள்ளது?
தொழில்நுட்ப வல்லுநர்: அந்த பெண்கள் எதையேனும் தூக்கி சென்றிருக்க கூடும்போல் தெரிகிறது.
துப்பறிபவர்: ஆம், ஆனால் அதைபோல் பெரிதாக இருக்கமுடியாது, அவர்கள் ஏதேனும் சிறியதாய், இந்த சிறிய பாட்டில்கள் மற்றும் கந்தல்கள் போன்றவற்றை எடுத்துச்சென்றிருக்கலாம்.
தொழில்நுட்ப வல்லுநர்: அதேபோல் ஓடிய ஆண்களும் இந்தளவு பெரிதான ஒன்றை தூக்கி சென்றிருக்க முடியாது.
துப்பறிபவர்: எனக்கது புரியவில்லை. என்னிடம் ஒரு ஜோடி வெறுங்கால் தடங்கள் குகைகுள்ளே செல்லாமல் வெளியே வருவது உள்ளது. அந்த ஓடிய ஆண்களின் தடங்கள், ஒரு ஜோடி மூடு காலணி தடங்கள், பின் அந்த பெரிய தடங்கள் அது எங்கிருந்தும் அல்லாமல், அந்த பெரிய பாறை நோக்கி செல்கிறது.
தொழில்நுட்ப வல்லுநர்: நேற்று இரவு நிலநடுக்கம் வந்திருக்கலாம். ஆயினும் தோட்டம் உண்மையிலேயே நன்றாக பராமரிக்கப்பட்டுள்ளது.
துப்பறிபவர்: இப்போது என்ன கூறினீர்கள்?
தொழில்நுட்ப வல்லுநர்: தோட்டம் நன்றாக பராமரிக்கப்பட்டுள்ளது?
துப்பறிபவர்: இல்லை, அதற்குமுன்...




## 3 குறிப்பு #3 இலக்கு (பாடம் 2)

வகுப்பிற்கு இந்த ஸ்தூலமான பொருளை ஒரு குறிப்பாக கொண்டுவரவும்: அலார கடிகாரம்.



## 4 குறிப்பு #4 தொல்பொருளியல் (பாடம் 2)

"மாலையுடன் ஸி ரோ" தாழ்வாரத்தில் கண்டறியப்பட்டது, அங்கேதான் பல ரகசிய குறியீடுகள் இருந்தது.(செர்க்க 350) (ரகசியம்: அது உயிர்த்தெழுதல் வெற்றியின் அடையாளமாக இருக்கிறது, மற்றும் அது ரோமானிய படைவீரர்களுக்கு மேல் காட்டப்பட்டுள்ளது.)

### 5 குறிப்பு #5 பைபிள் காட்சி (பாடம் 2)

ரகசியம்: மேரி மகதலேனா மூலம் ஊற்றப்பட்ட மசாலாக்கள், காவலாளிகளிடமிருந்து பணம், தோட்டம் மற்றும் தோட்டக்காரரின் தொப்பி ஏனெனில், மேரி அவர்தான் தோட்டக்காரறென்று எண்ணினாள்.

வழக்கு முடிந்தது வழக்கு முடிந்தது

# வழக்கு முடிந்தது! (பாடம் 2)

### பைபிள் கதை (பாடம் 2)

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்

பைபிளிலிருந்து: மத்தேயு 28; ஜான் 20: 6-9



சீடர்கள் ஆச்சர்யம் கொள்ளும்வகையில், ஜீசஸ் நடக்குமென்று அவர்களுக்கு கூறியது அனைத்தும் நடந்தது! ஆண்டவர் காட்டிக்கொடுக்கப்பட்டார், துன்புறுத்தப்பட்டார் மற்றும் சிலுவையில் அறையப்பட்டார். மூன்று நாட்கள் கழித்து, மிகவும் அதிகாலையில் தலைமை பூசாரிகள் காவலாளிகளுடன் ரகசிய கூட்டத்தை மேற்கொண்டனர். காவலாளிகள் எவ்வாறு அங்கு அத்தகைய பயங்கரமான நிலநடுக்கம் வந்ததென்று எடுத்துரைத்தனர். ஆண்டவரின் தேவதை கீழிறங்கி வந்து, கற்களை உருட்டியது மற்றும் இப்போது அதில் அமர்ந்துள்ளது என்றனர். அவர் அவரது பனி-வெள்ளை ஆடையில் மின்னுவதைபோல் தெரிகிறார். மேலும், அவர்கள் எவ்வாறு பயந்து, நடுங்கி, சுயநினைவற்று கீழே விழுந்தனர் என்பதை பகிர்ந்துகொண்டனர். தலைமை பூசாரிகள் ஒரு திட்டத்திற்கு வந்தனர், அவர்கள் காவலாளிகளுக்கு பெரியளவு பணம் லஞ்சமாக கொடுத்து, அவர்களை பொய்யுரைக்க சொன்னார்கள்,"நாங்கள் உறங்கி கொண்டிருந்தபோது, அவரது சீடர்கள் இரவில் வந்து, அவரை கவர்ந்து சென்றுவிட்டனர்" என்று கூறினார். ஆளுநர் இதை கேள்விப்படும்போது, அவர்களுக்கு நேரும் ஆபத்திலிருந்து, பாதுகாப்பளிப்பதாய் வாக்களித்தனர்.

மேரியும் மேரியும் கல்லறைக்கு சென்றபோது, தேவதை அவர்களிடம்,"பயப்படாதீர்கள், நீங்கள் சிலுவையில் அறையப்பட்ட ஏசுபிரானை எதிர்நோக்குகிறீர்கள் என்று நான் அறிவேன். அவர் இங்கில்லை; அவர் கூறியதுபோல் அவர் உயிர்தெழுந்துவிட்டார். அவர் இருக்குமிடத்தை வந்து காணுங்கள். பிறகு விரைவாக அவரது சீடர்களிடம் போய் கூறுங்கள்: 'அவர் பிறப்பிலிருந்து உயிர்த்தெழுந்து, உங்களுக்கு முன்னர் கலிலீயிக்கு செல்கிறார். அங்கே நீங்கள் அவரை காணலாம்'" என்றது. பெண்கள் கல்லறையிலிருந்து வேகமாக வெளியேறி மற்றவரிடம் சொல்ல விரைந்தனர், பின் ஜீசஸ் அவர்களுக்கு முன் தோன்றி,

"வணக்கம். பயப்படாதீர்கள். போய் என் சகோதரர்களிடம் கலிலீக்கு வருமாறு கூறுங்கள்; அங்கே அவர்கள் என்னை காண்பார்கள்" என்றார்.
பீட்டரும், ஜானும் அவர்களாக காணவிழைந்து கல்லறைக்கு விரைந்தனர். அங்கே, தலைத்துணி மற்றும் லினன் கீற்றுகள் அழகாக மடிக்கப்பட்டிருப்பதை கண்டனர். அந்த சாட்சியங்களை கண்டபிறகு, அவர்கள் உண்மையாகவே ஏசுபிரான் இறப்பிலிருந்து உயிர்தெழுந்துவிட்டார் என்று நம்பினர்!

### விண்ணப்பம் (பாடம் 2)

அனைத்தும் தவறாக போனதென்று நான் நினைக்கும்போதும், இன்னும் ஆண்டவரிடம் நம்பிக்கையுள்ளது.

### மனப்பாட வசனம் (பாடம் 2)

"தேவன் நம்பிக்கைக்குரியவர். தேவனாகிய ஒருவரே உங்களைத் தம் குமாரானாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடு வாழ்வைப் பகிர்ந்துகொள்ளும்படியாக அழைத்தார்."
1 கொரி 1: 9

### வகுப்பீடு (பாடம் 2)

உங்களுக்கு மோசமாக போய்க் கொண்டிருக்கிறதென்று நீங்கள் எண்ணிய நேரம், அது நன்றாக ஆனது குறித்து யாரிடமாவது கூறுங்கள். ஆண்டவர் அதன் மூலமாக உங்களுக்கு முக்கியமான விஷயங்களை கற்றுக்கொடுத்துள்ளார்.

### கடவுளுடைய டிஎன்ஏ (பாடம் 2)




இந்த பாடத்திலிருந்து நாம் ஆண்டவர் குறித்து கற்றுக்கொண்டது என்ன? ஆண்டவரானவர், தன்னை குறித்தும், தான் எதற்கு பூமிக்கு வந்தேனென்பது குறித்தும் மக்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்று விரும்பினார்.



## வேடிக்கை நேரம்! (பாடம் 2)

### விளையாட்டு (பாடம் 2)

வகுப்பறையில் பலூன் கால்பந்து

குழுவை இரு அணிகளாக வகுத்துக்கொள்ளுங்கள், ஒரு மீட்டர் இடைவெளியுடன், இரண்டு வரிசையாக நாற்காலிகளிலோ அல்லது தரையிலேயோ அமரச்செய்யுங்கள், ஒவ்வொரு அணியிலிருந்தும் வீரர்களை மாற்றிக்கொள்ளவேண்டும். இரண்டு முனைகளிலும், அணிகளுக்கான கோல் கம்பத்தை குறித்துக்கொள்ளுங்கள். தலைவர்,

விளையாட்டிற்காக பலூனை நடுப்பகுதியில் சுண்டிவிடுவார். எல்லா நேரமும் ஆட்டக்காரர்கள் அவர்களது இருக்கையிலேயே அமர்ந்திருக்க வேண்டும். விளையாட்டின் குறிக்கோள், பலூனை கீழே விழாமலிருக்கச்செய்து, கோல் பெறுவதேயாகும். கால்பந்தைபோல், பலூன் எல்லைக்கு வெளியே சென்றுவிட்டால், தலைவர் மற்ற அணிக்கு பலூனை வழங்கி ஆடச்செய்வார்.

## விவாதம் (பாடம் 2)

(பழைய மாணவர்களுக்காக)

1. சீடர்கள் கிறிஸ்துவின் இறப்பை தவறாக எண்ணிக்கொண்டு மறைந்திருந்தார்கள். மற்றவர் ஆண்டவரின் வார்த்தைகளை தவறாக எண்ணிக்கொள்வதை நீங்கள் எவ்வாறு புரிந்துகொள்வீர்கள்? நீங்கள் பைபிளை புரிந்து கொண்டீர்கள் என்று எவ்வாறு தெரிந்துகொள்வீர்கள்?

பைபிளை நீங்கள் புரிந்துகொள்ள உங்களது அதிகாரிகளை உதவச் சொல்லுங்கள். பைபிலின் இந்த பத்தியை நான் புரிந்து கொண்டிருப்பது பைபிளின் மற்ற பத்தியின் தெளிவான அர்த்தத்திலிருந்து மாறுபடாமல் இருப்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும்.

2. ஆண்டவர் என்ன செய்தார் என்பதுகுறித்து மக்களிடம் தெரிவிக்காமலிருக்க வீரர்கள் அழுத்தம் கொடுக்கப்பட்டனர். ஆண்டவர் குறித்து மக்களிடம் தெரிவிக்க எண்ணும்போது நீங்கள் என்னென்ன அழுத்தங்களை தாங்கவேண்டியிருக்குமென்று எண்ணுகிறீர்கள்?

மிகவும் நல்லவர்களாக அல்லது அதீத மதஉணர்வோடு நாம் இருக்கக்கூடாதென்று நண்பர்கள் நமக்கு அழுத்தம் கொடுப்பதுகுறித்து குழந்தைகளை பேசச்சொல்லுங்கள், இது, குழந்தைகள் ஈடுபாட்டோடு இருக்கும்வரையும் மற்றும் அவர்கள் மீண்டும் மீண்டும் பொதுவான பதில்களை கூறாமல் இருக்கும்வரை மட்டுமே செயல்படுத்தவேண்டும். நாம் சுயநலமாகவும், நம்மை திருப்தி கொள்ளச்செய்யும் வண்ணம் செயலாற்றுவதால் ஏற்படும் உள் அழுத்தங்கள் குறித்து பேசுங்கள்.



பயனற்ற நடவடிக்கைகளை அது நல்லது ஆரோக்யமானதென்று கருதி செயல்படுத்துவது எளிதுதான், ஆனால் அவை அளவுகடந்து போகும்போது ஆபத்தாகிவிடுகிறது. குடும்பத்தினால் ஏற்படும் அழுத்தங்களை தவிர்க்காதீர்கள். உறவினர்கள் ஏசுபிரான் குறித்து பேசவேண்டாம் என்பார்கள், அல்லது அவர்களது மத நிகழ்ச்சிகளில் பங்குகொள்ள செய்ய நமக்கு அழுத்தம் கொடுப்பார்கள். இத்தகைய ஒவ்வொரு மனஅழுத்தத்திலும் ஒரு சமன்பாடு உண்டு, நம்மை சுற்றி இருக்கும் மக்களை நேசிக்கும்போது ஒத்திவைத்தலும், அவர்களுக்கு மரியாதையை கொடுப்பதும் தேவையாய் இருக்கிறது, ஆனால் அதே நேரத்தில், ஆண்டவர் நாம் அவரது நம்பிக்கைக்கு உகந்தவராய் இருக்கவேண்டுமென்று கேட்கிறார்.


3. சீடர்களுக்கு சேதியை சேர்ப்பிக்கும் ஒரு பெண்ணைத்தான் ஆண்டவர் தொடர்புகொள்ள தேர்வுசெய்தார். ஒருவேளை சீடர்கள் அவர்களுக்கு


செவிசாய்க்காமல் இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும்? நாம் மற்றவர் மூலம் நமக்கான ஆண்டவரின் செய்திகளை தவறாமல் பெற்றுக்கொள்கிறோம் என்பதை எவ்வாறு உறுதிசெய்து கொள்வது?

தேவாலயத்தில் சர்ச்சைக்குரிய உரையாடல் ஒன்றை தொடங்க பெண்கள் குறித்த தலைப்பில் குழந்தைகளை பேசச்செய்யுங்கள். தேவாலயத்தில், சிறிது நேரத்திற்கு ஒரு பெண்ணின் நிலையில் இருந்து அவர்களை பேசச்செய்யுங்கள், பின்னர் எபேசியர் 4 மற்றும் 1 கொரிந்தியர் 12 ல் ஆண்டவர் தெளிவாக கூறியுள்ள செய்தியான, அவர் வேறுபட்ட பரிசுகளை வேறுபட்ட மனிதர்களுக்கு வழங்கியுள்ளார், ஒருவேளை நாம் மற்றவர் கூறுவதற்கு செவிசாய்க்காமல் போனால், அவர்கள் மூலமாக ஆண்டவர் நமக்கு தரவிருந்த பரிசு குறித்து நமக்கு தெரியாமல் போய்விடும் என்பதை பார்க்கச்செய்யவும்.

## மாணவர் பக்கங்களுக்கான விடைகள் (பாடம் 2)



## லூக்காஸின் பரிசோதனை (பாடம் 2)

மாணவர்களை மூன்று மறைக்கப்பட்ட பொருட்கள் குறித்து கருத்தில்கொள்ள செய்யுங்கள்: ஒரு பொருள் மறைக்கப்பட்டிருக்கும், கண்டுபிடிக்கமுடியும்; ஒரு பொருள் மறைக்கப்பட்டிருக்கும், கண்டுபிடிக்கமுடியாது; அடுத்த பொருள் மறைக்கப்பட்டிருக்கும், அதன் போக்கிலேயே விடப்பட்டிருக்கும். ஒரு வேடிக்கை செயல்பாடாக, அவர்களுக்காக உங்கள் வகுப்பறையிலேயே சில பொருட்களை மறைத்து வைத்து கண்டுபிடிக்க செய்யுங்கள். (விவரங்களுக்கு யூடியூப்பை காணுங்கள்)

https://www.facebook.com/childrenareimportant/videos/1291864664183247/

# --[வழக்கு 3 ]--



**குறிப்புகள்! (பாடம் 3)**

## 1 குறிப்பு #1 தலைப்பு (பாடம் 3)

ஒரு மனிதன் கப்பலிலிருந்து தூக்கியெறியப்பட்ட வழக்கு

## 2 குறிப்பு #2 நாடகம் (பாடம் 3)

கதைகூறுபவர்: இது கற்பனை கதையாகும் ஆனால் அப்பாவிகளை காக்கும் பொருட்டு சில பெயர்கள் மற்றும் இடங்கள் மாற்றப்பட்டுள்ளன.

கேப்டன்: நானொரு புகார் அளிக்கவேண்டும்.

கடலோர காவல்படை: சரி, இதோ அசாதாரண நிகழ்வுகள் குறித்து புகார் அளிக்க நிலையான படிவங்கள். உங்களுக்கு எந்த படிவம் வேண்டும்?

கேப்டன்: கடலில் ஆள் விழுதல்.

கடலோர காவல்படை: சரி, உங்களால் அவரை மீட்க முடிந்ததா?

கேப்டன்: இல்லை ஐயா, எங்களால் முடியவில்லை.

கடலோர காவல்படை: வானிலை எவ்வாறு இருந்தது? நீங்கள் அந்த மோசமான புயலில் மாட்டிக்கொண்டீர்களா?

கேப்டன்: ஆம் ஐயா, அது எங்களை கொண்டு சென்றிருக்கும்.



கடலோர காவல்படை: சரி, உங்களது சரக்கையும் இழந்துவிட்டிர்களா? நீங்கள் ஒருவேளை உங்கள் சரக்குகள் மற்றும் தனிப்பட்ட பொருட்களை தொலைத்திருந்தால் இந்த ஒரு படிவத்தையும் பூர்த்தி செய்யுங்கள்.

கேப்டன்: அவர் ஒரு பயணி.

கடலோர காவல்படை: அப்படியா, சரி, நீங்கள் இந்த கூடுதல் படிவத்தையும் பூர்த்தி செய்யவேண்டும், எனவே நாங்கள் இறந்தவரின் குடும்பத்திற்கு தகவல் கொடுப்போம், அவரது உடைமைகள் ஏதாவது வைத்திருந்தாரா?

கேப்டன்: ஐயா, அவர் இறந்துவிட்டார் என்று என்னால் உறுதியாக கூறமுடியாது.

கடலோர காவல்படை: நீங்கள் அவரை கடலில் அந்த மோசமான புயலில் தொலைத்தீர்கள்தானே?

கேப்டன்: ஆம், ஆனால் அது கிட்டத்தட்ட புயலின் முடிவில்தான்.

கடலோர காவல்படை: அவருக்காக நீங்கள் மீண்டும் போக முயற்சித்தீர்களா?

கேப்டன்: அது அவர்... நாங்கள் அவரிடம் செல்லும் முன் மறைந்துவிட்டார்...

## 3 குறிப்பு #3 இலக்கு (பாடம் 3)

வகுப்பிற்கு இந்த ஸ்தூலமான பொருளை ஒரு குறிப்பாக கொண்டுவரவும்: மீன் பிடிக்கும் கொக்கி.


## 4 குறிப்பு #4 தொல்பொருளியல் (பாடம் 3)




நினிவேவாவின் ஏகாதிபத்திய நகரம் பெரியதாய், 150,000 மேலான மக்கள் தொகையுடன், அற்புதமான அரண்மனைகள் மற்றும் கோயில்கள் மற்றும் பெரிய சுவர்கள் மற்றும் கோபுரங்கள் கொண்டிருக்கும். இந்த நவீன படம், சில பகுதிகள் மறுகட்டமைப்புப் பெற்ற பழைய நினிவேவாவின் சுவர்களை காட்டுகிறது. (ரகசியம்: நினிவேவாவிற்குதான் ஆண்டவர் ஜோனாவை அனுப்பினார்.)

## 5 குறிப்பு #5 பைபிள் காட்சி (பாடம் 3)

ரகசியம்: ஒரு படகில், பகடை போடப்பட்டது ஏனெனில், மாலுமிகள் "சீட்டு குலுக்கிப்போட்டு பார்த்தனர்", புயல் மேகம் மறையத்தொடங்கியது ஏனெனில் புயல் அமைதி அடைந்தது.



# வழக்கு முடிந்தது! (பாடம் 3)

## பைபிள் கதை (பாடம் 3)

ஜோனா

பைபிளிளிருந்து: ஜோனா 1



நினிவேவாவின் நகரமானது தீய செயல்களை ஆண்டவரின் தளத்தில் செய்துகொண்டிருந்தது, ஆண்டவர் ஜோனாவை அங்கு அனுப்பி அவர்களை எச்சரிக்க சொன்னார். ஆண்டவர் அந்த பாவம் நிறுத்தப்படவேண்டுமென்று விரும்பினார். கீழ்ப்படிவதற்கு பதிலாக, ஜோனா தப்பியோட முடிவு செய்து, தன்னை தொலைதூரம் கூட்டிச்செல்லும் ஒரு கப்பலை கண்டுபிடித்தான். ஜோனா இரவு தூங்க சென்றதும், கப்பல் குழு ஒரு புயல் வருவதை கண்டனர். சில மணிநேரங்களுக்கு பின், கேப்டன் ஜோனாவை கண்டு இத்தகைய பயங்கரமான புயலில் அவன் எவ்வாறு தூங்குகிறான் என்று தனக்கு தெரியவேண்டுமென்று நிர்பந்தித்தார். கப்பல் மூழ்கப்போகிறதென்று குழுவிற்கு தெரிந்து விட்டது, ஆனால் அவர்கள் ஆண்டவர் ஏன் இவ்வாறு செய்கிறார் என்று தெரிந்துகொள்ள விரும்பினர். சீட்டு குலுக்கிப்போட்டு பார்த்து, யாருடைய தவறு இது என்று கண்டறியலாம் என்பதால், அதுதான் சரியான வழியாக இருக்குமென்று அவர்கள் அதை செய்வித்தனர், அது ஜோனாவை கைகாட்டியது. அவர்கள் என்ன நடக்கிறதென்று தெரிந்துகொள்ள விரும்பினர், எனவே ஜோனா தனது பாவங்களை ஒப்புக்கொண்டு தன்னை கடலுக்குள் தூக்கியெறியும்படி கூறினான். அத்தகைய கொடூரச்செயலை செய்ய குழு விரும்பவில்லை, எனவே அவர்கள் கப்பலை கரைக்கு திருப்ப எண்ணினர். ஆனால் ஜோனாவை தூக்கியெறிவதுதான் சரியானது என்று முடிவு செய்யும்வண்ணம் புயல் மோசமாகிக்கொண்டே போனது. ஜோனா தண்ணீரை முட்டியதும், புயல் ஓய்ந்தது... கப்பலும் காப்பாற்றப்பட்டது! ஆனால் ஜோனா நீந்த தொடங்கினான், அப்போது ஒரு பெரிய மீன் வந்து அவனை விழுங்கியது. மூன்று பகல் மற்றும் மூன்று இரவுகள், ஜோனா மீனின் வயிற்றுக்குள் இருந்து ஒன்றே ஒன்றுதான் செய்ய முடிந்தது; அது பிரார்த்திப்பது. அவன் ஆண்டவரிடம் மன்னிப்பு கோரினான், அவனது பாவங்களுக்காக மனம் வருந்தினான், ஆண்டவரிடம் அவர் என்ன கூறினாலும் செய்வேனென்று உறுதியளித்தான். ஆண்டவர் அவனது பிரார்த்தனைக்கு பதிலளிக்கும்விதமாக, மீனானது அவனை வறண்ட நிலத்தில் துப்பும்படி செய்தார்.

## விண்ணப்பம் (பாடம் 3)

நான் என் பாவத்தை காணும்போது, அதற்காக மனம் வருந்தி, அதை நிறுத்த வேண்டும்.

## மனப்பாட வசனம் (பாடம் 3)

"எனவே நீங்கள் உங்கள் இருதயங்களையும், வாழ்க்கையையும் மாற்றிக்கொள்ளுங்கள்! தேவனிடம் திரும்புங்கள். அவர் உங்கள் பாவங்களை மன்னிப்பார்." அப்போஸ்தலர் 3:19

## வகுப்பீடு (பாடம் 3)

இந்த வாரம் நீங்கள் தவறாக சொன்ன அல்லது வெட்கப்படும்படியாக செய்த, மற்றும் பகிரங்கமாக காணமுடியாத வீடியோவாக ஏதாவதொன்றை குறித்து எண்ணிப்பார்க்கும் கூடுதல் உணர்திறனோடு இருங்கள். மனம் வருந்துங்கள். யோசிப்பதற்கு உதவும்படி ஆண்டவனிடம் கேளுங்கள் மற்றும் அதை மீண்டும் செய்யும்முன் நிறுத்துங்கள்.

## கடவுளுடைய டிஎன்ஏ (பாடம் 3)




இந்த பாடத்தின் வாயிலாக ஆண்டவர் குறித்து நாம் என்ன கற்றுக்கொண்டோம்? ஆண்டவர் தனது மக்கள் எளிதான வாழ்வை வாழ்வதைவிட கீழ்ப்படிதலோடு இருப்பதையே அறிவுறுத்துகிறார்.



# வேடிக்கை நேரம்! (பாடம் 3)

## விளையாட்டு (பாடம் 3)

மீன் வால்கள்

ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு பழைய காலுறை (நூல், சரம், காகிதம் அல்லது துணிகூட வேலைசெய்யும்) கொடுத்து அதை அவன்/அவள் பின் பாக்கெட் அல்லது இடுப்பு பகுதியில் சொருக சொல்லுங்கள். விளையாட்டின் இலக்ககானது, தனது வாலை இழந்துவிடாமல் மற்றவரின் வாலை எடுப்பதேயாகும். வாலை இழந்த ஆட்டக்காரர் யாராயினும் கீழே அமர்ந்துகொள்ளவேண்டும், ஆனால் வேறெந்த விளையாட்டாளராவது அருகே வந்தால், வால் இழந்த ஆட்டக்காரர் அந்த வாலை உருவி தனக்கான புது வாலாய் வைத்துக்கொண்டு மீண்டும் விளையாட்டில் கலந்துகொள்ளலாம்.

## விவாதம் (பாடம் 3)

(பழைய மாணவர்களுக்காக)



1. லூக்கா 11:30 நம்மை ஜோனா மற்றும் இயேசுவை ஒப்பிடும்பொருட்டு அழைக்கிறார், ஜோனா மற்றும் ஜீசஸின் கதைகளிலிருந்து நீங்கள் எத்தனை ஒற்றுமையை கண்டறியமுடியும்?

இந்த பயிற்சி அவர்கள் தங்களின் சொந்த யோசனைகளை பயன்படுத்தும்போது சிறப்பாக வேலைசெய்யும். அவர்களை ஜோனாவை படிக்கச்செய்து, சிறிதளவு இணைப்பு கொண்ட விடைகளை ஒப்புகொள்ளச்செய்யுங்கள். கீழ்வரும் பட்டியல் சில ஒப்புக்கொள்ளக்கூடிய ஒற்றுமைகளை கொண்டுள்ளது:

- கல்லறை/மீனில் 3 நாட்கள் இருப்பது
- தேவனுடைய வார்த்தை கொண்டுவருவது
- நீண்ட நடை/பயணம்
- புயலின்போது படகின் அடிபாகத்தில் உறங்குவது
- ஒரு புயலை அடக்குதல்
- மனந்திரும்பியதற்காக பிரசங்கம் செய்தல்
- உண்மையான கொலையாளிகள் அப்பாவி மனிதனின் இறப்பில் தங்கள் கைகளை சுத்தம் செய்ய முயலுதல்.
- கடவுளின் பார்வையிலிருந்து அகற்றப்படுவது
- நகருக்கு வெளியே தளர்ந்த கொடி/மரம்

2. அறிவுறுத்தல்களை புறக்கணிப்பதற்கும் அவற்றிற்கு கீழ்ப்படியாமல் இருப்பதற்குமான வேற்றுமை என்ன?


ஒரு வகையில் அவை ஒத்தவைதான். ஏனெனில், அவைகளுக்கு ஒரே வெளியீடுதான் உள்ளது. மற்றொரு வகையில், நான் சொல்லப்பட்டதை செய்யவில்லை. ஆனால் இது பைபிளிலிருந்து தெளிவாக தெரிகிறது, ஆண்டவர் நமது மனம் மற்றும் நோக்கங்களுக்காக அக்கறைகொள்கிறார். ஆனால், சில நேரங்களில், நமது செயல்களுக்கு நாம் பொறுப்பில்லை ஏனெனில், நாம் அதை நினைத்து அச்செயலை மேற்கொள்ளவில்லை என்று கூறும்வகையில் மன்னிப்புகோருகிறோம். இந்த சங்கதி குறித்து உங்கள் மாணவர்களை இன்னும் அதிகமாக கலந்துரையாட சொல்லுங்கள்.

3. மன்னிக்க கூடாத அளவு எந்த செயல்கள் மிகவும் மோசமானவை?

உங்கள் மாணவர்களுடன் பல்வேறு தீய செயல்கள் குறித்து எடுத்துக்காட்டாக, தொடர் கொலைகாரர்கள், மிரட்டுபவர்கள் மற்றும் அந்த நபர் சிறப்பாய் இருக்க முயற்சிகூட செய்யவில்லை என்பதை தெளிவாக காட்டும் இதர பாவங்கள் போன்றவை குறித்து உரையாடுங்கள். குழந்தைகளுக்கு போதை வஸ்துகள் விற்பவர்கள் குறித்து என்ன நினைக்கிறீர்கள்? (ஜோனா ஆண்டவர் நினிவேவாவின் மக்களை மன்னிப்பதை விரும்பவில்லை, ஆனால் ஆண்டவர் நம் எல்லோரையும் மன்னிக்குமளவு கருணைவாய்ந்தவர்.)

## மாணவர் பக்கங்களுக்கான விடைகள் (பாடம் 3)





## லுக்காஸின் பரிசோதனை (பாடம் 3)

மாணவர்களை ஒரு பாத்திரத்தில் தண்ணீரை எடுத்துக்கொண்டு அதை சமுத்திரமாக நினைத்து மார்ஷ்மெல்லோவை வெட்டி மற்றும் அதன்மேல் ஒரு மரத்தை நட்டு (பல்குத்தி) மார்ஷ்மெல்லோ தீவை உருவாக்க செய்யவும். அதன்மேல் ஒரு தெளிவான கண்ணாடியை வைத்து மார்ஷ்மெல்லோவை பாதியளவு மூழ்க செய்யவும். வேடிக்கைக்காக, தீவிலிருப்பவர்கள் காணும்படி மீன் மற்றும் மற்ற சிலவற்றை வரையவும். (விவரங்களுக்கு யூடியூப்பை காணுங்கள்)
https://www.facebook.com/childrenareimportant/videos/1291904010845979/

# --[வழக்கு 4]--

**குறிப்புகள்! (பாடம் 4)**

## 1 குறிப்பு #1 தலைப்பு (பாடம் 4)

அநாமதேய உதவியாளரின் வழக்கு

## 2 குறிப்பு #2 நாடகம் (பாடம் 4)

கதைகூறுபவர்: இது கற்பனை கதையாகும் ஆனால் அப்பாவிகளை காக்கும் பொருட்டு சில பெயர்கள் மற்றும் இடங்கள் மாற்றப்பட்டுள்ளன.
காவல் அதிகாரி: மன்னிக்கவேண்டும், நானும் எனது கூட்டாளியும் உங்களிடம் சில கேள்விகள் கேட்க விரும்புகிறோம்.
பாதசாரி: கண்டிப்பாக அதிகாரி, இது எதற்கு?
காவல் அதிகாரி: நெடுஞ்சாலையில் நேற்றிரவு, ஒரு வண்டி இடித்துவிட்டு ஓடிவிட்டதாக ஒரு புகார் வந்துள்ளது.
பாதசாரி: அடடா. அதனால்தான் நான் அந்த நெடுஞ்சாலைகளில் தனியாக போவதில்லை. அதிகாரிகளான நீங்கள் மிகவும் குறைவாக இருத்தப்பட்டிருக்கிறீர்கள், எனவே நெடுஞ்சாலைகள் அத்தகைய கொள்ளைக்காரர்களால் நிரம்பியுள்ளது.
காவல் அதிகாரி: [அவரது கூட்டாளியை பார்க்கிறார்] நான் கொள்ளையர்கள் பற்றி எதுவும் சொல்லவில்லையே, நீ சொன்னாயா?
காவல் அதிகாரி 2: இல்லை, கண்டிப்பாக நான் சொல்லவில்லை.
காவல் அதிகாரி: அவர்கள் கொள்ளையர்கள் என்று உங்களுக்கு எப்படி தெரியும்? நேற்றிரவு நீங்கள் எங்கு இருந்தீர்கள் என்று கூறுகிறீர்களா?
பாதசாரி: பெருமூச்சுவிட்டபடியே, நான் என் குடும்பத்தை காண அருகிலிருக்கும் புகலிட நகருக்கு சென்றிருந்தேன், இன்று காலை பணிக்கு திரும்பவேண்டுமென்று நேற்றிரவு நான் வந்துவிட்டேன்.
காவல் அதிகாரி: அப்போது நேற்று இரவு நீங்கள் நெடுஞ்சாலையில் இருந்துள்ளீர்கள்?
பாதசாரி: ஆம் ஐயா.
காவல் அதிகாரி: நீங்கள் 180செ.மீ. உயரம், நடுத்தர உடற்கட்டு, அழுக்கான அழகிய போக்கிரி போன்ற ஆணை சாலையோரத்தில் அடிபட்டிருந்ததை பார்த்தீர்களா?

பாதசாரி: இல்லை, ஒருவேளை, நான் சிலவற்றை பார்த்தேன். ஆனால் உண்மையாக நான் அவனை நன்றாக பார்க்கவில்லை.

காவல் அதிகாரி 2: [குறிப்பேட்டை வெளியே எடுத்து, குறித்து கொள்கிறார்]

காவல் அதிகாரி: நீங்கள் அவனை பார்க்கவில்லையா அல்லது பார்க்க விரும்பவில்லையா?

பாதசாரி: இதோ பாருங்கள், எனக்கு பணிக்கு அழைப்பு வந்துவிட்டது, என்னால் அதிகமாக இதில் ஈடுபட முடியாது. சேவையாற்ற என்னை அவர்கள் அழைத்தால் என்ன செய்வது? அவர்கள் என்னை அழைக்கும்முன் எத்தனை நேரம் அங்கிருந்தார்களோ யாருக்கு தெரியும்.




காவல் அதிகாரி 2: ஹாஹாஹாஹா. அவர் உதவிசெய்ய விரும்பவில்லை ஏனெனில், அவர் சேவை செய்ய அழைக்கப்பட்டிருந்தார், ஹாஹா, வேடிக்கையாய் இருக்கிறது, நீங்கள் அழைக்கப்பட்டீர்களா?

பாதசாரி: அதை கண்டுகொள்ளாதீர்கள், அது முக்கியமல்ல.

காவல் அதிகாரி: அவ்வளவு கேள்விகள்தான் என்னிடம் உள்ளது. தேவைப்பட்டால் உங்களை அழைக்கலாமா?


பாதசாரி: எப்போது வேண்டுமானாலும், உங்களுக்கு உதவுவதில் மகிழ்ச்சி.

காவல் அதிகாரி 2: [பாதசாரியை நம்பிக்கையை இல்லாமல் பார்க்கிறார்]

## 3 குறிப்பு #3 இலக்கு (பாடம் 4)

வகுப்பிற்கு இந்த ஸ்தூலமான பொருளை ஒரு குறிப்பாக கொண்டுவரவும்: பேண்ட்-எயிட்.

## 4 குறிப்பு #4 தொல்பொருளியல் (பாடம் 4)



மருத்துவமனையின் அவசர நுழைவாயில் வழியாக வருகிறார்கள், ஒரு பொது மருத்துவமனை.
(ரகசியம்: நல்ல சமாரிடன் தாக்கப்பட்ட மனிதனை உதவிக்காக அனுப்பியிருக்கலாம்.)

## குறிப்பு #5 பைபிள் காட்சி (பாடம் 4)

ரகசியம்: காலியான பையும் நாணயங்களும் புரட்டப்பட்டது, ஏனெனில் அவன் திருடப்பட்டான், சாலையின் எதிர் புறத்தில் பூசாரி மற்றும் பரிசேயனின் 2 ஜோடி கால்தடங்கள், இப்போது அங்கில்லாத அடிக்கப்பட்ட மனிதனின் உடல் பதிவு.

வழக்கு முடிந்தது வழக்கு முடிந்தது

# வழக்கு முடிந்தது! (பாடம் 4)

## பைபிள் கதை (பாடம் 4)

நல்ல சமாரியன்

பைபிளிலிருந்து: லூக்கா 10: 25-37



சட்டத்தில் வல்லுநரான ஒருவர் ஏசுபிரானை தனது விடுகதை மூலம் சோதிக்கப்பார்த்தார், "நித்திய வாழ்வை அடைய நான் என்ன செய்யவேண்டும்?" என்று கேள்வியெழுப்பினார், ஆண்டவர் அவருக்கு தலைசிறந்த கட்டளை மூலம் விடையளித்தார்: 'அவர் பிரதியுத்தரமாக: உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழுஆத்துமாவோடும், உன் முழுப்பலத்தோடும் உன் முழுச்சிந்தையோடும் அன்புகூர்ந்திரு, என்று எழுதியிருக்கிறது என்றார்'; மற்றும், 'உன்னிடத்தில் அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக' என்றார். அந்த வல்லுநர் தன்னை நீதிமான் என்று காண்பிக்க மனதாய் இயேசுவை நோக்கி: "எனக்குப் பிறன் யார்?" என்று கேட்டான். யாரிடமெல்லாம் கருணையுடன் இருக்கவேண்டுமென்ற பட்டியலுக்கு பதிலாக, ஏசுபிரான் பின்வரும் கதை மூலம் பிறன் யார் என்பதை கூறுகிறார்.

ஜெருசலேமிலிருந்து ஜெரிக்கோ செல்லும் ஒரு மண் படர்ந்த சாலையில், சில திருடர்கள் ஒரு மனிதனை அவன் கிட்டத்தட்ட சாகும்வரை அடித்து அவனது உடைகளை எடுத்துவிடுகின்றனர். புழுதியில், நிர்வாணமாக, ரத்தம் வடிய, நடக்கமுடியாமல் கிடக்கையில் அங்கே ஒரு பூசாரி வருவதை பார்க்கிறான்.

அங்கே நின்று உதவாமல், அவர் சாலையின் எதிர்புறத்தில் செல்கிறார். அதிலிருந்து சிறிது நேரத்தில், நல்ல, கடவுளுக்கு பயந்த குடும்பத்தில் இருந்து (லேவியர்கள் போல்) ஒரு மனிதன் வருகிறான். அவர்கள் ஒருவருக்கொருவர் பார்த்துக்கொண்டபோது, அவர் சாலையை கடந்து, அவன் பக்கம் வராததுபோல் சென்றுவிடுகிறார். பின்னர் அவ்விடத்திற்கு, தேவாலயத்தில் வரவேற்கப்படாத, கடவுளை அனைத்து தவறான வழிகளிலும் பிரார்த்திக்கும் (ஒரு சமாரிடன்) ஒரு அழுக்கான வெளிநாட்டவர் வருகிறார், அவர் அவனை கண்டு இரக்கம்கொள்கிறார். இந்த வெளிநாட்டவர் நின்று, அவனுக்கு சிகிச்சையளித்து, அவனை ஒரு விடுதிக்கு அழைத்து சென்று அவனுக்கான அனைத்து செலவுகளான: விடுதி, செலவுகள், மற்றும் அவரை பார்த்துக்கொள்ள ஒருவரை நியமிப்பது போன்ற அனைத்தையும் பார்த்துக்கொள்கிறார்.

"இந்த மூவரில் திருடர்கள் கையில் சிக்கிக்கொண்ட அந்த மனிதனின் பிறன் யாரென்று நீங்கள் நினைக்கிறீர்கள்?" சட்டத்தில் வல்லுனரான அவர் கூறினார், "அவனிடம் இரக்கம் கொண்டவர்தான்." இயேசு கூறினார், "போய் அதையே செய்யுங்கள்."

### விண்ணப்பம் (பாடம் 4)

அந்த நல்ல சமாரிடன் போல், நானும் மற்றவரிடம் கருணையோடு இருக்கவேண்டும்.

### மனப்பாட வசனம் (பாடம் 4)

"உங்களிடத்தில் அன்பு செலுத்துவோரிடமே நீங்கள் அன்பு செலுத்துவீர்களானால் உங்களுக்கு என்ன கைம்மாறு கிடைக்கும்? வரி தண்டுவோரும் இவ்வாறு செய்வதில்லையா?" மத்தேயு 5:46

### வகுப்பீடு (பாடம் 4)

உங்களுக்கு நண்பர் அல்லாத ஒருவரை தேர்ந்தெடுங்கள், அவரிடம் நட்புடன் பழகுங்கள். பள்ளி முடிந்ததும் உங்களுடன் விளையாட வருமாறு அவரை அழையுங்கள் அல்லது உங்கள் உணவு இடைவேளையின்போது அவரை அழைத்து உங்களுடன் அமரச்செய்யுங்கள்.

### கடவுளுடைய டிஎன்ஏ (பாடம் 4)

இந்த பாடத்திலிருந்து நாம் ஆண்டவர் குறித்து என்ன கற்றுக்கொண்டோம்? ஆண்டவர் நாம் மற்றவருக்கு உதவ வேண்டுமென்று விரும்புகிறார்.

கடவுளுடைய டிஎன்ஏ



# வேடிக்கை நேரம்! (பாடம் 4)

## விளையாட்டு (பாடம் 4)

நண்பனின் சீட்டு

இந்த வெளிப்புறத்தில் விளையாடும் பார்ட்டி விளையாட்டிற்கு குறைந்தது 6 விளையாட்டாளர்கள் (இன்னும் அதிகமாக இருந்தாலும் நல்லதுதான்!) தேவை. தொடங்குவதற்கு, ஒரு நபர் "அது"வாகவும், இன்னொருவர் ஓடுபவராகவும் இருக்கவேண்டும். மற்றனைவரும் நண்பன், இணைக்கரங்கள் போன்றவற்றை கண்டுபிடித்தும், விளையாட்டு இடம் முழுவதும் சிதறியும் இருக்கவேண்டும். "அது" ஓடுபவரை குறிக்க முயற்சி செய்வார். ஓடுபவர் அதற்கு முன்னதாக, ஒரு ஜோடி நண்பர்களுடன் இணைக்கரங்கள் பிடித்து கொள்ளவேண்டும். ஓடுபவர் ஒரு நண்பரை கண்டுகொண்டதும், அந்த நண்பனின் ஜோடி ஓடுபவராகிவிடுவார். ஒருவேளை ஓடுபவர் குறிப்படுவதற்குமுன் நண்பருடன் இணையவில்லையெனில், அவர் "அது"வாகிவிடுவார் மற்றும் "அது" ஓடுபவராகிவிடுவார்.

பாலர் விருப்பம்: நட்பு வலை

தரையில் குழந்தைகளை ஒரு இறுக்கமான வட்டமாக அமரச்செய்யுங்கள். ஒரு பெரிய நூற்பந்தை கொண்டு ஒரு குழந்தையை சுட்டிக்காட்டி, "நான் மகிழ்ச்சியாய் இருந்தது எப்போது?" என்று கேளுங்கள். அந்த குழந்தை விடையளித்ததும், நூற்பந்தை கொடுத்து, அதன் ஒரு முனையில் இறுக்கமாக பிடித்திருப்பதை உறுதி செய்துகொண்டு, பின் வட்டத்திலுள்ள மற்ற நண்பரை அதே கேள்வி "நான் மகிழ்ச்சியாய் இருந்தது எப்போது?" என்று அவர்கள் கேட்பார்கள். நூற்பந்தை அவர்களிடம் உருட்டிவிடுங்கள்; இதேபோல் அனைத்து குழந்தைகளும் பதிலளிக்கும்வரை செய்யுங்கள். இந்த விளையாட்டில் குழந்தைகள் ஆர்வம்காட்டினால், "நான் சோகமாக இருந்தது எப்போது?" என்று கேள்வியை மாற்றுங்கள், பந்தை கடத்துங்கள். முடிந்ததும், குழந்தைகளை எழ செய்து அவர்களின் நூலை திடமாக பிடிக்கச்செய்யுங்கள். இப்போது உங்களிடம் நட்பு வலை உள்ளது.

## விவாதம் (பாடம் 4)

(பழைய மாணவர்களுக்காக)

1. பள்ளியில் ஒரு புது மாணவருக்கு நீங்கள் பிறனாக இருந்தால் எப்படி இருக்கும்? ஒரு பிச்சைக்காரருக்கு? தொல்லைகொடுக்கும் ஒரு இளைய சகோதரன்/சகோதரிக்கு?



மாணவர்களை மற்றவர்களுக்கு உதவுவது குறித்து பேச செய்யுங்கள், அவர்களுக்கு பிடிக்காதிருப்பினும், அல்லது ஒரு புது குழந்தைக்கு உதவும்போது அவர்கள் பகிரங்கமாக மாட்டிக்கொண்டால் என்ன

செய்வார்கள் போன்றது குறித்து பேசச்செய்யுங்கள். நமது இளைய உடன்பிறந்தாருக்கு உதவுவது எத்தகைய சிரமம் என்பது குறித்து பேசுங்கள்.

2. ஒரு பிரபலமான நபர் சமீபத்தில் தங்களை எவ்வாறு நியாயப்படுத்தியுள்ளார் என்ற ஒரு எடுத்துக்காட்டு கொடுங்கள். அந்த சூழ்நிலையில் அவர்கள் ஆண்டவர் மற்றும் பிறனுக்கு அவரது அன்பை வழங்க முற்படும்போது எவ்வாறு அந்த சூழலில் நடந்துகொண்டிருப்பார்கள்?


அரசியல்வாதிகள், கலைஞர்கள், தடகள வீரர்கள் மற்றும் நடிகர்கள் போன்றோர் அவர்களது மோசமான செயல்களுக்காக அடிக்கடி செய்திகளில் வருகிறார்கள். குழந்தைகளுக்கு மிகவும் தெரிந்த அத்தகைய ஒருவரை எடுத்து, அவர் என்ன செய்தார் என்பது குறித்து பேசுங்கள். குழந்தைகள் அதில் ஈடுபட்டு இரண்டு பக்கம் பேசினார்கள் என்றால், பின் அந்த உரையாடலை ஆண்டவரின் அன்பைக்காட்ட அவர்கள் என்ன செய்திருக்கவேண்டுமென்ற திசைக்கு இட்டுச்செல்லுங்கள், ஆனால் அவர்களின் முதல் பதிலிலேயே ஒப்புக்கொள்ளாதீர்கள், முடிந்தவரை அவர்களை ஈடுபடசெய்ய்யுங்கள்.


3. ஒருவர் விதியை நெருக்கமாக பின்பற்ற முயன்று, ஆனால் அதை செய்ய மிகவும் அடிப்படையான சட்டம் அல்லது விதியை தகர்த்து அதில் தோற்ற சமீபத்திய ஒரு சூழலை விளக்குங்கள்.

நீங்கள் பள்ளியிலுள்ள விதிகள், காவல்துறை செயல்படுத்தும் சட்டங்கள், தேவாலயம் அல்லது அர்த்தமில்லாத விதிகளைக்கொண்ட பல இடங்கள் குறித்து பேசலாம். எடுத்துக்காட்டாக: பள்ளியின் மன்றத்தில் ஓடி, பிரச்சனையில் மாட்டிக்கொள்வது, நீங்கள் அதை வகுப்பிற்கு நேரத்திற்கு செல்லவேண்டுமென்றுதான் செய்திருப்பீர்கள். அல்லது நீங்கள் ஒரு அழிப்பானை கடனாக பெறத்தான் அருகிலிருப்பவருடன் பேசியிருப்பீர்கள், அதற்கு பிரச்சனையில் மாட்டிக்கொள்வது, அல்லது வகுப்பிற்கு நேரத்திற்கு செல்லவேண்டுமென்று நீங்கள் வேலியைத்தாண்டி குதிக்கும்போது உங்கள் கம்பளி சட்டை கிழிந்துபோய், அதற்காக வீட்டில் பிரச்சனையில் மாட்டிக்கொள்வது.

## மாணவர் பக்கங்களுக்கான விடைகள் (பாடம் 4)










## லுக்காஸின் பரிசோதனை (பாடம் 4)

இந்த பரிசோதனை தொலைநோக்கு பார்வையுடன் காண்பதற்கு உதவும், மற்றும் நமது தொலைநோக்கு பார்வை எவ்வாறு நாம் விஷயங்களை காண்பதில் மாற்றத்தை கொடுக்கிறது என்பதைக்காட்டும். இந்த இரண்டு வரிகளை காணுங்கள், எவ்வாறு 1 நீண்டுள்ளது என்று காணுங்கள். இரண்டாம் யோசனை எவ்வாறு இரண்டு குறுக்கு கோடுகளும் இணையாக இருக்கிறது, ஆனால் பார்ப்பதற்கு அவ்வாறு இல்லை என்பதைக் காணுங்கள். மூன்றாம் எடுத்துக்காட்டு, ஒரு குழந்தையும் எலியும், அவர்களுக்கு மத்தியில் ஒரு புள்ளியை கொண்டிருப்பது. உங்கள் மூக்கை நீங்கள் அந்த புள்ளியை நோக்கி தொட்டால், அந்த எலி குழந்தைக்கு அருகில் வருவதைப்போல உங்களுக்கு தோன்றும். வீடியோவில் காட்டப்பட்டுள்ள இந்த மூன்று பரிசோதனைகளையும் உங்கள் மாணவர்களை செய்யச்சொல்லுங்கள். (விவரங்களுக்கு யூடியூப்பை காணுங்கள்)
https://www.facebook.com/childrenareimportant/videos/1291919184177795/







# --[வழக்கு 5 ]--



**குறிப்புகள்! (பாடம் 5)**

## 1 குறிப்பு #1 தலைப்பு (பாடம் 5)

கொலையாளியின் தூக்குக் கயிறு வழக்கு

## 2 குறிப்பு #2 நாடகம் (பாடம் 5)



கதைகூறுபவர்: இது கற்பனை கதையாகும் ஆனால் அப்பாவிகளை காக்கும் பொருட்டு சில பெயர்கள் மற்றும் இடங்கள் மாற்றப்பட்டுள்ளன.

காவல்துறை அதிகாரி: மன்னியுங்கள். அம்மையீர்?

அம்மையீர்: சொல்லுங்கள் அதிகாரி?

காவல்துறை அதிகாரி: உங்களிடம் சில கேள்விகள் கேட்க விரும்புகிறேன்.

அம்மையீர்: இப்படியொரு அழகான அதிகாரிக்காக எதுவும் செய்யலாம்.

காவல்துறை அதிகாரி: ம்ம், சரி, இரண்டாம் அறிவிப்பு நாளுக்கு முன் இரவில் நீங்கள் எதையாவது பார்த்தீர்களா என்று ஆச்சர்யமாக இருக்கிறது.

அம்மையீர்: ஸிரேஷ் மற்றும் அவளது கணவன் இருக்கும் வீடருகிலுள்ள அந்த தெருவை சொல்கிறீர்களா?

காவல்துறை அதிகாரி: சரியாக அதுதான்.

அம்மையீர்: அது, அது ஒரு வகையான விசித்திரமானது, ஏனெனில், வாரம் முழுவதும் அவரது முன் முற்றத்தில் தொழிலாளர்கள் கட்டிட வேலை செய்துகொண்டிருந்தார்கள்.

காவல்துறை அதிகாரி: சொல்லுங்கள். [குறிப்பேட்டை எடுத்து குறித்துக்கொள்கிறார்.]

அம்மையீர்: பாருங்கள், அது தற்கொலை போல்தான் இருக்கிறதென்று எனக்கும் தெரியும், ஆனால் என்னை கேட்டால் அது ஒரு வகையில் விசித்திரமாய் இருந்ததென்றுதான் கூறுவேன். அந்த மொத்த விஷயத்திலும் எதுவோ ஒன்று சரியில்லை என்று தோன்றுகிறது.

காவல்துறை அதிகாரி: எனவே, அது தற்கொலை இல்லையென்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

அம்மையீர்: என்னை பொறுத்தவரை அது ஒரு மடத்தனம். அத்தகைய மோசமான மனிதன், அது இனி என் பிரச்னை இல்லை என்று நினைக்கிறேன், ஆனால் அவன்

வேறுயாருக்கோ திட்டம் தீட்டிக்கொண்டிருந்தான் என்று உறுதியாக சொல்லுவேன், ஆனால் பின்னர் மற்றொரு நாள் அவன் நகர் முழுதும் சென்று தான் எத்தனை பெரிய ஆளென்று சொல்லிக் கொண்டானென்று நான் கேள்விப்பட்டேன்... பிறகு பார்த்தால், எனது பக்கத்து வீட்டுக்காரர் அந்த மோசமான தூக்கு மேடையில் தூக்கில் தொங்குகிறார்!





### 3 குறிப்பு #3 இலக்கு (பாடம் 5)

வகுப்பிற்கு இந்த ஸ்தூலமான பொருளை ஒரு குறிப்பாக கொண்டுவரவும்: காகிதத்துண்டுகள்.

### 4 குறிப்பு #4 தொல்பொருளியல் (பாடம் 5)

பேரரசர் செர்க்கஸ் (486–465 பிசி) என்றும் அழைக்கப்படும், ராஜாவாகிய அகாஸ்வேருவின், கல்லறையின் படம். அவரது கல்லறை ஈரான் நாட்டில், நக்ஷ்-இ ருஸ்டம் என்றழைக்கப்படும் இந்த வரலாற்று தளத்தில், மற்ற பெர்சிய அரசர்களின் கல்லறைகளுடன் இருக்கிறது. (அமீர் ஹுசைன் ஸ்ஔபாகரி அவர்களால் எடுக்கப்பட்ட படம்) (ரகசியம்: செர்க்கஸ், எஸ்தெரின் புத்தகத்திலிருந்த ஒரு அரசர்.)



### 5 குறிப்பு #5 பைபிள் காட்சி (பாடம் 5)

ரகசியம்: அரசரின் முத்திரையுடனான சாசனம் மற்றும் பக்கத்தில் முத்திரைக்காக மோதிரம். – எஸ்தர் 3:12 மற்றும் 8:8

வழக்கு முடிந்தது வழக்கு முடிந்தது

## வழக்கு முடிந்தது! (பாடம் 5)

### பைபிள் கதை (பாடம் 5)

எஸ்தர்

பைபிளிளிருந்து: எஸ்தர் **2-7**



எஸ்தர், புதிய அழகான மனைவியை எதிர்நோக்கியிருக்கும் அரசர் செர்க்கஸ்ஸின் விசுவாசமான யூத பணியாலான, மொர்டேக்காயின் உறவினர். அரசரை, எஸ்தர் சந்திக்கும் முன் 12 மாதங்கள் அவளை அழகியல் சிகிச்சைக்கைக்கு மொர்டேக்காய் உட்படுத்தியிருந்தார். அவள் மிகவும் அழகாக இருந்ததால், அரசர் அவளை கண்டதும் காதல் வயப்பட்டு, உடனே அவளை மணந்துகொண்டார்.

ஹமன், அரசர் செர்க்கஸ்ஸின் உயர்மட்ட அதிகாரி; அவர் யூத மக்களை வெறுத்தார், அவருக்கு மாளிகை வாயிலருகில் தற்பெருமை பேசுவது மிகவும் பிடிக்கும், அதன்மூலம் தனக்கு அனைவரும் தலைவணங்குமாறு செய்திருந்தார். அனைவரும் அவருக்கு தலைவணங்கினர், மொர்டேக்காய் தவிர; அவர் உண்மையான ஆண்டவர் ஒருவரை தவிர யாருக்கும் தலைவணங்காதவர். மொர்டேக்காய் மீதான இந்த வெறுப்பு யூத மக்களை கொல்லும் திட்டத்திற்கு வழிவகுத்தது. அவர் அரசரிடம் அவரது விதிகளை மதிக்காமல் ஒரு மக்கள் கூட்டம் இருப்பதாக கூறினார். அரசர் செர்க்கஸ், ஹமனிடம் அவர் விரும்பியதை செயலாற்றிக்கொள்ள அனுமதியளித்தார். எனவே, ஹமன் அனைத்து யூதர்களையும் கொல்லுமாறு கட்டளை பிறப்பித்தார். பின் மொர்டேக்காய்யை தூக்கிலிட எண்ணி, அவரது வீட்டருகில் சில பெரிய தூக்கு மேடைகளை கட்டச்செய்தார்.

எஸ்தர், ஹமனின் திட்டத்தை அறிந்துகொண்டாள், தான் ஏதாவது செய்யவேண்டுமென்று அவளுக்கு தெரியும். அவள் அரசரையும், ஹமனையும் இரவுணவிக்கு அழைத்திருந்தாள், அப்போது அரசர் அவளுக்கு எதையும் கொடுக்க தான் தயார் என்றும், அவள் விரும்பினால் தனது ராஜ்யத்தில் பாதியை அவளுக்கு தருவதாயும் கூறினார். எஸ்தர் தன் மக்கள் காப்பாற்றப்படுவதே தனது விருப்பம் என்றும்; ஹமன் அவர்கள் அனைவரையும் அழிக்க நினைப்பதையும் கூறினாள். அரசர் மிகவும் கோபம்கொண்டு அறையைவிட்டு வெளியேறினார். அவர் அறைக்கு திரும்பி வரும்போது, ஹமன் அரசியை தாக்கிக் கொண்டிருப்பதைபோல் காண்பதாய் எண்ணினார். ஆத்திரமடைந்த அரசர், ஹமனின் வீட்டு முன்பக்கம் அவர் ஏற்பாடு செய்திருந்த அதே தூக்குமேடையில் அவரை தூக்கிலிட்டார்!

### விண்ணப்பம் (பாடம் 5)

ஆண்டவர் சில நேரங்களில் என்னை மிகவும் தைரியசாலியாகவும், அவரது சொல்லிற்காக முக்கியமான விஷயங்களை பணயம் வைக்கவும் கேட்டுக்கொள்கிறார்.

### மனப்பாட வசனம் (பாடம் 5)

“நீ உறுதியும், தைரியமும் உடையவனாய் இருக்க வேண்டுமெனக் கட்டளையிட்டதை நினைவில் வைத்துக்கொள். எனவே பயப்படாதே, நீ போகுமிடங்களில் எல்லாம் தேவனாகிய கர்த்தர் உன்னோடிருப்பார்” என்றார். யோசுவா 1: 9

### வகுப்பீடு (பாடம் 5)




ஆண்டவர் என்னை மற்றவருக்காக சேவை செய்ய தேர்வு செய்துள்ளார், என்னை "இத்தகைய நேரம்போல ஒன்றிற்காக" அனுப்பியுள்ளார். உங்கள் அண்டை வீட்டாரிடம் நீங்கள் கிரிஸ்துவர் என்று கூறுங்கள், அடுத்த வாரம் உங்களுடன் தேவாலயம் வர அவர்கள் விரும்புகிறீர்களா என்று கேளுங்கள்.

### கடவுளுடைய டிஎன்ஏ (பாடம் 5)

இந்த பாடத்தில் நாம் ஆண்டவர் குறித்து என்ன கற்றுகொண்டோம்? ஆண்டவர் தன் மக்களை காப்பாற்ற எண்ணும்போது, அவர் பெரும்பாலும் சாத்தியமாக தன்னை பின்பற்றுபவரையே தேர்வுசெய்கிறார்.



## வேடிக்கை நேரம்! (பாடம் 5)

### விளையாட்டு (பாடம் 5)

ஹமன், மொர்டேக்காய், எஸ்தர்

இந்த விளையாட்டு பாறை, காகிதம், கத்தரிக்கோலை ஒத்ததுதான். எஸ்தர் ஹமனை தோற்கடித்தாள், ஹமன் மொர்டேக்காய்யை தாக்கினான், மற்றும் மொர்டேக்காய் எஸ்தரை பாதுகாத்தான்.

குழந்தைகளை இரு அணிகளாக 4 அடி இடைவெளியுடன் வகுத்திடுங்கள். ஒவ்வொரு அணியையும் சில அடிகள் நெருக்கமாக பின்வாங்கச்சொல்லுங்கள், இது அவர்கள் யாரென்று முடிவுசெய்வதற்காக: ஹமன், மொர்டேக்காய் அல்லது எஸ்தர். அவர்களது நெருக்கத்தில், ஒவ்வொரு அணியும் தாங்கள் என்னவாய் இருக்கவேண்டுமென்று முடிவு செய்வார்கள், கூடுதலாக ஒரு காப்பு தேர்வும் செய்வார்கள். பிறகு அவர்கள் தங்களின் 4-அடி இடைவெளிக்கு திரும்ப வந்திடுவார்கள். மூன்று எண்ணிக்கையில், ஒவ்வொரு அணியும் தங்கள் யாரென்று கத்துவார்கள். ஒரு அணி "எஸ்தர்" என்று கத்தினால், மற்றவர் "ஹமன்" என்பார், எஸ்தர் அணி ஹமன் அணியை தங்களது

பாதுகாப்பு எல்லைக்கு இட்டுச்செல்வர் (நீங்கள் ஏதேனும் கூம்புகள் அல்லது மரம் அல்லது பொருள் கொண்டு குறித்துக்கொள்ளுங்கள்). குறிப்பட்டவர் யாராகினும் அவர் எதிர் அணியாகிடவேண்டும். ஒருவேளை இரு அணிகளுமே ஒரே பெயரை கூறினால், அவர்கள் இதை காப்பு தேர்வுகொண்டு மீண்டும் செய்வர்.

## விவாதம் (பாடம் 5)

(பழைய மாணவர்களுக்காக)

1. ஆண்டவர் உங்களுக்கு வழங்கியுள்ள பண்புக்கூறுகள் கொண்டு நீங்கள் எவ்வாறு அவருக்கு சேவையாற்றுவீர்கள்?

வெளிப்புற அம்சங்களான மூக்கு, கன்னம், கண்கள், வாய், மேலும்பல போன்றவற்றுள் அவர்கள் மாற்ற எண்ணுவது குறித்து அவர்களை பேச செய்யுங்கள். ஒருவர் மற்றவரை உடற் பண்புகளை வைத்து பரிகாசிப்பதை அனுமதிக்காதீர்கள். ஒரு காலஅளவிற்கு பிறகு, உரையாடலை படைப்பாற்றல் அல்லது புலனாய்வு, அல்லது உள் வலிமை மற்றும் குடும்பத்திலுள்ள நோய்கள் குறித்து பேச கொண்டு செல்லுங்கள். இவ்வனைத்துமே ஆண்டவன் உருவாக்கத்தின் கலவைதான். ஆண்டவர் நமக்கு கொடுத்துள்ளதை, நமக்கு பிடிக்கவில்லையெனினும் நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஆண்டவர் உங்களுக்கு ஒரு தோல்நிறத்தை அல்லது குரலை கொடுத்து அவரது திட்டத்தை செயலாற்ற உங்களை மேம்படுத்துகிறார்.



2. நீங்கள் கீழ்ப்படிய வேண்டியிருந்த மிகவும் கடினமான அறிவுறுத்தல் என்ன?

ஒவ்வொருவரையும் தங்களது சொந்த முயற்சி குறித்து பேச முயல சொல்லுங்கள், எனவே அவர்கள் ஒவ்வொன்றும் ஒரு வழியிலோ அல்லது மற்றொரு வழியிலோ கீழ்ப்படிகிறது என்பதை புரிந்துகொள்வர். தற்பெருமை பேசிக்கொள்வதையோ அல்லது பெருமைகொள்வதையோ தடை செய்ய முயலுங்கள். எடுத்துக்காட்டு: இருட்டில் கடைக்கு செல்லுதல், பள்ளிக்கு நடந்து செல்கையில் கொடுமைக்காரன் வீடு வழியாக செல்லுதல், அல்லது மோசமாக செய்த வீட்டுப்பாடத்தை மீண்டும் செய்தல்.

3. எந்த வகையில் உங்களது குடும்ப உறுப்பினர்களான அத்தைகள் மற்றும் மாமன்கள் உங்கள் மீது அக்கறை கொள்ள ஆர்வங்காட்டினார்?


அவர்களை தங்களது தாத்தா, பாட்டி, அத்தைகள், மாமாக்கள், உறவினர்கள், மற்றும்பலர் குறித்து பேசச்செய்யுங்கள். அவர்களது குடும்ப உறுப்பினர்கள் குறித்த எதிர்மறை கதைகளை பேச அனுமதிக்காதீர்கள். விடைகள் வேறுபடலாம், ஆனால் அனைத்தையும் ஏற்றுக்கொள்ளுங்கள் "எனக்கு சாப்பிட கொடுத்தது, அவர்களுக்கு தெரிந்தவர்கள் மூலம் எனக்கு வேலைக்கு உதவியது."

## மாணவர் பக்கங்களுக்கான விடைகள் (பாடம் 5)









## லூக்காஸின் பரிசோதனை (பாடம் 5)

மாணவர்களை இரு வெவ்வேறு விட்ட உறிஞ்சிகள் மற்றும் ராக்கெட்டை பறக்கச்செய்யும் ஒரு துண்டு டேப் போன்றவற்றை பயன்படுத்த செய்யுங்கள். இது உறிஞ்சிகளில் ஒன்றைக்கொண்டு ஊதி, இரண்டாவதை பறக்கச்செய்வதில் வேலைசெய்கிறது. போட்டி ஒன்றை வைத்து, எது உயர, தூரமாக அல்லது மிக சரியான உறிஞ்சி ராக்கெட்டுகள் என்று பாருங்கள். (விவரங்களுக்கு யூடியூப்பை காணுங்கள்)

https://www.facebook.com/childrenareimportant/videos/1291929934176720/

# --[வழக்கு 6]--

**குறிப்புகள்! (பாடம் 6)**

## குறிப்பு #1 தலைப்பு (பாடம் 6)

மாறிய சுகாதார ஆதாரங்களுக்கான வழக்கு

## குறிப்பு #2 நாடகம் (பாடம் 6)

கதைகூறுபவர்: இது கற்பனை கதையாகும் ஆனால் அப்பாவிகளை காக்கும் பொருட்டு சில பெயர்கள் மற்றும் இடங்கள் மாற்றப்பட்டுள்ளன.

குப்பையள்ளுபவர்: [கைபேசியில் பேசிக்கொண்டிருக்கிறார்] வணக்கம், டிஸ்பேட்ஜ்? நான் ஒரு புகார் கொடுக்கவேண்டும்.

டிஸ்பேட்ஜ்: [மிகவும் சலித்துகொண்டே] ஆம், என்ன குப்பையள்ளுபவரே?

குப்பையள்ளுபவர்: உங்களை மீண்டும் தொந்தரவு செய்வதற்கு மன்னிக்கவும், ஆனால் இது மிகவும் மோசமானது. இதுகுறித்து ஏதாவது செய்தாகவேண்டும்.

டிஸ்பேட்ஜ்: எதுகுறித்து ஏதாவது செய்தாகவேண்டும்?

குப்பையள்ளுபவர்: இந்த இடம் முழுவதும் பயன்படுத்தப்பட்ட பேண்ட்-எயிட்களும், துணிக்கட்டுகளுமாக இருக்கிறது.

டிஸ்பேட்ஜ்: அப்படியா, பிளாஸ்டிக் கையுறைகள் பயன்படுத்தி அவற்றை எடுங்கள்.


குப்பையள்ளுபவர்: இல்லை, உங்களுக்கு புரியவில்லை, அவை இந்த இடம் முழுதும் இருக்கிறது [வாந்தி], இங்கே குறைந்தது ஒரு டஜன் அருவருப்பான நோயுற்ற மக்கள் தங்கள் துணிக்கட்டுகளை உரித்து போட்டுள்ளனர், இது வெறுப்பூட்டுவதாய் உள்ளது.

டிஸ்பேட்ஜ்: சரி, நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?

குப்பையள்ளுபவர்: ஜெருசலேம் நெடுஞ்சாலையில் தெற்கு பிணைப்பு பாதையிலுள்ள கிராமத்தின் மேற்கில் இருக்கிறேன்.

டிஸ்பேட்ஜ்: சரி, அதிகாரி ஜோ பணியிலிருக்கிறார், அவர் நகரை நோக்கிவரும் மக்கள் கூட்டத்தை கட்டுப்படுத்திக்கொண்டிருக்கிறார், அந்த பணி முடிந்ததுமங்கே வரச்செய்கிறேன்.



குப்பையள்ளுபவர்: அதிகாரி ஜோ வேண்டாம், அவர் கட்டாயம் எனக்கு உதவமாட்டார்.

டிஸ்பேட்ஜ்: இப்போது இருக்கும் ஒரே அதிகாரி அவர்தான், இல்லையெனில் நீங்கள் இன்னும் 2 மணிநேரங்கள் பணிமாற்றம் வரை காத்திருக்கவேண்டும்.

குப்பையள்ளுபவர்: சரி, பரவாயில்லை, கவலை வேண்டாம் இந்த [வாந்திகளை] கழிவுகளை நானே சுத்தம் செய்கிறேன்.

### 3 குறிப்பு #3 இலக்கு (பாடம் 6)

வகுப்பிற்கு இந்த ஸ்தூலமான பொருளை ஒரு குறிப்பாக கொண்டுவரவும்: வெள்ளை துணி.

### 4 குறிப்பு #4 தொல்பொருளியல் (பாடம் 6)

இன்று காணப்படும் ஜெருசலேம் கோவில். (ரகசியம்: தொழு நோயாளிகள் அங்கேதான் தாங்கள் குணமடைத்தபிறகு, யேசுபிரானுக்கு கீழ்ப்படிய சென்றனர்.)

### 5 குறிப்பு #5 பைபிள் காட்சி (பாடம் 6)

ரகசியம்: 10 தொழு நோயாளிகளுக்கு பத்து உணவுகள், சுவற்றிற்கு வெளியே, ஏனெனில் தொழுநோயாளிகள் நகருக்கு வெளியேதான் வாழவேண்டும்.

**வழக்கு முடிந்தது வழக்கு முடிந்தது**

# வழக்கு முடிந்தது! (பாடம் 6)

### பைபிள் கதை (பாடம் 6)

10 தொழுநோயாளிகள்

பைபிளிளிருந்து: லூக்கா 17: 11-19

அவரது சொந்த ஊரிலிருந்து அதிக தூரமில்லை, ஏசுபிரான் சமாரியா மற்றும் கலிலீக்கு இடையிலிருக்கும் எல்லை சாலையில், இன்னும் 30 மணிநேரத்தில் பயணத்தில் அடையவிருக்கும் ஜெருசலேம் நோக்கி நடந்துகொண்டிருக்கிறார். அவர் ஒரு கிராமத்திற்குள் நுழைந்ததும், 10 பெருவியாதியஸ்தர்கள் தூரத்திலிருந்து அவரை அழைத்து, "இயேசு, ஐயா, எங்கள்மீது இரக்கங்கொள்ளுங்கள்!" என்றனர். பெருவியாதியான தொழுநோய் மிகவும் கொடூரமானது, அது விரல்கள், கால்விரல் பகுதி, மூக்கு மற்றும் காதுகள் போன்றவற்றை கொன்று; உங்களை எப்போதும் நீங்கள் அசுத்தத்துடன் இருப்பதாய் செய்துவிடும். அவர்களை பார்த்தபோது ஏசுபிரான் கூறினார், "செல்லுங்கள், சென்று உங்களை பூசாரியிடம் காண்பியுங்கள்." மோசேஸின் சட்டப்படி, அவர்கள் குணமாக்கப்பட்டால், மீண்டும் சமூகத்தில் இணைந்து, மீண்டும் கோவிலுக்குள் சென்று பிரார்த்திக்கலாம். அவர்கள் இன்னும் குணமாக்கப்படவில்லை, எனவே இது மிகவும் விசித்திரமாக தோன்றியது.



அவர்கள் ஜெருசலேம் செல்ல தொடங்கினர், நடக்கும்போது அவர்கள் சுத்தமாக்கப்பட்டு/குணமாக்கப்பட்டனர்! அவர்களுள் ஒருவரான, ஒரு அவமதிக்கப்பட்ட வெளிநாட்டவர், அவர் குணமாக்கபட்டது தெரிந்த உடனே ஏசுவிடம் திரும்பினார். அவர் ஆண்டவரை தூரத்திலிருந்தே துதித்து வந்தார் ஆனால் இயேசுவை நோக்கி வந்தவுடன், அவரது காலில் விழுந்து, நன்றி தெரிவித்தார். இயேசு ஆச்சரியப்பட்டு, அவர்கள் அனைவரும் குணமடைந்திருப்பர் என்று தெரிந்து, அவரை கேட்டார் "அனைத்து பத்துபேரும் குணமாகவில்லையா? மற்ற ஒன்பதுபேர் எங்கே? இந்த வெளிநாட்டவர் தவிர வேறு யாரும் திரும்பிவந்து ஆண்டவருக்கு தங்களது துதியை தரவருவதை காணமுடியவில்லையே?" பின் இயேசு தனக்கு நன்றியுடையவராய் இருந்த அந்த ஒருவரை ஊக்குவித்து, "எழுந்து, செல்; உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார்."

### விண்ணப்பம் (பாடம் 6)

அந்த தொழுநோயாளிகள்போல், நான் சொல்ல விரும்புகிறேன், ஆண்டவராகியவர் எனக்கு செய்த அனைத்திற்கும் "நன்றி இறைவா".

### மனப்பாட வசனம் (பாடம் 6)

“தேவனுக்கு எப்பொழுதும் நன்றி செலுத்துங்கள். இயேசு கிறிஸ்துவில் இதையே உங்களிடம் தேவன் விரும்புகிறார்.” 1 தெசலோனிக்கேயர் 5:18

## வகுப்பீடு (பாடம் 6)

இன்னும் நீங்கள் ஆண்டவருக்கு நன்றி செலுத்த எண்ணாத மூன்று விஷயங்கள் குறித்து பட்டியலிடுங்கள். நாம் பொதுவாக நன்றியுடன் இருக்கவேண்டிய விஷயங்களாகிய உணவு, உடை மற்றும் குடும்பம். உங்களது மாணவர்கள் தாங்கள் நன்றியுடன் இருக்கவேண்டிய புது யோசனைகள் குறித்து யோசிக்கிறார்களா; தொலைந்துபோன ஒன்றை கண்டறிய உங்களுக்கு உதவுதல், நீங்கள் பள்ளிக்குள் சென்றடையும்வரை மழையிலிருந்து உங்களை காத்தல், இன்று ஒருமுறைகூட கீழே விழாமல் உங்கள் வண்டியை ஓட்டிவருதல், உங்களது சகோதர சகோதரிகளிடம் நல்ல விஷயங்களை மட்டுமே சொல்ல முடிதல், மேலும்பல போன்ற விஷயங்கள்.

## கடவுளுடைய டிஎன்ஏ (பாடம் 6)

இந்த பாடத்திலிருந்து ஆண்டவர் குறித்து நாம் கற்றுக்கொண்டது என்ன? ஆண்டவர் தம் மக்களிடமிருந்து கீழ்ப்படிதலையும், நன்றியுணர்வையும் விரும்புகிறார்.






# வேடிக்கை நேரம்! (பாடம் 6)

## விளையாட்டு (பாடம் 6)

துடைப்பத்தை பிடியுங்கள்

அனைத்து விளையாட்டுநர்களும் வட்டமமைத்து, ஒரு விளையாட்டாளரை மட்டும் நடுவே நிறுத்துங்கள். வட்டத்திலுள்ள ஒவ்வொரு நபருக்கும் ஒரு எண் வழங்கப்படும். நடுவே நிற்பவர் துடைப்பத்தை ஒரு விரலால் மேல்நோக்கி தாங்கியவண்ணம் இருப்பார். எந்தவித எச்சரிக்கையும் இல்லாமல், அவர் துடைப்பதிலிருந்து தனது விரலை எடுக்கும் அதே நேரத்தில் ஒரு எண்ணை அழைப்பார். அந்த எண் வழங்கப்பட்ட நபர் துரிதமாக முன்னேவந்து துடைப்பம் தரையில் விழும் முன் பிடிக்க முயற்சி செய்யவேண்டும். அவர் அதை பிடித்துவிட்டார் என்றால், அவர் நடுவில் நிற்கக்கூடிய வீரராவார். இல்லையெனில், வட்டத்திற்கே திரும்பிடுவார்.

## விவாதம் (பாடம் 6)

(பழைய மாணவர்களுக்காக)

1. இன்று நம்மால் ஏன் அதிக குணமாக்கலை காணமுடிவதில்லை?

குணமாக்கல் குறித்து மாணவர்களை பேச செய்யுங்கள்; உங்கள் தேவாலயம் அல்லது நகருக்கு ஆண்டவர் என்ன செய்துள்ளார் என்பது குறித்து பேசச்செய்யுங்கள். உங்களது மத பிரிவு குணமாக்கல் குறித்து எதை நம்புகிறது என்பது குறித்து விவாதியுங்கள். எது குறைந்த குணமாக்கலுக்கு காரணமாய் இருக்கும்; மக்கள் மேல்

குறைந்த நம்பிக்கை, குணமாக்கல் பரிசு பெற்ற சில சீடர்கள், உங்கள் பகுதியிலுள்ள அதிகமான அடக்குமுறை, குறைந்த அளவு மக்களே கேட்பது, அல்லது, மறுமலர்ச்சி பற்றாக்குறை போன்றவை குறித்து பேசுங்கள்.

2. நான் தேடும் குணமாக்கலை நான் பெறாமல் இருக்க காரணம் என்ன?

நம்பிக்கையின்மை, அல்லது ஆண்டவர் உங்களுக்கான வேறு திட்டத்தை வைத்துள்ளார், உங்கள் வருங்காலத்தை நீங்கள் காணமுடியுமா, அல்லது உங்கள் நோக்கங்கள் தவறானதாக இருக்கலாம். உங்கள் குணமாக்கல் உங்களுக்கான சரியான தீர்வாய் இல்லாமல் இருக்கலாம், அல்லது நம் வாழ்விலுள்ள பாவங்கள், அல்லது இது சரியான நேரமில்லை அல்லது ஆண்டவர் உங்கள் நோயில் மகிமைப்படுகிறார்.




3. 10 தொழுநோயாளர்களும் தங்களின் குணமாக்கலுக்கு உரிமையானவர்களா?

உரிமைப்படுத்தல் என்பது இந்நாளில் மலிந்துகிடக்கிறது, பலர் தங்கள் சிலவற்றிற்கு உகந்தவர்கள், அதனால் அவர்கள் நன்றியுடையவர்களாய் இருக்க தேவையில்லை என்ற எண்ணத்தை தருவிக்கிறார்கள். நாம் எதற்கு உரிமைப்பட்டவர்கள்? ஒரு ஆசிரியராய் உங்கள் குறிக்கோள் உங்கள் மாணவர்களுக்கு அவர்கள் எதற்கும் உரிமைப்பட்டவர்கள் அல்ல என்பதை தெரிந்துகொள்ள உதவுவதேயாகும். நாம் யாரென்பதற்கும், நாம் கொண்டிருப்பவர்களுக்கும் நாம் நன்றியுடையவர்களாய் இருக்கவேண்டும் ஏனெனில், அவை ஆண்டவரால் இந்த பூமியில் நாம் நம் கடமையை செயலாற்ற நமக்கு கொடுக்கப்பட்டவை.

## மாணவர் பக்கங்களுக்கான விடைகள் (பாடம் 6)







## லுக்காஸின் பரிசோதனை (பாடம் 6)

மாணவர்களை ஒரு துண்டு அட்டையை வில்லாக வளைக்க செய்யுங்கள், அதை மேசைமேல் வைத்து, கீழிருந்து மேலாக ஊதி வேகமாக செல்லும் காற்று, மெதுவாக செல்லும் காற்றைவிட குறைந்த அழுத்தத்தோடு செல்கிறது என்பதை காணச்செய்யுங்கள். விமானத்தின் இறகின்மேல் வீசப்படும் வேகமான காற்றுதான் அதை காற்றில் உயரச்செய்கிறது. (விவரங்களுக்கு யூடியூப்பை காணுங்கள்)
https://www.facebook.com/childrenareimportant/videos/1291958180840562/

# --[ வழக்கு 7 ]--

**குறிப்புகள்! (பாடம் 7)**

## 1 குறிப்பு #1 தலைப்பு (பாடம் 7)

தோன்றும் நாய்க்குட்டிகள் வழக்கு

## 2 குறிப்பு #2 நாடகம் (பாடம் 7)

கதைகூறுபவர்: இது கற்பனை கதையாகும் ஆனால் அப்பாவிகளை காக்கும் பொருட்டு சில பெயர்கள் மற்றும் இடங்கள் மாற்றப்பட்டுள்ளன.
பாட்: பெரிய-பெரிய-பெரிய-பெரிய-பெரிய-பெரிய-தாத்தா?
ஜிஜிஜிஜிஜிஜி-பிஏ: சொல், இளைஞனே?
பாட்: நீங்கள் எனக்கு என் பள்ளி புலனாய்வு வேலையில் உதவமுடியுமா?
ஜிஜிஜிஜிஜிஜி-பிஏ: நிச்சயமாக, நான் வேலை செய்யும்போது என்னுடன் நடந்து வா, இன்றுக்குள் நான் இந்த வரிசையை நடவேண்டும், அப்போதுதான் நாளை தாமதமாகாது. நெற்றி வியர்வையை துடைத்துக்கொள்கிறார்.
பாட்: சரி! எப்போதுமில்லாத அளவு சிறப்பான புலனாய்வை நான் பெறப்போகிறேன். எனக்கு தெரிந்த பெரியவரின் பழைய நினைவுகளை நான் புலனாய்வு செய்து அறிக்கை தயார்செய்யப்போகிறேன்.
ஜிஜிஜிஜிஜிஜி-பிஏ: என்னை அதற்காக நீ தேர்வுசெய்துவிட்டாயா?
பாட்: நான் உறுதி செய்துவிட்டேன். எனவே, இங்கே எவ்வாறு இந்த மலைகள் வந்ததென்று சொல்கிறீர்களா?
ஜிஜிஜிஜிஜிஜி-பிஏ: பெருமூச்சுவிடுகிறார், எனக்கு வயதாகி இருக்கலாம், ஆனால் மண்ணைவிட பழையவன் இல்லை.
பாட்: சரி, அந்த நதி?
ஜிஜிஜிஜிஜிஜி-பிஏ: நான் ஒருமுறை உணவளிக்க கூடிய நீரூற்றுகள் பார்த்தேன், ஆனால் அப்போது நான் சிறியவன், பிறகு நான் அங்கு செல்லவேயில்லை.
பாட்: எனவே, உங்களுக்கு நினைவிருக்கும் முந்தைய விஷயம் என்ன?
ஜிஜிஜிஜிஜிஜி-பிஏ: விலங்குகள். நானும் என் மனைவியும் காலைவேளைகளில் உணவை அவைகள் விளையாடுவதை பார்த்துக்கொண்டே உண்ண வெளியே

செல்வோம், நான் அங்கே அதை பார் அது அருமை என்பேன், அவள் எது அந்த பெரிய காவி நிறமானதா அல்லது அதற்குமேல் இருக்கும் சிவப்பானதா என கேட்பாள்? சிறுது நேரம் கழித்து நாங்கள் கண்டுக்களித்துவிட்டு எங்கள் காலைஉணவை விலங்குகள் மற்றும் அவை செய்யும் பைத்தியக்காரத்தனமான, அற்ப விஷயங்களை கண்டு ரசித்தபடியே உண்போம்.




பாட்: உண்மையாகவா? அது மிகவும் அருமையானதாக இருந்திருக்கவேண்டும்.

ஜிஜிஜிஜிஜிஜி-பிஏ: ஆம். யார் கண்டார், ஒருவேளை ஒருநாள் நீயோ அல்லது உன் குழந்தையோகூட அதேபோல் அவை ஒன்றிணைத்துவருவதை காணலாம்.


பாட்: அது அற்புதமாக இருக்கும்.

### 3 குறிப்பு #3 இலக்கு (பாடம் 7)

வகுப்பிற்கு இந்த ஸ்தூலமான பொருளை ஒரு குறிப்பாக கொண்டுவரவும்: மலர்.

### 4 குறிப்பு #4 தொல்பொருளியல் (பாடம் 7)

பக்தாதிலிருக்கும் இன்றைய டைக்ரிஸ் நதியின் புகைப்படம். (ரகசியம்: இந்த பகுதி அத்தியாயம் 2ல் ஆதியாகமத்தில் பேசப்பட்டுள்ளது.)



### 5 குறிப்பு #5 பைபிள் காட்சி (பாடம் 7)

ரகசியம்: படைப்பின் அனைத்தும் ஆதாரங்களாய் இருக்கின்றன.

வழக்கு முடிந்தது வழக்கு முடிந்தது

# வழக்கு முடிந்தது! (பாடம் 7)

### பைபிள் கதை (பாடம் 7)

உருவாக்கம்

பைபிளின் இருந்து: ஆதியாகமம் 1



ஏழாம் நாளில், ஆண்டவர் பணியிலிருந்து ஓய்வெடுத்தார், அவர் தனது படைப்புகள் நன்றாக இருப்பதை கண்டார், தனது அனைத்து பணிகளிலிருந்தும் ஓய்வெடுத்துக்கொண்டார். ஆனால் தொடக்கத்திற்கு சென்று காணும்போது, ஒரு நாள் ஆண்டவர் கூறினார் "இங்கே ஒளியுண்டாகட்டும்" என்று, அது அப்போது உருவானது. இரண்டாம் நாள் கூறினார் "இங்கே வானம் இருக்கட்டும்" என்று, அது அப்போது நடந்தது. மூன்றாம் நாளன்று ஆண்டவர் மிகவும் வேலையாய் இருந்தார், அப்போதுதான் நிலமும் அதில் அனைத்து தாவரங்களையும் உருவாக்கினார். இதில் ஒவ்வொரு மலர், மரம் மற்றும் புல் கீற்றும் அடங்கும்; ஆண்டவர் இது நன்றாக உள்ளதென்றார். பின்னர் நான்காம் நாள், நாட்கள், ஆண்டுகள் மற்றும் பருவநிலை மாற்றங்கள் போன்றவற்றை தடங்காண சூரியன் மற்றும் சந்திரனை உருவாக்கினார். இரவில் ஒளியூட்ட மின்னும் லட்சக்கணக்கான நட்சத்திரங்களையும் உருவாக்கினார். ஐந்தாம் நாள் அவர், சமுத்திரங்களின் அனைத்து விலங்குகள், காற்றின் பறவைகள் போன்றவற்றை கொண்டுவந்து அவற்றை இனி பயன்தக்கவகையில், பெறுக சொன்னார். அனைத்து பெரிய மற்றும் சிறிய உயிரினங்கள் ஆறாம் நாள் உருவாக்கப்பட்டன, அதன் பின்னர் ஆண்டவர் மனிதனை உருவாக்கினார். அவர் அழுக்கில் தனது வாழ்வின் மூச்சை சுவாசிக்கையில், மனிதன் உருவாக்கப்பட்டான்! அவன் அனைத்து தாவரங்கள் மற்றும் விலங்குகள் மேல் அதிகாரங்கொள்ளச்செய்தார். ஆண்டவர் ஒரு சிறப்பான தோட்டத்தை உருவாக்கி அதில் ஆதாமை இருத்தினார். ஆதாம் உறங்கச்சென்றதும், அவன் தனியாக இருப்பது சரியில்லை என்று ஆண்டவர் எண்ணினார், எனவே அவரது பக்கத்தில் இருந்து விலா எலும்பு ஒன்றை எடுத்து ஏவாளை உருவாக்கினார். அவர்களுக்கு பெருகி இப்பூமியை நிரப்பும்படி ஆணைவழங்கினார், பிறகு ஏழாம் நாள் ஓய்வெடுக்க தொடங்கினார்.

### விண்ணப்பம் (பாடம் 7)

ஆதாமைபோல், என்னை சுற்றியிருக்கும் அனைத்து உருவாக்கங்களையும் கவனித்துக்கொள்ள நானே பொறுப்பு.

### மனப்பாட வசனம் (பாடம் 7)

"தேவன் அவர்களை ஆசீர்வதித்தார். அவர்களிடம், “பிள்ளைகளைப் பெற்று விருத்தியடையுங்கள், பூமியை நிரப்பி அதை ஆண்டுகொள்ளுங்கள். கடலில் உள்ள மீன்களையும் வானத்திலுள்ள பறவைகளையும் ஆண்டுகொள்ளுங்கள். பூமியில் அலைந்து திரிகின்ற அனைத்து உயிரினங்களையும் ஆண்டுகொள்ளுங்கள்”
ஆதியாகமம் 1: 28பி

## வகுப்பீடு (பாடம் 7)

உங்களது முற்றத்தில் உள்ள செடிக்கு நீர் பாய்ச்சுங்கள், அதை சுற்றியுள்ள தேவையற்ற களைகளை நீக்குங்கள், எனவே அது நன்றாக வளரும்.

## கடவுளுடைய டிஎன்ஏ (பாடம் 7)




இந்த பாடத்திலிருந்து நாம் ஆண்டவர் குறித்து என்ன கற்றுக்கொண்டோம்? ஆண்டவரே அனைத்தையும் உருவாக்கினார்.



# வேடிக்கை நேரம்! (பாடம் 7)

## விளையாட்டு (பாடம் 7)

உருவாக்க விளையாட்டு

ஒரு தாளில், சூரியன் மற்றும் சந்திரன் பெயரை எழுதுங்கள்; மிகவும் சிறிய குழந்தைகள் படிக்க அவற்றின் படங்களை சேர்த்துக்கொள்ளுங்கள். அதை சுவர் அல்லது தரையில் ஒட்டிடுங்கள். ஆதியாகமத்தில் பட்டியலிடப்பட்டுள்ள பறவைகள், மீன்கள், மரங்கள், கடல்கள், மேலும்பல போன்றவற்றிற்கான குறியீடுகளையும் செய்திடுங்கள். விளையாட்டை விளையாட, ஆசிரியர் ஒரு பொருளை கூறுகையில், குழந்தைகள் அதன் வரைபடத்துடன் குறியீட்டைநோக்கி விரைந்தோடுவர். கடைசியாக சென்றடையும் குழந்தை "தோற்றது" எனவே அது அமர்ந்துகொள்ளும். சிறு குழந்தைகள் விலங்குகள் போல் நடித்து கடவுளின் உருவாக்கத்திற்கான படத்தை நோக்கி செல்லுவதை விரும்புவர்.

## விவாதம் (பாடம் 7)

(பழைய மாணவர்களுக்காக)

1. குளோனிங் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அறிவியல் கொண்டு நாம் மனிதனை உருவாக்கமுடியுமா?

ஆண்டவரின் உருவாக்கல் பணி குறித்து உங்கள் மாணவர்களை பேசச்செய்யுங்கள், அவர் எவ்வாறு ஒன்றுமே இல்லாதவற்றிலிருந்து மனிதனை உருவாக்கினார் மற்றும் ஆண்டவரின் அறிவியல் கொண்டுதான் நாம் எதையும் உருவாக்கமுடியும் என்ற உண்மையாய் பேச செய்யுங்கள். ஒத்த மரபணுவை கொண்டு ஒன்றை உருவாக்குதல் குறித்து இருக்கும் ஒழுக்கம் குறித்து பேசுங்கள் மற்றும் எந்தெந்த நாடுகள் குளோனிங்கை அனுமதிக்கின்றது அல்லது அனுமதிக்கவில்லை என்பது குறித்தும் பேசுங்கள்.

2. பழைய ஏற்பாட்டு சட்டங்கள் கீழ் நாம் இனிமேலும் இல்லை எனும்போது நாம் ஏன் வாரத்தில் ஒரு நாள் ஓய்வெடுக்கவேண்டும்?





இந்த கேள்விக்கு பதிலளிக்கும் முன் உங்கள் மதகுருவை கேட்டு உறுதிப்படுத்தி கொள்ளுங்கள், எப்போது உங்கள் மதப்பிரிவு சப்பாத்தை கொண்டாடவிருக்கிறது, எப்படி கொண்டாடவிருக்கிறது என்று. ஒருவேளை உங்கள் மதப்பிரிவு சப்பாத்தை அனுமதிக்கவில்லையெனில், தேவையான ஓய்வை எடுக்காதபோது நமது உடல் விரைவில் தளர்ந்துபோகும் என்பது குறித்து உங்கள் மாணவர்களுடன் பேசி பகிர்ந்துகொள்ளுங்கள். கருணையின் கீழ் இருப்பினும்கூட, ஒவ்வொரு வாரமும் நமக்கு ஓய்வு தேவை, நமக்கிது தேவை என்று ஆண்டவருக்கு தெரியும்.


3. மறுசுழற்சி, புவி வெப்பமடைதல் மற்றும் அழிவிலிருந்து விலங்குகளை காத்தல் என்றால் என்ன? இதில் கிறிஸ்துவர்கள் உட்படவேண்டுமா?

விவாதத்தின் ஒருபுறம் பார்த்தால், ஆண்டவர் நமக்கு அவரது உருவாக்கத்தை ஆளும் உரிமையை கொடுத்துள்ளார், நாம் அவை குறித்து அக்கறை கொள்ளவேண்டும். நிதர்சனத்தில் பேசினால், நாம் மாசுகள் குறித்து கவனமாக இருக்கவேண்டும், விலங்குகளை காக்கவேண்டும் என்ற அர்த்தம்தான் இது. வாதத்தின் மறுபுறம், மக்கள் போர், மோசடி போன்றவற்றில் இறக்கிறார்கள் மற்றும் மனிதர்களுக்கு எதிராக தீயவை அதிகம் உள்ளது, எனவே நாம் விலங்கினங்களை காக்க எதற்கு வளங்களை பயன்படுத்த வேண்டும், எப்போது மக்களை காக்க போகிறோம். இந்த விவாதத்திற்கு பதிலே இல்லை; எனவே, ஒரு ஆசிரியராய் உங்கள் குறிக்கோள் மாணவர்களை அவர்ளுக்காக சிந்திக்க செய்வதாகும்.

## மாணவர் பக்கங்களுக்கான விடைகள் (பாடம் 7)



## லூக்காஸின் பரிசோதனை (பாடம் 7)

விவரத்துணுக்குகள் உள்ள மற்றும் இல்லாத அறைகளில் உங்கள் மாணவர்களை ஐந்து பொருட்கள் கண்டுபிடிக்க சொல்லுங்கள். பொதுவாக மனிதர்கள்தான் பொருட்களின் மேல் விவரதுணுக்களை ஒட்டுவர், ஆண்டவர் அவ்வாறு செய்வதில்லை என்பதை கவனியுங்கள். (விவரங்களுக்கு யூடியூப்பை காணவும்)
https://www.facebook.com/childrenareimportant/videos/1292083794161334/

# --[ வழக்கு 8 ]--



## குறிப்புகள்! (பாடம் 8)

### குறிப்பு #1 தலைப்பு (பாடம் 8)

பாதிக்கப்பட்டவரின் புள்ளிவிவரங்கள் தொலைவிற்கு மாற்றப்பட்ட வழக்கு.

### குறிப்பு #2 நாடகம் (பாடம் 8)



கதைகூறுபவர்: இது கற்பனை கதையாகும் ஆனால் அப்பாவிகளை காக்கும் பொருட்டு சில பெயர்கள் மற்றும் இடங்கள் மாற்றப்பட்டுள்ளன.
மருத்துவர்: வணக்கம் காவலரே, நான் ஜானை பரிசோதிக்க வந்துள்ளேன்.
வாயில் கேப்டன்: அட, அது தேவையிருக்காது.
மருத்துவர்: என்ன சொல்கிறீர்கள்? நான் அவரை படுகையிலேயே ஓய்வெடுக்கும்படி கண்டிப்பாக அறிவுறுத்தியிருந்தேன், அவர் இரவுவரைக்கூட தயங்கமாட்டார் என்று எனக்கு உறுதியாக தெரியும். எனவேதான் அவரை மீண்டும் சோதிக்க வந்தேன்.
காவலர்: அதுசரி, உங்கள் பணி "வருகை"யிலிருந்து "செல்லுதல்"க்கு மாறிவிட்டது.
மருத்துவர்: இது உண்மையிலேயே வினோதமானது. ஜான் இறந்துவிட்டாரா அல்லது ஏதேனும் முன்னேற்றம் அடைந்துள்ளாரா?
காவலர்: எனக்கு தெரியாது. நேற்றைய எனது சூடான தாள் அத்தகைய எந்த விவரங்களையும் கொண்டிருக்கவில்லை, உங்கள் பணி "வருகை"யிலிருந்து "செல்லுதல்"க்கு மாறிவிட்டது என்பது மட்டும்தான் எனக்கு தெரியும்.
மருத்துவர்: அது வித்தியாசமாக உள்ளது, மூத்தவர்கள் இன்னும் வரவில்லையா? நான் அவர்களுடன் பேசவேண்டும்.
காவலர்: அவர்கள் வந்துவிட்டார்கள், ஆனால் அவர்களால் உங்களுக்கு உதவமுடியுமா என்பது சந்தேகம்தான்.
மருத்துவர்: அது ஏன் அப்படி? அவர்கள் உதவி பெற சென்றிருக்கிறார்கள் என்று நினைத்தேன்.
காவலர்: அவர்கள் செய்தார்கள், ஆனால் முதலாளி அதை கடந்து சென்றுவிட்டார், மீண்டும் வராதீர்கள் என்று அவர்களை கூறிவிட்டார். என்ன நடந்ததென்று எனக்கு

தெரியாது, ஆனால் நேற்று முதலாளி சென்றதும் உங்கள் உத்தரவுகளை மாற்றிவிட்டார்.
மருத்துவர்: அப்படியெனில், நான் உங்கள் முதலாளியுடன் பேசமுடியுமா?
காவலர்: இல்லை, உண்மையாகவே உங்களை "செல்லுங்கள்" என்று அவர் கூறினால், நீங்கள் "வர"வேண்டாம். புரிந்ததா?
மருத்துவர்: இல்லை, உறுதியாக வரமாட்டேன், உங்கள் நேரத்திற்கு நன்றி.

### 3 குறிப்பு #3 இலக்கு (பாடம் 8)

வகுப்பிற்கு இந்த ஸ்தூலமான பொருளை ஒரு குறிப்பாக கொண்டுவரவும்: மருத்துவம்.


### 4 குறிப்பு #4 தொல்பொருளியல் (பாடம் 8)

ரோமானிய சிப்பாய்களின் நாடக முன்னிலைப்படுத்துதலின் புகைப்படம். சிவப்பு இறகுகள் கொண்ட சிப்பாய்கள் 100 அடி சிப்பாய்களுக்கு பொறுப்பான "சென்ச்சூரியன்"களாக இருக்கலாம். (ரகசியம்: ஆண்டவருடன் பேசிய சென்ச்சூரியன் இவ்வாறுதான் உடையணிந்திருக்கவேண்டும்.)




### 5 குறிப்பு #5 பைபிள் காட்சி (பாடம் 8)

ரகசியம்: காலியான படுக்கை, தட்டு, கோப்பை மற்றும் வெப்பமானி போன்றவை ஒரு நோயாளி, ஏசுபிரான் மக்களை தங்களின் பிணியிலிருந்து காத்த படிகளிலிருந்து வீட்டுவரையிலான தூரத்தை காட்டுகிறது.






# வழக்கு முடிந்தது! (பாடம் 8)

## பைபிள் கதை (பாடம் 8)

சென்ச்சூரியனின் நம்பிக்கை

பைபிளிள் இருந்து: லூக்கா 7: 1-10



ஒரு பணியாள் குழு ஏசுபிரானை அணுகினர், வேகவேகமாக அவர்களது முதலாளி வீட்டில் உடல்நிலை சரியில்லாமல் இருக்கும் ஒரு பணியாள் குறித்து அவரிடம் கூறினார். அவர்களது முதலாளி ஒரு ரோமானிய சென்ச்சூரியன் சிப்பாய். அவர்தான் 100 இதர சிப்பாய்களுக்கு தலைவர், அவரது விருப்பமான சிப்பாய் உடல்நிலை சரி இல்லாமல் இறந்துகொண்டிருக்கிறான். ஏசுபிரான் அந்த ரோமானிய சென்ச்சூரியன் சிப்பாய் வீட்டிற்கு செல்லும் வழியில், மற்றொரு மக்கள் குழுவை சந்தித்தார். அந்த சென்ச்சூரியன் சிப்பாய் தனது நண்பர்கள் குழுவை அனுப்பி ஒரு செய்தியை அனுப்பியிருந்தார், "நீங்கள் என் கோரிக்கையை ஏற்குமளவு எனக்கு தகுதியில்லை, நீங்கள் என் வீட்டிற்கு வருமளவு நான் மதிப்புமிக்கவன் அல்லன். அதனால்தான் உங்களை அழைக்க நான் நேரில் வரவில்லை. ஆனால் நீங்கள் ஒரு வார்த்தை சொன்னாலே என் பணியாள் குணமடைந்துவிடுவான். நான் அதிகாரத்திலுள்ளவன், எனக்கு மற்றவர் மேல் அதிகாரம் உள்ளது. நான் ஒரு சிப்பாயை வா என்றாலும் அல்லது செல் என்றாலும் அவன் செயலாற்றுவான். நான் என்ன சொன்னாலும் அவர்கள் செய்வார்கள்." அந்த சென்ச்சூரியனுக்கு ஆண்டவரின் அதிகாரம் தெரியும், அவர் சொன்னால் எதுவும் நடக்கும் என்பதும் தெரியும். ஏசுபிரான் இதை கேட்டபோது, அவர் ஆச்சர்யமடைந்து "நான் உனக்கு கூறுகிறேன். அனைத்து இஸ்ரேலிலும் நான் இத்தகையமுழு நம்பிக்கையை பெறவில்லை" என்கிறார். அந்த மாலை, அந்த சென்ச்சூரியனின் பணியாட்கள் வீடு திரும்பியபோது, அங்கே நோய்வாய்ப்பட்டு இறக்ககிடந்த பணியாள் குணமாக்கப்பட்டிருந்தான்.

## விண்ணப்பம் (பாடம் 8)

அந்த சென்ச்சூரியன்போல், எனது நம்பிக்கையும் என் அருகில் இல்லாதோருக்கும் மாற்றத்தை கொண்டுவரும்.

## மனப்பாட வசனம் (பாடம் 8)

"இதைக் கேட்டபோது இயேசு மிகுந்த ஆச்சரியம் அடைந்தார். தன்னைத் தொடர்ந்து வருகிற மக்களை நோக்கித் திரும்பினார். “இஸ்ரவேல் மக்களிடம் கூட இல்லாத வேறெங்கும் காணப்படாத, உயர்ந்த விசுவாசத்தை இவனிடம் கண்டேன்” என்றார். லூக்கா 7: 9

### வகுப்பீடு (பாடம் 8)

ஒரு நண்பன் அல்லது உறவினருக்கு ஒரு குறிப்பு எழுதுங்கள், அவர்கள் எவ்வாறு இருக்கிறார்கள் என்று கேளுங்கள், முடிந்தால் அவர்களுக்காக பிரார்த்தியுங்கள்.

### கடவுளுடைய டிஎன்ஏ (பாடம் 8)

இந்த பாடத்தில் ஆண்டவர் குறித்து நாம் என்ன கற்றுக்கொண்டோம்? ஆண்டவரே உயர்ந்த அதிகாரி.






## வேடிக்கை நேரம்! (பாடம் 8)

### விளையாட்டு (பாடம் 8)

பீன் பை விளையாட்டுகள்

ஆசிரியர்கள் சில தற்காலிக பீன் பைகள் செய்து அதை இந்த விளையாட்டிற்கு பயன்படுத்திக்கொள்ளலாம். அவற்றை செய்ய, இரட்டை பிளாஸ்டிக் பைகள் (ஒரு பையை மற்றொன்றிற்குள் போடவும்), வறண்ட பீன்கள் அல்லது அரிசியை ஒரு கோப்பையளவு எடுத்து அதை பையில் போடவும், பின்னர் அவை கீழே சிந்திவிடாமல் இருக்க முடிச்சு போட்டுவிடவும்.

மாணவர்கள் பீன் பைகளை காற்றில் மெதுவாக தூக்கிப்போட்டு பிடிக்கவும்.

மாணவர்கள் பீன் பையை மற்ற மாணவருக்கு தூக்கிப்போடவும், அவர் அதை பிடித்து ஒரு அடி பின்னே போய் வீசுதலையும், பிடித்தலையும் மேலும் சிரமமாக்குவார், பின் மெதுவாக அந்த பையை மற்ற மாணவரிடம் கொடுத்துவிடுவார்.

பழைய மாணவர்களுக்காக கூடுதல் யோசனைகள்:

- சவாலை இன்னும் அதிகமாக்க, மாணவர்கள் காற்றில் பையிருக்கும்போது அதை பிடிக்கும் முன் கைதட்டல் செய்வர்.
- சவாலை இன்னும் அதிகமாக்க, மாணவர்கள் ஒரு கையை தங்கள் பின்னே கட்டிக்கொண்டு, ஒரே கையால் பையை பிடிப்பர்.

### விவாதம் (பாடம் 8)

(பழைய மாணவர்களுக்காக)

1. குணமாக்குதலில் நம்பிக்கையின் பங்கு என்ன?

நம்பிக்கை என்பது, உங்களால் காணமுடியாமல் போனாலும் ஒன்றை நம்புவது. இந்த எடுத்துக்காட்டுகள் குணமாக்குதலில் நம்பிக்கையின் பங்கை எடுத்துரைக்கும்: ஒரு பெண் தான் ஏசுபிரானை தொட்டால் தான் குணமாக்கப்படுவோம் என்று எண்ணினார், அப்போதே அவர் குணமாக்கப்பட்டார். ஆண்டவர் அவரிடம், "உனது நம்பிக்கை உன்னை குணமாக்கியது" என்று கூறினார். மார்க் 2 அத்தியாயத்தில், ஒரு நபரின் நண்பர்கள் அவரை ஒரு கட்டிடத்தின் மேலிருந்து கீழே இறக்கினர், ஆண்டவர் அந்த நபரை அவரது நண்பர்களின் நம்பிக்கையினால்தான் காப்பாற்றினார் என்று பைபிள் கூறுகிறது. லூக்கா 7ல், சென்ச்சூரியன், யேசுபிரானால் தொலைவிலிருந்தும் குணமாக்கலை செய்யமுடியுமென்றும் மொத்த நாட்டிலும் சிறந்த நம்பிக்கையை கொண்டுள்ளார் என்றும் அறிவுறுத்தப்பட்டார். மத்தேயு 15ல், ஒரு பெண்மணி உண்மையை விளக்கி இயேசுவின் மனதை மாற்றி, தனக்கான குணமாக்கலை பெற்றுக்கொண்டார். எனவே நம்பிக்கை என்பது குணமாக்கலை பெற வெளிப்படையாக மிகவும் முக்கியமானது, நீங்கள் எதிர்பார்க்கும் குணமாக்கல் உங்களுக்கு கிடைக்கவில்லையா, அது நம்பிக்கையின்மையால்தான். பல நேரங்களில் நாம் ஏன் இன்னும் குணமாக்கப்படவில்லை என்பது நமக்கு தெளிவாக இல்லாமல் இருக்கலாம், ஆனால் நம்பிக்கைதான் மிகவும் முக்கியம் என்பது நம்மால் தெரிந்துகொள்ளமுடியும்.




2. உங்கள் நம்பிக்கைக்காக உங்கள் பள்ளி உங்களுக்கு கிரேடு வழங்கினால், நீங்கள் என்ன கிரேடு பெறுவீர்கள்?


பல்வேறு கிரேடுகள் என்றால் என்ன என்பது குறித்து விவாதியுங்கள்; தேர்ச்சிபெறுதல் என்றால் என்ன, தோற்றுவிடுதல் என்றால் என்ன. (அமைப்பை பயன்படுத்தி உங்கள் நாட்டை கிரேடு செய்யுங்கள். சில 10த்தை பெரிய மதிப்பெண்ணாய் கொண்டிருக்கும், சில Aவை கொண்டிருக்கும்) நம்பிக்கையை வெறுமனே தேர்ச்சிபெறுதலும், அதில் 10 அல்லது A வாங்குவதும் எப்படி இருக்கும்? எடுத்துக்காட்டுகள்: விலகுதல் தோறபதுதான், அதிலே இருந்து கீழ்ப்படிதல் தேர்ச்சிபெறுதல் ஆகும். ஒருவேளை நீங்கள் கீழ்ப்படிந்து ஆனால் அதிகமாக குறைகூறிக்கொண்டே இருந்தீர்களானால், உங்கள் புகார்களினால் உங்களுக்கு B/8 கிடைக்கும்.

3. கிறிஸ்துவரல்லாதவர்கள் எத்தகைய நம்பிக்கையை கொண்டிருப்பர்?

நம்பிக்கை என்பது நாம் கண்ணால் காண முடியாததின்மேல் கொள்வது, எனவே கிறிஸ்துவரல்லாதவர்களுக்கும் நம்பிக்கை உண்டு. நாம் ஒரு நாற்காலியில் அமர்ந்தோமானால், அது உடையாது என்ற நம்பிகையில்தான். பரிணாமத்தை நம்ப, அல்லது நாம் நம்பும் ஒரு அரசியல்வாதி தேர்தலில் வெல்வதற்கும் நம்பிக்கை வேண்டும். உண்மையில் இல்லாத கடவுள்களிடம் மக்கள் நம்பிக்கை கொள்கின்றனர், மக்கள் மீது கொள்ளும் நம்பிக்கை சில நேரங்களில் பொய்த்துவிடுகிறது. உலகெங்கிலும் நம்பிக்கை உள்ளது, ஒவ்வொருவரும் ஏதோவொன்றில் அதை கொண்டுள்ளனர்.

## மாணவர் பக்கங்களுக்கான விடைகள் (பாடம் 8)






## லூக்காஸின் பரிசோதனை (பாடம் 8)

உங்கள் மாணவர்களை பலூன்கள் ஊத சொல்லி, அவற்றை அவர்களின் தலையில் தேய்த்து நிலையான மின்சாரத்தை உருவாக்க செய்யுங்கள். இப்போது பலூனை சுவற்றில் வீசுங்கள், நிலையான மின்சாரத்தின் காரணத்தால், அது எந்த உதவியும் இன்றி ஒட்டிக்கொள்வதை காணுங்கள்! (விவரங்களுக்கு யூடியூப்பை காணவும்)
https://www.facebook.com/childrenareimportant/videos/1293034897399557/

# --[ வழக்கு 9 ]—

**குறிப்புகள்! (பாடம் 9)**

## 1 குறிப்பு #1 தலைப்பு (பாடம் 9)

பார்வையின்மைக்கான மர்மமான தாக்குதல் வழக்கு

## 2 குறிப்பு #2 நாடகம் (பாடம் 9)

கதைகூறுபவர்: இது கற்பனை கதையாகும் ஆனால் அப்பாவிகளை காக்கும் பொருட்டு சில பெயர்கள் மற்றும் இடங்கள் மாற்றப்பட்டுள்ளன.
காவல் துறை மேலாளர்: [கதவு தட்டுகிறார்] காலை வணக்கம், இது சுகாதார துறை, உங்களிடம் சில கேள்விகள் கேட்கவேண்டும்.
ஜூடாஸ்: [கதவை திறக்கிறார்] சொல்லுங்கள் காவல் துறை மேலாளரே?
காவல் துறை மேலாளர்: இங்கே சில சுகாதார மேம்பாடு நடந்தாய் எனக்கு புகார் வந்துள்ளது. நீங்கள் இங்கு மருத்துவம் செய்கிறீர்களா?
ஜூடாஸ்: இல்லை, ஐயா.
காவல் துறை மேலாளர்: அந்த பயணியுடன் உங்களது ஈடுபாடு எந்த அளவு இருந்தது என்று சொல்லமுடியுமா?
ஜூடாஸ்: அவர் தனது குழுவுடன் என்னிடம் வந்தார்.
காவல் துறை மேலாளர்: நீங்கள் ஏதாவது சிறப்பு உணவுகள் வழங்கினீர்களா?
ஜூடாஸ்: குழு கூட்டாளிகள் அதிகம் உண்டனர், ஆனால் அந்த பயணி சாப்பிட்டதை நான் பார்த்ததாய் நினைவில்லை. அவர் அதிக நேரத்தை பிரார்த்தனையில் செலவிட்டு கொண்டிருந்தார்.
காவல் துறை மேலாளர்: நீங்கள் அவரை பார்த்தீர்களா?
ஜூடாஸ்: உண்மையை கூறினால், இல்லை, நான் அவருக்கு உதவுகிறேன் என்றேன், மருத்துவரை அழைக்கவா என்று அவரிடம் கேட்டேன் ஆனால் அவர் மறுத்துவிட்டார். அவர் யாருக்கோ காத்திருந்தார்.
காவல் துறை மேலாளர்: அவர் தனது கூட்டாளிகளின் யாரையாவது அவரை அழைத்துவர அனுப்பினாரா?


ஜூடாஸ்: இல்லை, அவர்கள் யாருடனும் பேசக்கூட இல்லை. வந்தார், பிரார்த்தித்தார், காத்திருந்தார்.
காவல் துறை மேலாளர்: பிறகு என்ன நடந்தது?
ஜூடாஸ்: சில நாட்கள் கழித்து ஒருவர் வந்தார், அவரை தொட்டார், இரு விஷயங்கள் அவரிடம் கூறினார், அவரை கழுவிவிட்டு சென்றுவிட்டார்.
காவல் துறை மேலாளர்: அவர் மருத்துவரா? அவர் ஏதாவது மருந்து கொடுத்தாரா? ஏதாவது கருவிகள் பயன்படுத்தினாரா?
ஜூடாஸ்: இல்லை, இல்லை, இல்லை.
காவல் துறை மேலாளர்: அவர்கள் நண்பர்களா?
ஜூடாஸ்: உண்மையில் நான் அவர்கள் எதிரிகள் என்று நினைத்தேன், ஆனால் அவர்கள் நண்பர்கள்போல் நடந்துகொண்டனர். அது முழுவதுமே எனக்கு குழப்பமாயிருந்தது.
காவல் துறை மேலாளர்: சரி, உங்கள் உதவிக்கு நன்றி. மேலும் கேள்விகள் இருந்தால் நான் உங்களை எங்கே காணலாம்?
ஜூடாஸ்: நான் நேர் தெருவில் என் வீட்டில்தான் இருப்பேன்.




## குறிப்பு #3 இலக்கு (பாடம் 9)

வகுப்பிற்கு இந்த ஸ்தூலமான பொருளை ஒரு குறிப்பாக கொண்டுவரவும்: சன்கிளாசஸ்.

## குறிப்பு #4 தொல்பொருளியல் (பாடம் 9)



மத்தியதரைக் கடலிலிருந்து சில மையில்கள் உள்ளே இருக்கும், கிட்டத்தட்ட 200,000 மக்களை கொண்ட பரபரப்பான நகரமான தர்ஸஸ்சின் புகைப்படம். (ரகசியம்: தர்ஸஸ் நகரத்திலிருந்துதான் பவுல், இறைத்தூதர் வந்தார்.)

## குறிப்பு #5 பைபிள் காட்சி (பாடம் 9)

ரகசியம்: "நேர்" என்று தெரு அழைக்கப்பட்டது ஏனெனில் இயேசு கிறிஸ்து சவுல்லை அங்கு அனுப்பினார், அவர் பார்வையற்றவர் என்பதால் அவருக்கு ஒரு தடியையும் கொடுத்தனுப்பினார், ஏனெனில் அவர் ஆண்டவருக்கு கீழ்ப்படிந்தார்.

வழக்கு முடிந்தது வழக்கு முடிந்தது

# வழக்கு முடிந்தது! (பாடம் 9)

## பைபிள் கதை (பாடம் 9)

பாலின் மாற்றம்

பைபிளில் இருந்து: அப்போஸ்தலர் 9: 1-19



இயேசுவை பின்பற்றுபவராக ஆகும்முன், பால் ஒரு தீயவன், கிறிஸ்துவை பின்பற்றும் அனைவரையும் வெறுத்தவன். அவன் மிக மோசமான பாவிகளுள் தானும் ஒருவன் என்று கூறுவான்! இயேசுவை நேசிக்கும் காரணத்திற்காக, பால் யாரை வேண்டுமானாலும் சிறைக்கு அனுப்ப அனுமதிக்கப்பட்டிருந்தான். ஒரு நாள் டமாஸ்கஸ் நகருக்குள், கிறிஸ்துவர்களை தேடிக்கொண்டு அவன் நடந்துகொண்டிருந்தான். திடீரென்று ஒரு அதீத வெளிச்சமான ஒளி வந்தது, பால் கீழே விழுந்துவிட்டான். ஒரு குரல் கேட்டது "பால் நீ ஏன் என்னை துன்புறுத்துகிறாய்?". அவன் தன்னுடன் பேசுவது யார் என்று தெரிடந்த்துக்கொள்ள எண்ணினான், உடனே அதற்கான விடை அவனுக்கு கேட்டது, "நான் நீ வெறுக்கும் இயேசு, எழுந்து நகருக்குள் செல்" என்றது.

எழுந்து நின்றதும், பால் உணர்ந்துகொண்டான் தன்னால் பார்க்க முடியவில்லை என்று! ஏசுபிரான் அவனை பார்வையற்றவன் ஆக்கிவிட்டார்! பால் அவனுடைய சில நண்பர்களுடன்தான் வந்திருந்தான், அவர்கள் அவன் நகருக்குள் செல்ல உதவினர். அங்கே, மூன்று நாட்கள் அவன் எதையும் உண்ணவும் இல்லை, குடிக்கவும் இல்லை, தனது நேரத்தை பிரார்த்தனையிலேயே செலவழித்தான்.

பால் பிரார்த்தனை மேற்கொண்டதும், ஆண்டவர் தனது சீடரான அனானியசுடன் பேசினார். ஆண்டவர் பாலின் பார்வைக்காக அனானியஸ் சென்று பிரார்த்திக்க வேண்டுமென்று விரும்பினார். அனானியஸ் ஆச்சரியமடைந்தார்; அவருக்கு தெரியும் பால் கிறிஸ்துவர்களுக்கு முன்னாளில் எத்தகைய பாவங்களை செய்தான் என்று, அதை அவர் ஆண்டவரிடம் கூறினார். ஆண்டவர் அனானியஸிடம், தான் பாலை தேர்வு செய்தது தான் எந்த அளவு புறஜாதிகளையும், இஸ்ரேல் மக்களையும் நேசிக்கிறேன் என்பதை அவன் வாயிலாக எடுத்துரைக்கவே என்று பதிலளித்தார். கீழ்ப்படிதலின்பால், அனானியஸ் பாலிற்காக பிரார்திக்கச்சென்றார்.

பிரார்தனையின்போது அனானியஸ் பாலின் மேல் தன் கைகளை வைத்தபோது, பரிசுத்த தேவ ஆவி அவனை நிரம்பியது, அவனது பார்வை குறைபாடும் நீங்கியது. பாலின் மனம் மாறியது, அவன் உடனே சென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டான்.

## விண்ணப்பம் (பாடம் 9)

நான் என் விரோதிகளையும் நேசிப்பேன்.

### மனப்பாட வசனம் (பாடம் 9)

"ஆனால் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், உங்கள் பகைவர்களையும் நேசியுங்கள். உங்களுக்குத் தீமை செய்கிறவர்களுக்காக ஜெபியுங்கள்."
மத்தேயு 5:44

### வகுப்பீடு (பாடம் 9)

ஒரு சிறிய பரிசை வாங்கி, உங்களை மோசமாக நடத்தியவர்களுக்காக கொடுங்கள்.

### கடவுளுடைய டிஎன்ஏ (பாடம் 9)




இந்த பாடத்தில் ஆண்டவர் குறித்து நாம் என்ன கற்றுக்கொண்டோம்? ஆண்டவர் தனது இருத்தலை மக்களுக்கு காட்ட விரும்புகிறார்.



# வேடிக்கை நேரம்! (பாடம் 9)

### விளையாட்டு (பாடம் 9)

சவுல் போல் பார்வையற்று போதல்
ஆசிரியர் ஒரு மாணவரின் கண்களைக் கட்டிவிடுவார், அவர் மற்றொரு மாணவரை பிடிக்கும் வரை நகர்ந்துகொண்டே இருக்கவேண்டும், அவர் அவ்வாறு பிடித்ததும், அந்த மாணவர் ஒரு சிறு ஒலியெழுப்பவேண்டும். அந்த கண்கட்டப்பட்ட மாணவர் அந்த ஒலிகொண்டு அந்த மாணவர் யாரென்று கண்டுகொள்ள முயற்சிக்கவேண்டும். மாட்டிக்கொள்வதிலிருந்து தப்பிக்க எண்ணும் மாணவர்கள் மெதுவாக அறைக்குள்ளேயே அமைதியாக நகர்ந்திடவேண்டும்.
முன்பள்ளி-2 அணிகள் கொண்டிருங்கள், ஒவ்வொரு அணியிலும் ஒருவர் கண்ணை கட்டிக்கொள்ளவேண்டும். ஒரு மாணவர் கண்ணை கட்டியவரை விடுவார், மற்றொருவர் அவரை ஆசிரியர் வகுப்பிற்கு முன்னரே அமைத்து வைத்திருந்த சிறு சிறு தடைகளிருக்கும் பகுதிவழியாக வழிநடத்துவார்.

### விவாதம் (பாடம் 9)

(பழைய மாணவர்களுக்காக)

1. மக்கள் ஒருவரையொருவர் மதிப்பிடும்போது, அது எவ்வாறு இருக்கும்?

சில நேரங்களில் மதிப்பிடுதல் என்பது: கிசுகிசுப்பது, சிரிப்பது, ஒருவரிடமிருந்து விலகிச்செல்வது அல்லது சிலருடன் பேச மறுப்பது போன்றவகையில் இருக்கும். ஒரு ஆசிரியராக உங்கள் குறிக்கோள், சமீபத்தில் பால் கிறிஸ்துவர்களை கொன்றபோது எவ்வாறு மக்கள் அவனை மதிப்பிட எண்ணினார்கள் மற்றும் எவ்வாறு ஆண்டவர் ஒருசிலரை இவர் தன்வார்த்தையை செயலாற்றுவார் என்றெண்ணி தேர்வுசெய்வார் போன்றது குறித்து பேசுவது.

2. கிறிஸ்துவர்களாக, நமக்கு எதிரிகளே இருக்காது, எனவே நான் நேசிக்கவேண்டிய எதிரி யார்?



நிதர்சனத்தில் கிறிஸ்துவர்களும் கிறிஸ்துவர்கள் அல்லாதவர்கள்போல் விவாதங்களில் சிக்கிக்கொள்ள நேரிடும், சில நேரங்களில் அது இன்னும் மோசமாகக்கூட போய்விடும் என்பதை உங்கள் மாணவர்களுடன் விவாதியுங்கள். நமக்கு நாமே பொய்யுரைக்கக்கூடாது, நமக்கும் எதிரிகள் உண்டு என்பதை நாம் அனைவரும் ஒப்புக்கொள்ளவேண்டும். அவர்கள் நாம் ஒத்துப்போக முடியாதவர்கள், நம்மை காயப்படுத்தியவர்கள், அல்லது நம்மிடமிருந்து எதையேனும், எவரையேனும் திருடிக்கொண்டவர்கள். அவர்களிடம்தான் நாம் அன்பு காட்டவேண்டும்


3. ஆண்டவர் உங்களுடன் பேச முயலும்போது, நீங்கள் அதை கவனிக்காமல் இருக்கிறீர்கள், எனவே உங்கள் கவனத்தை பெற அவர் என்ன செய்வார்?

சிலநேரங்களில் ஆண்டவர் நம்மை, நமது காதலரை இழக்கச்செய்வது, நம்மை வேறு வித்தியாசமான நகரம் அல்லது மாநிலத்திற்கு நகர்த்துவது, தேர்வில் மோசமான கிரேடு பெற வைப்பது, நமது நண்பர் ஒருவரை வேறு வகுப்பிற்கு மாற்றுவது, அல்லது நடைபாதையில் அழுதுகொண்டிருக்கும் ஒருவரிடம் மாட்டிவைப்பது போன்ற பல தீவிரமான விஷயங்கள் மூலம் நமது கவனத்தை பெற செய்வார். ஆண்டவர் எதுவும் செய்து நமது கவனத்தை கவர பார்ப்பார் ஏனெனில், அவர் நமது உடல் நல்வாழ்வை விட ஆன்மீக நல்வாழ்வின்மேல் அதிக அக்கறை கொண்டுள்ளார்.

## மாணவர் பக்கங்களுக்கான விடைகள் (பாடம் 9)





## லுக்காஸின் பரிசோதனை (பாடம் 9)

மாணவர்களை பொம்மை "கைபேசிகளை" இரண்டு கோப்பைகள், இரண்டு காகித கிளிப்புகள் மற்றும் ஒரு துண்டு கயிறு கொண்டு செய்ய சொல்லுங்கள். இரு கோப்பைகளை அவற்றிற்கிடையில் நீண்ட கயிறுகொண்டு இணைக்கவும்,

கோப்பைகளை பயன்படுத்தி அறைக்கு அப்பாலிருந்து பேசவும். (விவரங்களுக்கு யூடியூப்பை காணவும்)
https://www.facebook.com/childrenareimportant/videos/1292377594131954/

# --[ வழக்கு 10 ]—

குறிப்புகள்! (பாடம் 10)

## குறிப்பு #1 தலைப்பு (பாடம் 10)

தெரியாத காதோதி குறித்த வழக்கு

## குறிப்பு #2 நாடகம் (பாடம் 10)

கதைகூறுபவர்: இது கற்பனை கதையாகும் ஆனால் அப்பாவிகளை காக்கும் பொருட்டு சில பெயர்கள் மற்றும் இடங்கள் மாற்றப்பட்டுள்ளன.
இயக்குபவர்: அவசர உதவி, உங்களுக்கு என்ன அவசரம்?
பைனேஸ்: எனக்கு நம்பகமான மரண அச்சுறுத்தல் வந்துள்ளது.
இயக்குபவர்: எப்போது இது நடந்தது?
பைனேஸ்: நேற்றிரவு. இது என் சகோதரனால் என் தந்தைக்கு வழங்கப்பட்டது.
இயக்குபவர்: சரி, எனக்கு புரிகிறது, நான் நினைக்கிறன். உங்கள் சகோதரன் உங்களை கொல்லப்போவதாய் மிரட்டுகிறாரா?
பைனேஸ்: அப்படி சொல்ல முடியாது.
இயக்குபவர்: சரியாக அவர் உங்கள் சகோதரர் இல்லையா?
பைனேஸ்: இல்லை, ஆனால் நான் அடுத்த பக்கத்தை சொல்கிறேன். அவன் என்னை கொல்லப்போவதில்லை.
இயக்குபவர்: சரி, நீங்கள் சொல்கிறீர்கள் உங்கள் சகோதரன் அல்லாதவர் உங்களை கொல்லப்போவதில்லை?
பைனேஸ்: ஆம், அதுதான் சரி.
இயக்குபவர்: இது இங்கே புகாரளிக்கக்கூடிய அவசரம் என்று என்னால் உறுதியாக கூறமுடியாது.
பைனேஸ்: அவன் கூறினான். நானும் என் சகோதரனும் ஒரே நாளில் இறந்து ஆண்டவர் எங்களை பெற்றுக்கொள்ளப்போகிறார் என்று.
இயக்குபவர்: ஆண்டவர் உங்கள் இருவரையும் ஒரே நாளில் இறக்கச்செய்ய போகிறார்?
பைனேஸ்: அதுதான் சரி.
இயக்குபவர்: ஒரு நொடி இருங்கள், உங்கள் குரலை நான் கண்டுபிடித்துவிட்டேன். நீங்கள் எப்போதும் இறைச்சித் துண்டு சாப்பிடும் அந்த குண்டு பூசாரிதானே?

பைனேஸ்: இல்லை, நீங்கள் என் சகோதரனை பற்றி கூறுகிறீர்கள். எனக்கு விலாதான் பிடிக்கும்.
இயக்குபவர்: இங்கே பாருங்கள், நான் கடுமையாக நடந்துகொள்ள விரும்பவில்லை, ஆனால் அவர் குறித்து இதுவரை நான் தவறாக கேள்விப்பட்டதில்லை. இது தவிர, நீங்கள் ஆண்டவருக்கு எதிராய் பாவம் செய்தால், உங்களுக்கு யார் உதவுவார்?
பைனேஸ்: அயோ, இது கடுமையாக உள்ளது. சரி நீங்கள் ஒரு அதிகாரியை அனுப்பபோகிறீர்களா அல்லது வேறுஏதாவது செய்யபோகிறீர்களா?
இயக்குபவர்: ஐயா, என்னை மன்னித்துக்கொள்ளுங்கள், என்னால் உங்களுக்கு எந்த உதவியும் செய்ய இயலாது. உங்கள் தந்தையிடம் முறையிடுங்கள், அவர் உங்களுக்கு உதவ ஏதாவது வழி கண்டுபிடிப்பார்.
பைனேஸ்: எனினும் நன்றி. வணக்கம்.





## 3 குறிப்பு #3 இலக்கு (பாடம் 10)

வகுப்பிற்கு இந்த ஸ்தூலமான பொருளை ஒரு குறிப்பாக கொண்டுவரவும்: காது மொட்டுகள்.

## 4 குறிப்பு #4 தொல்பொருளியல் (பாடம் 10)

எலி, ஆரோனின் மகனான இதமரின் வரிசையில் வந்தவர், பத்து கட்டளைகளை கொண்ட உடன்படிக்கையின் பேழை ஷிலோஹ்விலிருந்தபோது, நீதிபதியாகவும், இஸ்ரயேலின் உயர் மதகுருவாகவும் இருந்தவர். (ரகசியம்: பைபிள் கதையிலிருந்து, சாமுவேல் காலத்தில், எலியைப்போல் ஒரு உயர் மதகுரு எவ்வாறு உடையணிந்திருப்பார் என்பதற்கான புகைப்படம்.)

## 5 குறிப்பு #5 பைபிள் காட்சி (பாடம் 10)



ரகசியம்: வாசஸ்தலத்திற்குள்: ஒரு குத்துவிளக்கு, ரொட்டி வைக்கப்பட்டிருக்கும் ஒரு மேசை, ஒரு தூப பலிபீடம், ஒரு திரைசீலை மற்றும் ஒரு பெட்டி. மேலும் ஒரு தலையணை, போர்வை ஏனெனில் சாமுவேல் தரையில் உறங்கிக்கொண்டிருக்கிறான் -1 சாமுவேல் 3: 3

# வழக்கு முடிந்தது! (பாடம் 10)

## பைபிள் கதை (பாடம் 10)

சாமுவேல் ஆண்டவரை கவனிக்கிறான்
பைபிளில் இருந்து: 1 சாமுவேல் 3:1–18



சாமுவேல் ஒரு விசேஷமான சிறுவன்; ஆண்டவர் அவரது பணிக்காக அவனை அனுப்பியிருந்தார். அவன் மதகுரு எலியால், வாயில்தளத்திற்குள் வளர்த்தப்பட்டான், சாமுவேலும் அவருக்கு உண்மையாய் இருந்தான். சாமுவேலும் ஆண்டவருக்கு கீழ்ப்படிய முடிந்தவரை சிறப்பாக செயலாற்றினான். இந்த காலகட்டத்தில், ஆண்டவர் பெரிதாக தனது மக்களுடன் பேசுவதில்லை, சாமுவேலும் ஆண்டவரது குரலை கேட்டதில்லை. எனவே, ஒரு இரவு ஆண்டவர் அவன் பெயரை அழைத்தபோது, எலிதான் அழைக்கிறார் என்று அவன் எண்ணினான். எலிக்கு ஏதோ பிரச்னை என்று எண்ணிக்கொண்டு, அவன் அவரிடம் ஓடினான். எலி, தான் அவனை அழைக்கவில்லை என்று கூறி, அவனை போய் உறங்கச்சொன்னார். சாமுவேல் உறங்கியதும், அவன் தன் பெயர் மீண்டும் அழைக்கப்படுவதை கேட்டான், எலியை நோக்கி ஓடினான். எலி, தான் அவனை அழைக்கவில்லை என்று கூறி, அவனை போய் மீண்டும் உறங்கச்சொன்னார். சாமுவேல் மீண்டும் உறங்கியதும், அவன் தன் பெயர் அழைக்கப்படுவதை உணர்ந்தான், மீண்டும் எலியிடம் ஓடினான். இந்த முறை எலி வேறுவிதமாக பதிலளித்தார். அவர் சாமுவேலிடம் அது ஆண்டவரின் அழைப்பாக இருக்கும், எனவே அது மீண்டும் நிகழ்ந்தால், "கூறுங்கள் ஆண்டவரே, உங்கள் பணியாள் கேட்டுக்கொண்டிருக்கிறேன்" என்று உரைக்கும்படி கூறினார். மீண்டும் சாமுவேல் சென்று உறங்கினான், ஆனால் அவன் பெயர் மீண்டும் அழைக்கப்பட்டு அவன் எழுந்தான். படுக்கையில் எழுந்து அமர்ந்து, "கூறுங்கள் ஆண்டவரே, உங்கள் பணியாள் கேட்டுக்கொண்டிருக்கிறேன்" என்றான். ஆண்டவர் சாமுவேலிடம் பதிலளிக்கும்விதமாக அனைத்து விஷயங்களையும் அவனிடம் பகிர்ந்துகொண்டார். அவர் காட்டிய விஷயங்களுக்குள் ஒன்று, எவ்வாறு எலியின் புதல்வர்கள் இருவருக்கும் அழிவு வரப்போகிறதென்று என்று கூறினார். ஆண்டவர் சாமுவேலுடன் பேசினார், இந்த முறை சாமுவேல் கவனித்தான்.

## விண்ணப்பம் (பாடம் 10)

நான் கவனிக்கும்போது, ஆண்டவர் என்னுடன் உரையாடுகிறார்.

### மனப்பாட வசனம் (பாடம் 10)

"...செவி கொடுக்கும். மேய்ப்பன் தன் சொந்த ஆடுகளை அவற்றின் பெயரைச் சொல்லி அழைப்பான். அவன் அவற்றை வெளியே நடத்திக்கொண்டு போவான்." ஜான் 10: 3பி

### வகுப்பீடு (பாடம் 10)

இந்த வாரம், பெரியவர்கள் சிலரை பேட்டியெடுத்து, சாமுவேல் போன்று யாரொருவர், ஆண்டவரிடமிருந்து கேட்டார்கள் என்பதை கண்டறியுங்கள். கேளுங்கள், "ஆண்டவர் எப்போதாதாவது உங்களுடன் பேசியுள்ளாரா?" ஆண்டவர் எவ்வாறு உங்களுடன் பேசினார்? அது ஆண்டவர் என்று உங்களுக்கு எப்படி தெரிந்தது?"

### கடவுளுடைய டிஎன்ஏ (பாடம் 10)




இந்த பாடத்தில் ஆண்டவர் குறித்து நாம் என்ன கற்றுக்கொண்டோம்? ஆண்டவர் அவரது மக்களுடன் தொடர்புகொள்ள எண்ணுகிறார்.



## வேடிக்கை நேரம்! (பாடம் 10)

### விளையாட்டு (பாடம் 10)

கவனிக்கும் விளையாட்டுகள்

ஆசிரியர் வகுப்பை ஆரம்பிக்கும்போது, அவர்களுள் யாரேனும் தான் நல்ல கவனிப்பாளர் என்று எண்ணுகிறாரா என்று கேட்டபடி ஆரம்பிப்பார். கீழ்வரும் பொருட்களைக்கொண்டு, மாணவர்கள் கவனிப்பதில்லை என்பதை கண்டுபிடிக்க முயலுங்கள்:

- 3 ஆப்பிள்களிலிருந்து 2 ஆப்பிள்களை எடுத்தால், உங்களிடம் எத்தனை இருக்கும்? (1 ஆப்பிள் அல்ல, 2... ஏனெனில் உங்களிடம் அது இருக்கிறது.)
- எனக்கு பின்னர் 5 நிமிடங்கள் கழித்து குதிக்கும்போது சொல்லுங்கள்: நொண்டுங்கள், நொண்டுங்கள், நொண்டுங்கள், நொண்டுங்கள், நொண்டுங்கள். போக்குவரத்தில், பச்சை விளக்கு எறிந்தால் என்ன செய்வீர்கள்? ("செல்லுங்கள்" என்பதுதான் விடை, "நில்லுங்கள்" என்பதல்ல)
- கைதட்டல், வாகன ஒலி, மழை, மேலும்பல போன்ற பல்வேறு ஒலி விளைவுகளை கொண்ட குறுவட்டை பயன்படுத்துங்கள். (அல்லது இணையத்தில் ஒலிகளை கண்டறிந்து அவற்றை உங்கள் கைபேசியில் கொண்டிடுங்கள்.) குழந்தைகளை கண்களை மூடச்சொல்லி, அவர்கள் அந்த ஒலியை கண்டறிந்தால் கைகளை உயர்த்த சொல்லுங்கள். உங்கள் கைபேசியிலிருந்து ஒரு நேரத்தில் ஒரு ஒலியென, ஒலிக்கவிட்டு குழந்தைகளை ஊகிக்கச்செய்யுங்கள்.

- குழந்தைகளை நான்கு பேர்கொண்ட ஒரு குழுவாய் பிரித்து, ஒவ்வொரு குழந்தைக்கும் எண் கொடுங்கள், 1,2,3,4. ஒரு மேசை அல்லது நாற்காலியில் நான்கு பொதுவான இலக்குகளை கொண்டிருங்கள் (நாணயம், பென்சில், பாறைகள், காகிததாள் அல்லது காலியான மூடுவான்). மாணவர்களுக்கு வழிமுறைகள் குறித்து ஏற்கனவே எழுதி கொடுத்து படிக்கச் செய்திருக்கவேண்டும். எடுத்துக்காட்டாக: "எண் 2 காகிதத்தாளை எடுங்கள்." "எண் 1 நாணயத்தை எண் 4கிடம் கொடுத்திடுங்கள்" "எண் 3, பென்சிலை எண் 1றிடம் கொடுத்திடாதீர்கள்." இது மாணவர்கள் சொல்வதை சரியாக பின்பற்றுகிறார்களா என்பதுதான் இலக்கு. முடிவில், யாரிடம் என்ன பொருள் உள்ளதென்று பாருங்கள். ஆசிரியர் வழிமுறைகளை வெவ்வேறு விதமான இலக்குகள் கொண்டு மாற்றலாம்: பெற்றிடு, கொடு, ஒப்படைத்திடு, கடந்து, வாங்கிக்கொள், கீழேப்போடு, எடு, வணிகமாக்கு, போன்றவை.

## விவாதம் (பாடம் 10)

(பழைய மாணவர்களுக்காக)



1. ஆண்டவர்தான் உங்களுடன் பேசுகிறார் என்று உங்களால் எவ்வாறு கூறமுடியும் அல்லது உங்கள் வயிற்றுக்குள் இருக்கும் மதியம் நீங்கள் உட்கொண்ட உணவா?

ஆண்டவரிடமிருந்து எவ்வாறு கேட்பது என்று அனைத்து கிறிஸ்துவர்களும் தெரிந்து கொள்ளவேண்டும். முதலில் நீங்கள் பைபிளிளிருந்து கேட்டதை உறுதிசெய்துகொள்ளுங்கள், அது ஆண்டவரின் செயல்கள் அல்லது இலக்கியத்திலிருந்து வேறுபடவில்லையென்பதை உறுதிசெய்துகொள்ளுங்கள். இரண்டாவதாக, உங்களது அதிகாரிகள் மூலமாக நடக்கும் விஷயங்கள் கொண்டு உறுதிசெய்துகொள்ளுங்கள்: பெற்றோர்கள், போதகர்கள் அல்லது ஆசிரியர்கள். மூன்றாவதாக, உங்களது சொந்த ஆன்மாக்கொண்டு அது சரியா என்று பார்த்துக்கொள்ளுங்கள்.

2. சாத்தான்கள் உண்மையா?

சாமுவேலுடன் பேசியது ஆண்டவர்தானே தவிர, சாத்தான் அல்ல, ஆனால் இந்த கதை சாத்தான்கள் குறித்த எண்ணத்தை கொண்டுவருகிறது. இப்போது பூமியில், தேவதூதர்கள் மற்றும் அரக்கர்கள் இருப்பதாய் பைபிள் தெளிவாக கூறுகிறது, கண்களால் காணமுடியாத ஆன்மிக விஷயங்கள். இலக்கியங்கள் எங்கிலும், 'சாத்தான்கள்' போல் இறந்தவர்கள், வீட்டிலோ அல்லது பகுதிகளிலோ தூக்கில் தொங்குவதாய் இல்லை. எனவே, பல நேரங்களில் மக்கள் சாத்தான் இருப்பதாய் எண்ணினால், அது அவர்களின் கற்பனை அல்லது ஒரு துர்தேவதையாய் இருக்கலாம். துர்தேவதைகளை கண்டிக்க நமக்கு ஆண்டவரிடமிருந்து அதிகாரம் கிடைத்துள்ளது, நாம் ஒவ்வொரு பயம் தருகிற எண்ணத்தையும் வசப்படுவதாய் எடுத்துக்கொள்ளவேண்டும். எனவே கிறிஸ்துவர்களான நாம், 'சாத்தான்கள்' குறித்து பயப்பட தேவையில்லை. நாம் நம் மனதை விளையாடுவதிலிருந்து நில் என்று


கூறலாம், அல்லது நாம் துர்தேவதைகளை கண்டித்து வரவேற்பில்லாத இடத்தில் அவர்களின் விளையாட்டை நிறுத்தும்படி கூறலாம்.


3. நான் யாரை கவனிக்கவேண்டும்?

நீங்கள் ஒருவரைபோல் ஆக விரும்பும்போதோ அல்லது அவர்கள் சாதித்ததைப்போல் சாதிக்க எண்ணும்போது தவிர, ஒருவரது அறிவுரையை பின்பற்ற மாட்டிர்கள். நீங்கள் சரியான விஷயத்தை செய்யவேண்டுமா? பைபிள் கூறுவதை ஒத்திடாத ஒருவருடைய அறிவுரையை பின்பற்றாதீர்கள். உங்களை காட்டிலும் ஆன்மிகரீதியாக முன்னிலை வகிப்பவர்ளை கவனியுங்கள், நீங்கள் அவர் போல் ஆகவேண்டும் என்று விரும்புவீர்கள்.

## மாணவர் பக்கங்களுக்கான விடைகள் (பாடம் 10)



## லுக்காஸின் பரிசோதனை (பாடம் 10)

கண்கட்டப்பட்ட மாணவர் ஒருவரை அறையின் நடுவில் அமரச்செய்து, வகுப்பறையின் பல்வேறு பகுதியிலிருந்து முணுமுணுக்கும் நபர்களை கண்டறிய சொல்லுங்கள். இதில் மாறுபாடு செய்வதென்பது, கண்கட்டியிருக்கும் மாணவருக்கு ஒரு காதையும் மூடிவிடுதல், அல்லது முணுமுணுப்பதற்கு பதிலாக மற்றவரை விசில் சத்தம் செய்ய சொல்லுதல். (விவரங்களுக்கு யூடியூப்பை காணவும்)
https://www.facebook.com/childrenareimportant/videos/1292466710789709/

# --[ வழக்கு 11 ]—



**குறிப்புகள்! (பாடம் 11)**

## 1 குறிப்பு #1 தலைப்பு (பாடம் 11)

நடக்கும் மம்மியின் வழக்கு

## 2 குறிப்பு #2 நாடகம் (பாடம் 11)



கதைகூறுபவர்: இது கற்பனை கதையாகும் ஆனால் அப்பாவிகளை காக்கும் பொருட்டு சில பெயர்கள் மற்றும் இடங்கள் மாற்றப்பட்டுள்ளன.

தூதுவர்: நான் வந்துவிட்டேன்.

மேரி: அவர் என்ன சொன்னார்?

தூதுவர்: சிறப்பான செய்தி, இந்த நோய் இறப்பில் முடியாது என்று அவர் கூறினார்.

மேரி: (அழ தொடங்கி, தேம்புகிறார்)

தூதுவர்: என்ன நடந்தது?

மேரி: அவர் ஏற்கனவே இறந்துவிட்டார்!

தூதுவர்: அது எவ்வாறு நடக்கும்? அவர் இன்னொரு நாள் வரப்போகிறார் என்று கொஞ்சம்கூட தெரியவில்லை.

மேரி: எனக்கு புரியவில்லை, அவர் இறக்கமாட்டார் என்று அவர் உறுதியாக கூறினாரா?

தூதுவர்: நான் பார்க்கிறேன் [ஒரு காகித தாளை வெளியே எடுத்து, படிக்கிறார்], ஆம், அதுபோல்தான் தெரிகிறது. “இந்த நோய் இறப்பில் முடியாது.”

மேரி: என்னிடம் கொடுங்கள் [அதை படிக்கிறார்]

தூதுவர்: உங்களது இழப்பிற்கு என்னை மன்னித்திடுங்கள்.

மேரி: அவர் வருவதாய் கூறினாரா?

தூதுவர்: ஆம்.

மேரி: அவர் இங்கு வந்ததும் நான் அவருடன் பேசவேண்டும், ஏனெனில் எனக்கு இது புரியவில்லை. [தேம்ப தொடங்குகிறார்]

தூதுவர்: வேறேதும் உள்ளதா?

மேரி: நான் இறப்பிற்கான காரியங்களை மேற்கொள்கிறேன். நீங்கள் பூக்கடைக்கு சென்று சில மலர்களுக்கு சொல்லிவிடுறீர்களா, எனக்கு இங்கே இன்னும் சில உதவிகள் தேவையாய் இருக்கும்.
தூதுவர்: கண்டிப்பாக.

### 3 குறிப்பு #3 இலக்கு (பாடம் 11)


வகுப்பிற்கு இந்த ஸ்தூலமான பொருளை ஒரு குறிப்பாக கொண்டுவரவும்: வெள்ளை ரோல் பேண்ட்ஏஜ் அல்லது வெள்ளைத்துணி.




### 4 குறிப்பு #4 தொல்பொருளியல் (பாடம் 11)

இன்றைய பெத்தானி இவ்வாறுதான் உள்ளதென்பதற்கான புகைப்படம். (ரகசியம்: லாசரஸ் இந்த நகரில்தான் வாழ்ந்தார்.)

### 5 குறிப்பு #5 பைபிள் காட்சி (பாடம் 11)



ரகசியம்: மூடப்பட்ட கல்லறை (நன்றாக இல்லாவிடினும்), நாற்றம் ஏனெனில் லாசரஸ் நாட்கள் அங்கிருந்தார், மேரியும் மார்த்தாவும் அந்த கல்லறை திறக்கப்பட்டால் நாற்றமடிக்கும் என்றனர்.

## வழக்கு முடிந்தது! (பாடம் 11)

வழக்கு முடிந்தது வழக்கு முடிந்தது

### பைபிள் கதை (பாடம் 11)

லாசரஸ்
பைபிளின் இருந்து: ஜான் 11:1-44

ஏசுபிரான், அவரது அன்பை மக்களுக்கு பகிர்ந்துகொள்ள ஒரு நகருக்கு வருகை தந்தார், அங்கே தனது நல்ல நண்பரான லாசரஸ் நோயுற்று, மரணத்தருவாயில் இருப்பதை கண்டறிந்தார். லாசரஸ்சின் சகோதரி ஏசுவிடம் வந்து தங்களது கிராமத்திற்கு விரைந்து வந்தால், தன்னுடைய சகோதரனை காப்பாற்றிவிடலாம் என்றாள். ஏசுபிரான் லாசரசை காணசெல்லும்முன் மேலும் இரண்டு நாட்கள் அங்கே தங்க எண்ணினார். அவர் தனது சீடர்களிடம் லாசரஸ் ஆழ்ந்த உறக்கத்திலிருக்கிறார் என்றார் ஆனால் யாருக்குமே அது புரியவில்லை, அவர் உண்மையிலேயே இறந்துவிட்டார் என்று எண்ணினர். லாசரஸ் வாழ்ந்த நகருக்குள் ஏசுவும் அவரது சீடர்களும் நுழைந்ததுமே, லாசரஸின் சகோதரி ஏசுவிடம் வந்து, இரு நாட்கள் முன்னே அவர் வந்திருந்தால், தனது சகோதரன் இப்போது உயிரோடு இருந்திருப்பான் என்றாள். ஏசுபிரான் அவர்களிடம் நீங்கள் என்னை கிறிஸ்துவாய், ஆண்டவரின் புதல்வராய் நம்பியிருந்தால், தன்னை நம்பியவர்கள் நித்திய வாழ்வை அடைவர் என்றார். அவர்கள் தாங்கள் அவரை நம்பியதாய் ஒப்புக்கொண்டனர், ஆனால் இயேசு என்ன கூறினாரென்று தங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை என்றனர். ஏசுபிரான் அனைவரையும் லாசரஸை புதைத்த கல்லறைக்கு அழைத்துச்சென்றார். அங்கே அவர் கற்களை உருட்டும்படி கட்டளையிட்டார், சகோதரிகள் அவ்வாறு செய்யவேண்டாமென்று கெஞ்சினர். லாசரஸ் இறந்து நான்கு நாட்கள் ஆகிவிட்டது எனவே மோசமான வாசனை வரும் என்று கூறினார்! இயேசு அவர்களிடம், "நான் உங்களிடம் நீங்கள் நம்பினால், ஆண்டவரின் மகிமையை காணலாம் என்று கூறினேனல்லவா?" என்று கேட்டார். அவர் கற்களை எடுக்கச்செய்தார், பிறகு சத்தமாக, "லாசரஸ், வெளியே வாருங்கள்!" என்றழைத்தார். பின்னர் லாசரஸ் வெளியே எழுந்து நடந்துவந்தார், உயிருடன்! இயேசு தனது நண்பரை பிறப்பிலிருந்து எழுப்பிகொண்டுவந்தார்!



### விண்ணப்பம் (பாடம் 11)

மோசமான விஷயங்கள் நடந்தாலும் ஆண்டவர் என்னை நேசிக்கிறார்.

### மனப்பாட வசனம் (பாடம் 11)

"இயேசு அவளிடம், "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாய் இருக்கிறேன். என்னில் நம்பிக்கை வைக்கிற எவனும் தான் இறந்த பிறகும் எழுந்து வாழ்வு பெறுவான்." ஜான் 11:25

### வகுப்பீடு (பாடம் 11)

மோசமான ஏதாவது நடந்த உங்களுக்கு தெரிந்தவர்கள் யாருக்கேனும் நல்லதை செய்யுங்கள்.

## கடவுளுடைய டிஎன்ஏ (பாடம் 11)




இந்த பாடத்தில் ஆண்டவர் குறித்து நாம் என்ன கற்றுக்கொண்டோம்? உயிர்த்தெழுதல் உள்ளதென்று மக்கள் தெரிந்துகொள்ளவேண்டுமென்று ஆண்டவர் விரும்புகிறார்.



# வேடிக்கை நேரம்! (பாடம் 11)

## விளையாட்டு (பாடம் 11)

எழுத்துகள் பின்பிறமாக எழுதுதல்

ஆசிரியர் வகுப்பை ஜோடிகளாய் பிரிப்பார். ஒவ்வொரு குழுவிலிருந்தும் ஒருவர் வந்து ஆசிரியடரிடம் வந்து ரகசியமாய் எழுதப்பட்டிருக்கும் ஒரு எழுத்தை பார்த்துச்செல்வர். மாணவர்களுக்கு பேசவோ, எழுத்தை சொல்லவோ அல்லது தங்களது கூட்டாளிக்கு குறிப்புக்கள் தரவோ அனுமதியில்லை. மாணவர்கள் தங்களின் ஜோடியிடம் திரும்பியதும், ஆசிரியர் "செல்" என்று சொன்னதும், மாணவர் தான் கண்டா அந்த ரகசிய எழுத்தை தனது கூட்டளையின் முதுகில் விரலால் எழுதி காட்டுவார். அந்த கூட்டாளி எழுத்தை கண்டுபிடித்துவிட்டால், அவன்/அவள் கையை உயர்த்தி அது என்ன எழுத்தென்று தான் எண்ணுகிறார் என்று கூறவேண்டும். அந்த எழுத்து சரியென்றால், அந்த ஜோடிக்கு ஒரு புள்ளி கிடைக்கும். ஒருவேளை அந்த எழுத்து தவறென்றால், விளையாட்டு அடுத்த ஜோடி சரியாக கண்டறியபடும்வரை தொடரும். அதிக புள்ளிகள் பெற்ற குழு விளையாட்டில் வென்றதாய் கருதப்படும்.

பெரிய குழந்தைகளுக்கு: ஒற்றை எழுத்திற்கு பதிலாக, மூன்றெழுத்து வார்த்தைகளை எழுதவும்.

## விவாதம் (பாடம் 11)

(பழைய மாணவர்களுக்காக)

1. உங்கள் வாழ்வு எந்த வகையிலெல்லாம் நன்றாக இல்லாமல் போனது?

ஆண்டவர் அதை சரி செய்வார் என்று நீங்கள் எவ்வாறு எண்ணுகிறீர்கள்? உங்கள் மாணவர்கள் பகிர்ந்துகொள்வதை ஏற்றுக்கொள்ளுங்கள், எதுவும் தவறான பதில் இல்லை. அநீதியின்மை குறித்த கதைகள் எல்லோரிடமும் உண்டு. மாணவர்களை இரு பக்கமும் விவாதித்து, அவற்றிற்கிருக்கும் சமநிலையை புரிந்துகொள்ளச் செய்யுங்கள். மத்தேயு 19:29, இந்த பூமியில் தனக்காக தியாகம் செய்தவர்களுக்கு ஆண்டவர் எவ்வாறு திரும்ப கொடுத்துள்ளார் என்பதை காண்பிக்கிறது. மத்தேயு 20, பல்வேறு மணிநேர உழைப்பிற்கு அதே அளவு ஊதியம் பெறும் தொழிலாளிகளின் எதிர் பக்கத்தை எடுத்துரைக்கிறது. இந்த

நீதிக்கதைகளிலிருந்து தெளிவாக தெரிகிறது, வாழ்க்கை நன்றானதல்ல, அவ்வாறு அது இருக்கப்போவதுமில்லை. உங்களது மாணவர்களை இருபக்கம் குறித்தும் பேசம்செய்யுங்கள்.

2. நான் கடுமையாக பிரார்த்தித்தால் என்ன நடக்கும்?

ஆண்டவர் பொருள் வழங்கும் இயந்திரம் அல்ல. சில நேரங்களில் அவர் நமக்கு இல்லை அல்லது "இப்போது இல்லை" என்று கூறுவார். இப்போது கடினமாயினும், எப்போதுமே நமக்கு எது சிறந்தது என்றே ஆண்டவர் விரும்புவார். ஆண்டவர் நாம் பிரார்த்திக்கவேண்டும் என்று விரும்புகிறார், சில நேரங்களில் நாம் பிரார்த்திக்கும்போது அவர் தன் மனதை மாற்றிக்கொள்வார். ஆனால், எப்போதுமே நாம் நினைக்கும் பதில் நமக்கு கிடைக்காது.

3. ஏசுபிரானிடம் நீங்கள் எத்தகைய எதிர்பார்ப்புகள் கொண்டுளீர்கள்?

பல சமயங்களில், கிறிஸ்துவர்கள் பிரச்சனைகள் அற்ற வாழ்க்கையை எதிர்பார்க்கின்றனர், ஆண்டவர் தங்களுக்காக எளிதான வாழ்க்கையை கொடுப்பார் என்றும், தாம் எப்போதுமே ஆரோக்கியமாய் இருப்போமென்றும் எதிர்பார்க்கின்றனர். மன்னியுங்கள்; இயேசு உரைக்கிறார், வாழ்க்கை கிறிஸ்துவர்களுக்கு கடினமாய்தான் இருக்கும், எளிதாக அல்ல. இப்போது சாத்தான் சுதந்திரமாய் பூமியில் சுற்றித்திரிகிறது, நம்மை அழிக்க முயன்றுகொண்டிருக்கிறது. நமது எதிர்பார்ப்புகள் எவ்வாறு இருக்கவேண்டுமெனில், கடினமான நேரங்களில் சரியான முடிவுகளை எடுக்க ஏசுபிரான் நமக்கு உதவவேண்டும்; ஆனால் நம்மை கடினமாக காலங்களிலிருந்து தவிர்க்க வேண்டும் என்று இருக்கக்கூடாது.

## மாணவர் பக்கங்களுக்கான விடைகள் (பாடம் 11)









## லூக்காஸின் பரிசோதனை (பாடம் 11)

ஒவ்வொரு குழந்தையும் தங்களது நெற்றியில் ஒரு காகித தாளை ஒட்டிக்கொள்ளவேண்டும், அதில் மார்க்கர் கொண்டு தங்களது பெயரை எழுதவேண்டும். திரும்பி இருக்கும்போது எழுதுவது கடினமானதாய் இருக்கும். (விவரங்களுக்கு யூடியூப்பை காணவும்)
[https://www.facebook.com/childrenareimportant/videos/1292550470781333/](https://www.facebook.com/childrenareimportant/videos/1292550470781333/)

# --[ வழக்கு 12 ]—

### குறிப்புகள்! (பாடம் 12)

## குறிப்பு #1 தலைப்பு (பாடம் 12)

உறங்கிக்கொண்டிருக்கும் சதியின் வழக்கு

## குறிப்பு #2 நாடகம் (பாடம் 12)

கதைகூறுபவர்: இது கற்பனை கதையாகும் ஆனால் அப்பாவிகளை காக்கும் பொருட்டு சில பெயர்கள் மற்றும் இடங்கள் மாற்றப்பட்டுள்ளன.

காவலாளி: வணக்கம் அதிகாரி, இன்று நான் உங்களுக்கு எவ்வாறு உதவ வேண்டும்?

துப்பறிபவர்: மதிய வணக்கம் [பேட்ஜ்ஜை வெளியே எடுத்துக்காட்டி, மீண்டும் பாக்கட்டிற்குள் வைத்துக்கொள்கிறார்] நான் உங்களை சில கேள்விகள் கேட்கலாமா?

காவலாளி: ஆம், கண்டிப்பாக.

துப்பறிபவர்: இங்கே இன்று இந்த கட்டிடத்தில் இரண்டு கொலைக்குற்றங்கள் நடந்திருக்கிறதென்று எனக்கு புரிகிறது.

காவலாளி: இல்லை ஐயா, அவை தற்கொலைகள் என்றுதான் நான் கூறுவேன்.

துப்பறிபவர்: எது உங்களை அவை தற்கொலைகள் என்று உறுதியாக கூறவைக்கிறது? ஒரு குறிப்பு கூட இங்கிருப்பதாய் எனக்கு தெரியவில்லை. தற்கொலைக்கான எந்த தடயமும் இங்கு இருக்கவில்லை.

காவலாளி: அவர்கள் ஓர் மோசடிக்கு திட்டமிட்டு கொண்டிருந்தனர், அதுவே அவர்களுக்கு தங்களின் இறப்பு என்ற ஒரு கோரமான முடிவை தேடித்தந்துவிட்டது.

துப்பறிபவர்: நீங்கள் எங்கே இருந்தீர்கள்?

காவலாளி: எப்போதும்போல், நான் கதவருகில்தான் இருந்தேன்.

துப்பறிபவர்: அந்த நாடகத்தில் உங்களுக்கு ஏதேனும் கதாபாத்திரம் இருந்ததா?

காவலாளி: ஆம் ஐயா, நாந்தான் அந்த சடலங்களை அறையிலிருந்து வெளிய கொண்டுவந்து, பிரேத பரிசோதனை நிபுணரிடம் கொடுத்தேன், அவர் அவற்றை பிணக்கிடங்கிற்கு அனுப்பிவைத்தார்.

துப்பறிபவர்: அப்படியா. எனவே, நீங்கள் அந்த சடலங்களை பார்த்தீர்கள்?

காவலாளி: ஆம் ஆயா, அது ஒரு ஆண் மற்றும் பெண்.

துப்பறிபவர்: அவர்களை தூக்கும்போது, அவர்களிடம் ஏதேனும் வெட்டுகள் அல்லது சிராய்ப்புகள் இருந்தது உங்களுக்கு தெரிந்ததா?
காவலாளி: இல்லை ஐயா, இறந்த ஒன்றை தவிர அவர்கள் முற்றிலும் ஆரோக்கியமாய் தெரிந்தார்கள்.
துப்பறிபவர்: உள்ளே என்ன நடக்கிறதென்று வெளியே மட்டும் பார்த்துவிட்டு உங்களால் சொல்ல முடியாதல்லவா?
காவலாளி: நீங்கள் அவ்வாறு கூறுவது வேடிக்கையாய் இருக்கிறது, அதுதான் அவர்களும் நினைத்தார்கள். ஆனால் நான் உங்களுக்கு கூறுகிறேன், இந்த அறையில் பொய்யுரைக்கக்கூடிய பலரும் இல்லையே.
துப்பறிபவர்: என்ன சொன்னீர்கள்?
காவலாளி: இங்கே பொய்யர்கள் இல்லை என்றேன்.
துப்பறிபவர்: இல்லை அதற்குமுன்.
காவலாளி: அது, உள்ளே என்ன நடக்கிறதென்று யாராலும் பார்க்க முடியாது.


## 3 குறிப்பு #3 இலக்கு (பாடம் 12)

வகுப்பிற்கு இந்த ஸ்தூலமான பொருளை ஒரு குறிப்பாக கொண்டுவரவும்: நாணயங்கள்.

## 4 குறிப்பு #4 தொல்பொருளியல் (பாடம் 12)




ஜெருசலேமிலுள்ள ஆலயத்தில் இன்றிருக்கும் சாலமனின் மண்டபம் படமாக கொடுக்கப்பட்டுள்ளது. (ரகசியம்: அப்போஸ்தலர் 3ஆம் அத்தியாயத்தில், சாலமனின் மண்டபத்தில் பீட்டர் உபதேசித்துக்கொண்டிருக்கிறார். அப்போஸ்தலர் 5ஆம் அத்தியாயத்தில், அனானியஸ் மற்றும் சப்பீரா உடனான பீட்டரின் உடன்பாடுகள் குறித்த கதை இடம்பெற்றதுள்ளது நிகழ்ந்தது இந்த இடத்திலோ அல்லது இதற்கருகிலோதான்.)



## 5 குறிப்பு #5 பைபிள் காட்சி (பாடம் 12)

ரகசியம்: சொத்தை விற்ற பணம் (ஆனால் அனைத்து பணமுமல்ல) மற்றும் ஆண், பெண்ணின் உடல்களின் ஓவியங்கள். (முதலில் ஆண் சென்றான் பிறகு பெண் சென்றாள்.)

வழக்கு முடிந்தது வழக்கு முடிந்தது

# வழக்கு முடிந்தது! (பாடம் 12)

## பைபிள் கதை (பாடம் 12)

அனானியஸ் மற்றும் சப்பீரா

பைபிளில் இருந்து: அப்போஸ்தலர் 5: 1-11



ஏசுபிரானின் சீடர்கள் இயேசுவின் நற்குணங்கள் குறித்து பகிர்ந்துகொள்ளும்போது, மக்கள் ஒருவருக்கொருவர் உதவ ஈர்க்கப்பட்டனர். அவர்கள் ஏழைகளுக்கு உதவும்பொருட்டு, தங்களின் சொத்துகளைக்கூட விற்றனர். அனானியஸ்சும் சப்பீராவும் வேறில்லை, அவர்களும் உதவ விரும்பினர். அதிர்ஷ்டவசமாக, அனானியஸ்ஸிற்கும், சப்பீராவிற்கும் ஒரு துண்டு நிலம் இருந்தது, அவற்றை அவர்கள் விற்று அனைத்து பணத்தையும் நன்கொடையாக கொடுக்க எண்ணினர். அனானியஸ்சும் சப்பீராவும் தங்கள் நிலத்தை விற்ற உடனேயே, அதில் ஒரு பங்கு பணத்தை சீடர்களுக்கு கொடுத்துவிட்டு, அனைத்தையும் கொடுத்துவிட்டதுபோல் நடிக்க முடிவு செய்தனர். அனானியஸ், பீட்டரிடம் பணத்தை கொடுத்ததும், அவன் மகிழ்ந்துபோனான். ஆனால் தேவ ஆவியானது பீட்டருக்கு அனானியஸ் பொய் சொல்வதை தெரிவித்துவிட்டது. இதுதான் நிலத்தை விற்ற மொத்த பணமுமா என்று பீட்டர் அனானியஸ்ஸிடம் கேட்டான், அனானியஸ் ஆம் என்று பொய்யுரைத்தான். பீட்டர் அனானியஸ்ஸிடம், அவன் ஆண்டவருக்கு ஏதாவது நல்லது செய்ய முற்படும்போது எவ்வாறு சாத்தானை அவன் மனதுள் நிறைய விட்டான் என்று கேட்டான். அனானியஸ் மற்றும் சப்பீரா தங்கள் நிலத்தை விற்கவேண்டியதும் இல்லை, அனைத்து பணத்தையும் நன்கொடையாக கொடுக்கவேண்டியதும் இல்லை. ஆனால் அவர்கள் பொய் கூறினார்கள். பீட்டர் அவனை கண்டித்தும், அனானியஸ் இறந்து கீழே விழுந்தான்!

சில மணி நேரங்கள் கழித்து, சப்பீரா அவளது கணவரை காண வந்தாள். பீட்டர் அவளை கண்டதும், அனானியஸ் அனைத்து பணத்தையும் நன்கொடையாக கொடுத்துவிட்டானா என்று கேட்டான். அவளும் தனது கணவன்போல் பொய் உரைத்தாள். சப்பீராவும் ஆண்டவரிடம் பொய்யுரைத்தது கண்டு பீட்டர் அதிர்ந்துபோனான், அவன் சோகமாய் அவளிடம் எவ்வாறு அவள் ஆண்டவரை இவ்வாறு சோதித்து பார்க்கலாம் என்று கேட்டான். சப்பீரா உடனடியாக தன் கணவர் இறந்தது தெரிந்துகொண்டாள், அவனை புதைத்தவர்களை கண்டதும் அவள் மேலும் குழம்பி இறந்துபோனாள்.

## விண்ணப்பம் (பாடம் 12)

ஆண்டவர் நாம் எப்போதும் உண்மையே பேச வேண்டுமென்று விரும்புகிறார்.

## மனப்பாட வசனம் (பாடம் 12)

“ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதீர்கள். ஏனென்றால் முன்பு நீங்கள் செய்து வந்த பாவச் செயல்களோடு உங்கள் கடந்தகால பாவ வாழ்க்கையை விட்டிருக்கிறீர்கள்.” கொலோசெயர் 3: 9

## வகுப்பீடு (பாடம் 12)

நீங்கள் கூறிய பொய் குறித்து சிந்தித்து பாருங்கள். இனிமேலும் மற்றவரிடம் பொய்யுரைப்பதை தொடர்ந்து செய்யாது இருக்க தேர்வுசெய்துகொள்ளுங்கள். ஒரு சிறிய காகித துண்டை எடுத்துக்கொள்ளுங்கள், அதில் அந்த பொய்யை எழுதுங்கள். குறிப்பேட்டில் ஒரு பிரார்த்தனையை ஆண்டவருக்கு எழுதி, இனிமேலும் பொய்யுரைக்காமலிருக்க உதவும்படி ஆண்டவரிடம் கேட்டுக்கொள்ளுங்கள். அந்த காகித தாளை உங்கள் வீட்டிலிருந்து வெளிய எடுத்து, எரித்துவிடுங்கள்.

## கடவுளுடைய டிஎன்ஏ (பாடம் 12)




இந்த பாடத்தில் ஆண்டவர் குறித்து நாம் என்ன கற்றுக்கொண்டோம்? ஆண்டவருக்கு மக்களின் மனதும், குறிக்கோளும் தெரியும்.



# வேடிக்கை நேரம்! (பாடம் 12)

## விளையாட்டு (பாடம் 12)

யார் அவரது நாணயங்களை கொடுக்கவில்லை?

ஆசிரியர் குழந்தைகளை வட்டமாக அமர செய்வார், ஒரு குழந்தையை (பீட்டர்) தேர்வு செய்து நடுவில் அமரவைப்பார். ஒரு குழந்தையிடம் (அனானியஸ்) ஒரு நாணயம் கொடுக்கப்படும், அது கடிகார திசையில் குழந்தைகளின் பின்பக்கமாக கடத்தப்படும், மற்றொரு நாணயம் மற்றொரு குழந்தையிடம் (சப்பீரா) வழங்கப்படும் அதுவும் அதேபோல் கடிகார திசையில் குழந்தைகளின் பின்பக்கமாக கடத்தப்படும். குழந்தைகள் அனைவரும் நாணயத்தை கடத்திவிட்டதாக நடிக்கவேண்டும், அவர்களிடம் இருந்தாலும், இல்லாவிடினும் அவ்வாறு நடிக்கவேண்டும். ஆசிரியர் பீட்டரை அழைத்து அவன்/அவளது கண்களை மூடிக்கொண்டு, மாணவர்கள் நாணயங்களை "கடத்தும்போது" சுற்றசெய்யவேண்டும். ஆசிரியர் பீட்டரின் அவன்/அவளது கண்களை திறக்கச்சொல்லி, யாரிடம் நாணயம் இருக்கிறதென்று

ஊகிக்கசொல்லவேண்டும். இந்த விளையாட்டு பீட்டர் அனானியஸ் அல்லது சப்பீராவை (நாணயத்தை கொண்டுள்ள குழந்தையை) கண்டுபிடிக்கும்வரை தொடரும். நாணயத்துடன் கண்டுபிடிக்கப்பட்ட நபர் நடுவில் பீட்டராய் இருக்க செல்லவேண்டும், அவர் அடுத்த "பீட்டராய்" இருப்பார்.

## விவாதம் (பாடம் 12)

(பழைய மாணவர்களுக்காக)

1. ஏன் அனைவரும் சொர்க்கத்திற்கு செல்வதில்லை?

பைபிள் கூறுவதுபோல் அனைத்து மக்களும் பாவம் செய்து, நரகத்திற்கு செல்லும் தகுதியுடையவர்களாய் இருக்கிறார்கள். ஆண்டவருக்கு இயந்திர மனிதர்கள் தேவையில்லாததால், அவர் நம்மை தேர்வின்றி உருவாக்கியுள்ளார். ஆண்டவர் அனைவரையும் காக்க விரும்புகிறார், ஆனால் சில மனிதர்கள் அவர்களின் வழியை அவர்களே தேர்வுசெய்துகொண்டு, ஆண்டவரையும் அல்லது சொர்க்கத்தையும் ஒப்புக்கொள்ளவதில்லை.


2. ஏன் போவதற்கு போதுமான இடமில்லை? (மற்றவருடன் பகிர்ந்து கொள்ளுதல்)


முதலில், "போதும்" என்பதுதான் நகரும் குறிக்கோள், அது ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு ஆண்டும் மாறிக்கொண்டிருக்கிறது. இரண்டாவதாக, ஏழைகள் என்றும் நம்முடன் இருப்பர் என்று ஏசுபிரான் கூறுகிறார், மூன்றாவதாக, கொடுப்பது நமக்கு நல்லது.


3. எது "வெண்மை பொய்" அல்லது சிறிய பாவம் எனப்படுகிறது?

குறிக்கோள்கள் முக்கியமானவை. நீங்கள் மற்றவரின் உணர்வுகளை காக்க அல்லது நீங்கள் உங்களுக்காக பணத்தை காக்க பொய்யுரைக்கிறீர்களா? ஆண்டவர் ஏமாற்றுவதை விரும்புவதில்லை. பாதி பணத்தை கொடுத்து பொய்யுரைத்ததைவிட, அவர்கள் நிலத்தை விற்காமலேயே இருந்திருக்கலாம்.

## மாணவர் பக்கங்களுக்கான விடைகள் (பாடம் 12)



## லுக்காஸின் பரிசோதனை (பாடம் 12)

ஒவ்வொரு மாணவரையும் மேசைமேல் ஒரு காகித தாளில் ஒரு குறியை போடச்செய்யவும், பின் அந்த மாணவரை நகர்த்திவிட்டு மீண்டும் ஒரு கண்ணை மூடிக்கொண்டு அந்த தாளிலுள்ள அதே குறியை எடுக்கச்செய்யவும். (விவரங்களுக்கு யூடியூப்பை காணவும்)
https://www.facebook.com/childrenareimportant/videos/1292637964105917/

# --[ வழக்கு 13 ]—

**குறிப்புகள்! (பாடம் 13)**

## குறிப்பு #1 தலைப்பு (பாடம் 13)

வினோதமான கொடுங்கனவுகள் வழக்கு

## குறிப்பு #2 நாடகம் (பாடம் 13)

கதைகூறுபவர்: இது கற்பனை கதையாகும் ஆனால் அப்பாவிகளை காக்கும் பொருட்டு சில பெயர்கள் மற்றும் இடங்கள் மாற்றப்பட்டுள்ளன.

நாடோடி: என்ன தேடிக்கொண்டிருக்கிறீர்கள்?

தனியார் துப்பறிவாளர்: இந்த உயரமுள்ள ஒரு இளைஞனை காணவில்லை, அதுகுறித்து விசாரித்துக்கொண்டிருக்கிறேன். அவன் ஒரு தனித்துவமான ஜாக்கெட் அணிந்திருந்தான்.

நாடோடி: ஆமாம், நான் நான் அவனை பார்த்தேன், சில நாட்களுக்கு முன் அவன் இங்கே வந்தான்.

தனியார் துப்பறிவாளர்: அவன் எங்கே போகிறான் என்று உங்களுக்கு தெரியுமா?

நாடோடி: அவன் தோதான் போகிறான் என்று நினைக்கிறேன்.

தனியார் துப்பறிவாளர்: ஏன் தோதான்?

நாடோடி: நான் அவனது சகோதரர்கள் அங்கே போவது குறித்து பேசிக்கொண்டிருப்பதை கேட்டேன், எனவே அவன் அவர்களை தேடி வந்தபோது நான் அவனிடம் இதை கூறினேன்.

தனியார் துப்பறிவாளர்: நீங்கள் வேறு ஏதாவது கேட்பீர்களா?

நாடோடி: ஆம், ஒருவேளை நான் அவர்களது சகோதரனாய் இருந்தால், நான் அவர்கள் அருகில்கூட செல்லமாட்டேன். அவர்கள் அவன்மேல் அத்தனை கோபமாய் இருந்தார்கள்.

தனியார் துப்பறிவாளர்: சுவாரஸ்யமாய் இருக்கிறதே, அது ஏன் என்று கேட்கமுடிந்ததா?


நாடோடி: வெளிப்படையாகவே, அவன் அவர்களது மோசமான நடத்தைக்குறித்து அவர்களின் தந்தையிடம் கூறிவிட்டான்போலும், அதற்குப்பின் அவர்கள் வேறுஎதையோ மிகவும் மெதுவாக பேசினார்கள், என்னால் எதுவும் கேட்கமுடியவில்லை.

தனியார் துப்பறிவாளர்: உங்களுக்கு கேட்கவில்லையா அல்லது நீங்கள் கேட்க விரும்பவில்லையா?
நாடோடி: எனக்கு கொஞ்சம் கேட்டது ஆனால் அவை எனக்கு சரியாக புரியவில்லை, அனைத்து சகோதரர்களும் அதுகுறித்து ஆர்வமாய் இருந்தது உறுதி. டான் தான் மிகவும் முதன்மையில் இருந்தான், ஆனால் பென், அதுதான் அவன் பெயர் என்று நினைக்கிறேன், அவன் இன்னும் ஆர்வமாய் இருந்தான்.
தனியார் துப்பறிவாளர்: நீங்கள் அவனிடம் அவனது சகோதரர்கள் செல்லுமிடம் குறித்து கூறினீர்கள்?
நாடோடி: நான் நினைத்தேன், அவன் தோதான் போய் சேரும்போது, அவர்கள் சமாதானம் ஆகியிருப்பார்கள் எனவே எதுவும் ஆகாது என்றிருந்தேன்.
தனியார் துப்பறிவாளர்: எனக்கு அதுகுறித்து உறுதியாக தெரியவில்லை.
நாடோடி: ஏன் ஏதாவது நடந்துவிட்டதா?
தனியார் துப்பறிவாளர்: ஆம், அவனை காணவில்லை இந்நேரத்திற்கு இறந்திருப்பான் என்று ஊகிக்கத்தோன்றுகிறது. அவனது தந்தை அவன் தொலைந்ததிலிருந்து முடிந்தால் இப்போது அவன் இருந்தால் கண்டுபிடிக்கும்படி என்னை நியமித்துள்ளார்.
நாடோடி: ஐயோ, பாவம், அவன் மிகவும் இழந்தவனாய் தோன்றினான். நான் அவனுக்கு உதவத்தான் நினைத்தேன். எனக்கிது தெரியாது!




## 3 குறிப்பு #3 இலக்கு (பாடம் 13)

வகுப்பிற்கு இந்த ஸ்தூலமான பொருளை ஒரு குறிப்பாக கொண்டுவரவும்: தலையணை.



## 4 குறிப்பு #4 தொல்பொருளியல் (பாடம் 13)

கோதுமையை கையால் விளைவிக்கும் இடங்களும் இவ்வுலகில் உள்ளது. (ரகசியம்: இவ்வாறுதான் ஜோசப்பிற்கு அவனது கனவில் அவனை தலைவணங்கிய கோதுமை அரிக்கட்டுகள் இருந்திருக்கும்.)

## 5 குறிப்பு #5 பைபிள் காட்சி (பாடம் 13)

ரகசியம்: ஜோசப்பின் கனவு; அவனது தந்தைக்கு சூரியன், தாய்க்கு சந்திரன் மற்றும் சகோதரர்களுக்கு 10 நட்சத்திரங்கள்.




# வழக்கு முடிந்தது! (பாடம் 13)

## பைபிள் கதை (பாடம் 13)

ஜோசப்பும் அவன் கனவுகளும்

பைபிளில் இருந்து: ஆதியாகமம் 37:1–11



ஜோசப், ஜேக்கப் என்னும் ஆட்டிடையன் ஒருவனது இளைய மகன். அவனது சகோதரர்கள் அவனை வெறுத்தனர் ஏனெனில், அவர்களது தந்தை அவனை மற்ற எல்லோரையும்விட அதிகம் நேசித்தார். ஜோசப் பிறக்கும்போது ஜேக்கப்பிற்கு வயதாகிவிட்டது, அவர் ஜோசப்பை ஒரு சிறப்பான வரமாய் எண்ணினார், எனவே அவன் மீது அதிக அன்பு கொண்டிருந்தார். ஜோசப், ஜேக்கப்பின் விருப்பமான மனைவிக்கு பிறந்தவன். ஜேக்கப், ஜோசப்பிற்கு ஒரு விலையுயர்ந்த, பல வண்ணங்கள்கொண்ட மேலாடையொன்றை செய்தளித்தார், அது அவனது சகோதரர்களை மிகவும் வருத்தத்திற்குள்ளாகியது, எனவே அவர்கள் அவனிடம் ஒரு அனுசரணையான வார்த்தைகூட பேசமாட்டார்கள். ஆண்டவர் ஜோசப்பிற்கு இரு வேறு கனவுகளை வழங்கினார். ஒன்று வயல்வெளியில் நடந்தது, அங்கே அவனும் அவனது சகோதரர்களும் தானியங்களை மூட்டை கட்டிக்கொண்டிருந்தனர். திடீரென்று அவனது மூட்டைமட்டும் நேராய் எழுந்தது, அவனது சகோதரர்களின் மூட்டைகள் அவனுடையதற்கு தலைவணங்கின. இரண்டாமாவது கனவு, சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்கள் குறித்தது. அவனது தந்தை சூரியன், தாய் சந்திரன், சகோதரர்கள் நட்சத்திரங்கள், அவர்கள் அனைவரும் அவன்முன் தலைவணங்கினர். அவன் இந்த கனவுகளை தனது சகோதரர்கள் மற்றும் தந்தையிடம் கூற, அவர்கள் கோபமடைந்தார்கள். அவனது சகோதரர்கள் தாங்கள் வெறுக்கும் ஒரு சகோதரனுக்கு ஒருநாள் தாங்கள் தலைவணங்குவோம் என்பதை நம்ப மறுத்தனர். ஜேக்கப் தனது அன்பு மகனை கண்டித்தார், மேலும் அவரும், அவரது மனைவியும் அவனுக்கு ஒருநாள் தலைவணங்குவார்கள் எனபதை நம்ப விரும்பவில்லை. ஆனால் ஜேக்கப் இந்த நினைவுகளை தனது மனதில் தேக்கிவைத்துக்கொண்டார். பல ஆண்டுகள் கழித்து, அனைத்து கனவுகளும் உண்மையானது, ஆண்டவர் ஜோசப்பை எகிப்தின் தலைவன் ஆக்கி, பல மக்களை கொடும் பஞ்சத்திலிருந்து காக்கச்செய்தார்.

## விண்ணப்பம் (பாடம் 13)

ஆண்டவர் பல்வேறு பரிசுகளை என் நண்பர்கள் மற்றும் குடும்பத்தார்க்கு வழங்கியுள்ளார் என்று எனக்கு தெரியும்.

### மனப்பாட வசனம் (பாடம் 13)

“சரீரத்தின் உறுப்புகள் எல்லாம் ஒரேவகை உறுப்புகளாக இருந்தால் அப்போது சரீரம் இருப்பதில்லை. தேவன் உண்மையாகவே தாம் விரும்பியபடி சரீரத்தின் உறுப்புகளை சரீரத்தில் அமைத்தார். சரீரத்தில் ஒவ்வொரு உறுப்புக்கும் ஓர் இடத்தை அமைத்தார்.” 1 கொரிந்தியர் 12: 18-19

### வகுப்பீடு (பாடம் 13)

உங்களுக்கு தெரிந்த மூவர் குறித்து ஒரு பட்டியலை தயாரிக்கவும், ஆண்டவர் எவ்வாறு உங்களிடமிருந்து வேறுபடக்கூடிய திறமைகள், ஆற்றல்கள், அல்லது வலிமையை அவர்களுக்கு வழங்கியுள்ளார் என்று கவனியுங்கள். அவர்களின் பரிசுகள் குறித்து நீங்கள் பொறாமை கொள்ளாதவண்ணம் இருக்கச்செய்யும்படி ஆண்டவரிடம் பிரார்த்தித்து கேளுங்கள்.

### கடவுளுடைய டினஏ (பாடம் 13)




இந்த பாடத்தில் ஆண்டவர் குறித்து நாம் என்ன கற்றுக்கொண்டோம்? சில நேரங்களில் ஆண்டவர் தனது வருங்கால திட்டங்களை மக்களுக்கு காட்டுவார்.



## வேடிக்கை நேரம்! (பாடம் 13)

### விளையாட்டு (பாடம் 13)

கனவுகள் விளையாட்டு

ஆசிரியர் வகுப்பை இரு பிரிவுகளை பிரித்து இந்த விளையாட்டை துவங்குவார்: தானிய அரிக்கட்டுகள் மற்றும் நட்சத்திரங்கள். வகுப்பறையின் முடிவில் ஆசிரியர் ஒரு பாதுகாப்பு கோடு வரைவார், அங்குவரை மாணவர்கள் மாட்டிக்கொள்ளாமல் ஓடலாம். ஆசிரியர் கதைகளை சொல்லுவார், அணிகள் தங்களின் வார்த்தைகளை (தானியங்கள் மற்றும் நட்சத்திரங்கள்) கேட்டவுடன், பாதுகாப்பு வளையத்திற்கு ஓடிவிடுவர். மற்ற அணியானது அவர்கள் பாதுகாப்பு வளையத்திற்குள் செல்லுவதற்குள் அவர்களை பிடிக்க முயலுவர். பிடிபட்ட மாணவர், அவன்/அவளை பிடித்த அணியுடன் சேர்ந்துகொள்ளவேண்டும். 15 நிமிடங்களின் முடிவில் எந்த அணியில் அதிக மாணவர்கள் இருக்கிறார்களோ அவர்களே விளையாட்டில் வென்றவர்கள். தோற்ற அணி பைபிள் கதையை நினைவுபடுத்துவதாக, வென்ற அணியிடம் தலைவணங்கவேண்டும்.

## விவாதம் (பாடம் 13)

(பழைய மாணவர்களுக்காக)

1. ஆண்டவர் குறித்து நான் மற்றவரிடம் கூறவேண்டுமா?

ஆண்டவர் குறித்து மற்றவரிடம் தெரிவிக்க கிறிஸ்துவர்கள் தயாராய் இருக்கவேண்டும். 1 பீட்டர் 3:15, "உங்களுள் இருக்கும் நம்பிக்கைக்கு காரணமென்ன என்று கேட்கும் ஒவ்வொருவருக்கும் பாதுகாப்பு கொடுக்க தயாராய் இருங்கள்" என்கிறது. மத்தேயு 28:19-20, உலகனைத்தும் சென்று ஆண்டவர் குறித்து எடுத்துரையுங்கள். நாம் இதை தனியாக செய்யவேண்டியதில்லை, ஆண்டவர் உங்களக்கு உதவுவார் என்கிறது. அப்போஸ்தலர் 1: 8, புனித ஆவியானது, அவரது சாட்சியாக சக்திவழங்கும் என்கிறது. சிலர் மற்றவரிடம் கூறுவர் ஏனெனில், அது அவர்களது சிறப்பான பரிசு மற்றும் அழைப்பு (எபே. 4:11, பிரச்சாரர்களின் பரிசு மற்றும் அழைப்பு குறித்து பட்டியலிடுகிறது.) மாணவர்கள் பள்ளிகள் மற்றும் சுற்றுப்புறத்தில், பிரச்சாரர்களாக பொறுப்பை ஏற்கதேவையில்லை, பிரச்சாரர்களாக இருக்க ஆண்டவரால் பரிசளிக்கப்படாதபோது, ஒவ்வொரு நபரிடமும் ஆண்டவர் குறித்து சந்திப்பதற்கு கூறத்தேவையில்லை. எப்படியோ, நாம் அனைவரும் ஆண்டவர் குறித்து மற்றவரிடம் கூற ஆர்வமாய் இருக்கவேண்டும்.

2. உங்கள் நண்பர்கள் உங்களுடன் பேசும் முறைகள் என்ன? ஆண்டவரிடமிருந்து வரும் "ட்வீட்" எவ்வாறு இருக்கும்?

நாம் நண்பர்களுடன், முகநூல், அரட்டை, ட்வீட் ட்விட்டர், கைபேசி அழைப்புகள், நேருக்கு நேர், மேலும்பல போன்றவற்றில் தொடர்பு கொள்கிறோம். உங்களுக்கான ஆண்டவரின் செய்திகள் பொதுவானதா அல்லது தனியான பார்வைக்கா? சில சமயங்களில், ஆண்டவர் நம்மிடம் சில இடங்களுக்கு "செல்" என்பார், அல்லது "தங்கு" மற்றும் உதவு என்பார். அவர் ஒரே ஒரு வார்த்தை மூலமாகத்தான் நமக்கு திசைகாட்டுவார். அவரிடமிருந்து பெறப்படும் மொத்த "ட்வீட்"டும் இன்னும் நமக்கு புரியவில்லையெனினும், நாம் அவருக்கு கீழ்ப்படியலாம்.


3. கனவுகள் எத்தகைய நம்பகத்தன்மையுடையது? மக்கள் ஏன் அதிர்ஷ்டம் கூறுபவர்களிடம் தங்களது எதிர்காலம் குறித்து கேட்டறிய பணம் செலவழிக்கிறார்கள்?


ஒவ்வொரு காலையும் குழந்தைகள் தங்களது கனவுகள் குறித்து பேச விரும்புவர். அவர்களிடம் கொஞ்ச நேரம் பகிருங்கள், அவர்களது கனவுகள் அர்த்தமற்றவை என்று அவர்கள் புரிந்துகொள்வார்கள், அவை பொதுவாக இயலாததாகும், தொலைக்காட்சி நிகழ்ச்சியிலிருந்து ஒரு பகுதி பரிந்துரைப்பு அல்லது முந்தைய இரவு அவர்கள் கண்ட திரைப்படம் என்று.

கடவுளால் எப்போதாவது கனவுகள் பிரயோகிக்கப்பட்டாலும், அது மிகவும் அரிதான ஒன்றாகும். சில நேரங்களில் ஆண்டவர் நம்முடன் கனவுகள் மூலம் பேசுவார், ஆனால் பெரும்பாலும் அவை நம்மை தவறான பாதையில் இட்டுச்சென்றிடக்கூடும். மேலும், அதிர்ஷ்டம் கூறுபவர்களை நம்பக்கூடாது. உபா. 18: 10-12, "இந்த செயல்களை செய்யும் அனைவரும் ஆண்டவருக்கு அருவறுப்பானவர்கள்..."

என்கிறது. ஆண்டவர் தனது மக்களிடம் அதிர்ஷ்டம் கூறுபவர்கள் குறித்து எச்சரிக்கை செய்கிறார் ஏனெனில், மக்கள் தங்களது வருங்காலம் குறித்து ஆண்டவரை நம்பாமல், என்ன நடக்கவிருக்கிறதென்பதை முன்னரே அறிய விழைகின்றனர். அவர் மக்கள் தன்னை நம்பவேண்டும் என்று விரும்புகிறார்!

## மாணவர் பக்கங்களுக்கான விடைகள் (பாடம் 13)





## லுக்காஸின் பரிசோதனை

## (பாடம் 13)

ஒரு பையை காலால் தயங்கியபடி, கடிகார திசையில் சுழற்றியபடி, ஒவ்வொரு மாணவரையும் தங்களின் பெயரை ஒரு காகித தாளில் எழுத செய்யுங்கள். (விவரங்களுக்கு யூடியூப்பை காணவும்)

https://www.facebook.com/childrenareimportant/videos/1293723920663988/